# தித்திக்கும் அறிவமுதம்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஈமான் என்பது என்ன? | 17 |
| 2. | அல்லாஹ் அறிவுறுத்தும் அமுத மொழிகள் பன்னிரெண்டு | 31 |
| 3. | ஹதீஸ் குத்ஸியில் இறைவன் கூறுவது | 34 |
| 4. | அல்லாஹ் எப்படியும் இரணமளிப்பான் | 37 |
| 5. | அறிவொளிகள் | 41 |
| 6. | பணிவு கொள்ளுங்கள் | 44 |
| 7. | பெருமை கொள்ளாதீர்கள் | 47 |
| 8. | பொறுமை கொள்ளுங்கள் | 54 |
| 9. | மௌனம் கொள்ளுங்கள் | 58 |
| 10. | அதிகமாக சிரிப்பதின் அபாயங்கள | 62 |
| 11. | நாயகம் (ஸல்) கூறிய நல்லுரைகள் | 64 |
| 12. | என் உம்மத்தில் இப்படி ஒரு காலம் வரும் | 67 |
| 13. | உலக மாயை | 70 |
| 14. | தீயோரின் இலட்சணங்கள் | 87 |
| 15. | ஷைத்தானின் விரோதிகளும் நண்பர்களும் | 9. |
| 16. | உங்களில் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக்கொள்ளுங்கள் | 93 |
| 17. | பயபக்தி | 96 |
| 18. | முப்பெரும் நபிமார்களின் வரலாறுகள் தரும் படிப்பினை | 115 |
| 19. | இறைவனை திக்ரு செய்யுங்கள் | 122 |
| 20. | தர்மம் செய்யுங்கள் | 125 |
| 21. | மது அருந்தாதீர்கள் | 147 |
| 22. | அந்நிய பெண்களை ஆசிக்காதீர்கள் | 155 |
| 23. | புறம் பேசாதீர்கள் | 163 |
| 24. | வட்டி வாங்காதீர்கள் | 173 |
| 25. | வியாதியஸ்தர்களை மினவுங்கள் (நலம் விசாரியுங்கள்) | 179 |
| 26. | துஆவில் ஓர்மை வேண்டும் | 181 |
| 27. | மன்னிப்புத் தேடுங்கள் | 190 |
| 28. | பன்னிரெண்டு வகையினரின் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும். | 198 |
| 29. | பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் நேரங்கள் | 199 |
| 30. | ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற திருமக்கா சென்ற ஹாஜிகளின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் இடங்கள் | 200 |
| 31. | மண்ணறையின் எச்சரிக்கை | 201 |
| 32. | மண்ணறையின் நிலைமைகள் | 205 |
| 33. | கியாமத்து நாளில் என் உம்மத்தோர் பன்னிரெண்டு கூட்டமாக எழுப்பப்படுவார்கள் | 207 |
| 34. | என் உம்மத்தில் பத்து வகையினரை கியாமத்து நாளில் இறைவன் கோபிக்கிறான் | 211 |

35. கணவன், மணைவிக்கு செய்ய வேண்டிய கடமைகள் 212

36. மனைவி, கணவனுக்கு செய்யவேண்டிய கடமைகள் 219

37. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் 228

38. பிள்ளைகள் பெற்றோர்களுக்கு செய்யும் கடமைகளும், பெற்றோர்களை நோவினை செய்வதால்ஏற்படும் தண்டனையும் 232

39. திருக்குர் ஆன் ஓதுங்கள் 238

40. நபி (ஸல்) அவர்கள் பேரில் ஸலவாத்துக் கூறுங்கள் 242

41. எட்டு வகை சுவர்க்கத்தில் எட்டு வகையினர் புகுவர் 244

42. ஏழுவகை நரகத்தில் ஏழுவகையினர் புகுவார்கள் 247



# ஈமான் என்பது யாது?

நபி (ஸல்) அவாகள் கூறுகிறார்கள்:

ஈமான் என்பது (இறைவனை) உள்ளத்தால் உறுதி கொள்வதும் நாவால் திருகலிமாவை மொழிவதும் பர்ளான செயல்களை ஒழுங்காகச் செய்வதுமேயாகும்.

ஈமான் நிர்வாணமானதாகவும் அதன் ஆடை இறை பக்தியாகவும் அதன் அழகு தீய செயல்களைச் செய்வதில் வெட்கங்கொண்டு (அதைச் செய்யாமல்) விட்டு விடுவதாகவும், அதன் சக்தி மார்க்கக் கல்வியாகவும் இருக்கிறது.

நீ விரும்புவதையே உன் சகோதரனுக்கும் விரும்பு வது ஈமானின் உச்ச நிலையாகும்.

ஈமான் என்பது முஃமின்களின் அகத்தில் பதிந் திருக்கும் புதை பொருளாகவும், இஸ்லாம் என்பது முஃமின்களின் புறத்தே பிரதிபலிக்கின்ற செயல்முறை களாகவும் இருக்கிறது.

ஈமான் என்பது பர்ளான கருமங்கங்களைச் சரிவரச் செய்வதால் நிறைவுபெறும். பர்ளான கருமங்களைவிடு வதால் குறைவுபெறும். பர்ளான செயல்களை நிறைவு படுத்துவதால் சொர்க்கமும் குறைவு செய்வதால் நரகமும் கிடைப்பது திண்ணம்.

ஈமானின் அஸ்திவாரம் "லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி" என்ற கலிமாவாக வும், அதன் முடிவு தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்ஜு, பரிசுத்தம் ஆகியவைகளாகவும் அமைந்துள்ளன. இவை கள் எந்த அளவுக்குப் பேணி பாதுகாக்கப்படுகிறதோ

அந்த அளவுக்கு மனிதனின் அந்தஸ்தும் பாதுகாக்கப் படுகிறது.

இறைவன் ஈமானை ஈகையைக் கொண்டும் தீமைகள் செய்ய வெட்கிப்பதைக் கொண்டும் (சிறப்பாக) அமைத்தான். குப்ரை, இறைவழிக்கேட்டை கொண்டும் தீமைகளை செய்வதில் துணிவு கொள்வதைக் கொண்டும் அமைத்தான்.

அன்பர்களே மேல்கண்ட ஹதீஸ்களைப் போல் இன்னும் பல ஹதீஸ்களின் வாயிலாக நாயகம் (ஸல்) அவர்கள் ஈமானைப்பற்றி பலவாறு விளக்கிக் கூறியுள் ளார்கள். நம் உள்ளத்திலே ஈமான் உறுதிப்படு மாயின் அது சொல்லின் வண்ணத்திலே ஒளிரும். சொல்லின் வண்ணத்திலே ஒளிருமாயின் அது செயலின் திண்ணத்திலே மிளிரும். அப்பேர்ப்பட்டவர்களின் ஈமானை அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த சக்தியாலும் அழிக்கமுடியாது, அணுவளவும் அசைக்கக்கூட முடி யாது. காரணம் அல்லாஹ்வே அவர்களின் பேச்சாகவும், மூச்சாகவும், பார்வையாகவும், செயலாகவும் ஆகிவிடு கிறான். அப்படி ஆகிவிடும்போது அவனை எதிர்ப் பதற்கு எத்தகைய வல்லவனுக்கும் திறனில்லை. ஈமான் என்பது விலை மதிக்கமுடியாதது. எந்த நெஞ்சத்தின் மஞ்சத்தில் அது கொஞ்சிக் குலவுகிறதோ அந்த நெஞ்சம் மாசுமருவற்ற மாணிக்கமாக ஒளிரும், அந்த நெஞ்சம் இறைவனைத் தவிர யாருக்கும் அஞ்சாது. யாரிடமும் கெஞ்சாது. அந்த நெஞ்சம் பஞ்சமான நேரத்திலும் இறைவன் ஒருவனையே தஞ்சமாகக் கொண்டு மிளிரும். கல் மனம் கொண்ட கஞ்சனும், சூதுவாது நிறைந்த வஞ்சகனும்கூட ஈமான் கொண்ட சீமானின் தியாகத்தை கண்டு கலங்கிக் கதறிய காட்சிகளைக் கடந்த காலச் சரிதைகளில் காணும்போது, உருகுது நெஞ்சம், பெருகுது கண்ணீர். ஈடு இணையற்ற இந்த ஈமானை



அடைவறதக்காக ரசூல்மார்கள், நபிமார்கள், ஸஹா பாக்கள், நாதாக்கள் அனைவருமே அல்லும் பகலும் அயராது பாடுபட்டார்கள். பசித்திருந்து தனித்திருந்து, விழித்திருந்து, தூய நாயனை துதித்திருந்து உயர்ந்த ஈமான் உதித்திடாதா? என்பதற்காக அந்த உத்தம உள்ளங்கள் நெருப்பிலிட்ட மெழுகுபோல் நெக்குருகி நின்ற தன்மைகளைக் கேட்டுவிட்டுக் கேவிக் கேவி அழக்கூட நமக்குச் சக்தி இருக்குமோ என்னவோ? நபி அய்யூபு (அலை) அவர்களின் உடலெல்லாம் கொப்பளங்கள் நிறைந்திருந்தன. அந்தக் கொப்பளங்கள் உடைந்து உடலெங்கும் சீழும், ஜலமும் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. அந்த சீழின் ஜலத்திலே புழுக்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. அந்த அல்லாஹ்வின் அடியவரது அழகுடலின் அங்கங்கள் அனைத்தையும் உண்டு சுவைத்து உல்லாச வாழ்வு நடத்திக் கொண்டிருந்தன. அந்த சாம்ராஜ்ய சக்கர வர்த்தியின் சிவந்த மேனியிலுள்ள சீழைச் சுவைத்து சதையைத் துளைத்து துள்ளி விளையாடிக்கொண் டிருந்தன. கட்டுடல் கரைந்தபோதும் ஹக்கன் மேல் கொண்ட காதல் குறையாத அந்தக் கண்ணிய சீலரைக் காண சகியாத மாந்தர், மனித சஞ்சாரமற்ற கானகத்திற்கே அனுப்பி விட்டார்கள். அந்த நிலையிலும் அந்த அல்லாஹ்வின் அன்பு நேசரின் நாவிலிருந்து சிதறிய முத்துக்கள் என்ன தெரியுமா? இறைவா! என் அங்கங்கள் அனைத்தையும் இந்தப் புழுக்கள் பங்கப்படுத்தினாலும் பாதகமில்லை. ஆனால், உன்னையே நினைப் பதில் உவகை கொள்ளும் என் உள்ளத்தையும் உன் நாமத்தையே துதிப்பதில் இன்பம் கொள்ளும் என் நாவையும் இவை துளைத்துவிடாதபடி பார்த்துக் கொள்வாயாக இறைவா! என்றே புலம்பின. அன்பனே! இகத்திலே இன்சான் அனுபவிக்கப் பயப்படும் இத்தனை இன்னல்களில்

இழைந்தபோதும் அந்த இறைநேசர் ஏன் இப்படி இயம்பினார் தெரியுமா....?

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தன் செல்வ மகனை முதுமைக் காலத்திலே- குலம் தழைக்கப் பிறந்த அந்தக் கொள்கைச் சிங்கத்தை, தள்ளாத வயதிலே பொன்னான மலராய், கண்ணான மணியாய், எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிப் பெற்றெடுத்த பண்ணான ஒலியாய், குணக்குன்றாய், குவலயத்திலே பிறந்த அந்தக் குன்றின் மேலிட்ட தீபத்தை, இறையருளால் பிறந்த இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ் அறுத்துப் பலி இடுமாறு ஆணையிட்டதும் அப்பழுக்கின்றி அதனை நிறைவேற்றிடத் துணிந்தார்கள். அப்படிப்பட்ட அவ்வுத்தமர் கை கால்கள் கட்டப்பட்டு நெருப்புக் குண்டத்திலே தூக்கி எறியப்பட்டார்கள். விண்ணும், மண்ணும், மரமும், மலையும், கல்லும், கடலும், புல்லும் பூண்டும் அக்காட்சியைக் கண்டு கசிந்துருகி இறைவா! உன் பூமியில் உன்னை வணங்குவதற்காகப் படைக்கப் பட்ட உனதடியவரின் நிலையைப் பார்! காத்தருள்வாய் காத்தருள்வாய் எனக் கதறின. அல்லாஹ்வின் தூதருக் கேற்பட்ட ஆபத்தை அறிந்த மலக்குகள் ஆவேசத்தோடு அவரை அணுகி நான் உதவி செய்யட்டுமா? நான் உதவி செய்யட்டுமா? என முண்டியடித்துக்கொண்டு கேட்ட னர். அங்கிருந்தோர் அனைவரும் அச்சத்தின் உச்சத்திற்கே சென்று கொண்டிருந்த அந்த வேளையிலும், அழைக்காமலேயே மலக்குகள் உதவி கொடுத்து உழைக்க ஓடி வந்தும் மலக்குகளிடம் அந்த அல்லாஹ்வின் வல்ல தூதர் சொல்லிய ஜோதிச் சொற்கள் என்ன தெரியுமா....?

"நன்றி, எனக்கு உங்கள் (மலக்குகள்) உதவிவேண் டாம். எனக்கு என் இறைவனே போதுமானவன். அவனே எல்லாம் அறிந்தவன், அவனே மிகச் சிறந்த செயலாளன்" என்றுரைத்தனர். ஆஹா, மணியான வாசகங்கள், துணிவான சொற்கள், அணியான பதங்கள், கனியான தொடர்கள், நெருப்புக் குண்டத்தில் வீழ்கின்ற வேளை யில் ஆள்கின்ற இறைவனின் தாழ் பணிந்து திண்மையு டன் நடந்து கொண்ட தன்மை நபியின் உண்மை உரைகள் என்றென்றும் மறக்க முடியாதவை; யாராலும் மறுக்க முடியாதவை.

அன்பனே! இப்றாஹீம் (அலை) அவர்கள் நெருப்புக் குண்டத்திலே எறியப்படப்போகும் இறுதிக் கட்டத் திலும்கூட நாமெல்லாம் உருகி உணர்ச்சி வயப்படும் உன்னத உரைகளை உரைத்தாரே! ஏன் தெரியுமா?

"எந்த நபியைப் படைக்கவில்லையென்றால் இந்த உலகமே படைக்கப்படப் போவதில்லை" என்று இறை வன் கூறுகிறானோ அந்த நபி (ஸல்) அவர்கள் பல நாட்களாக பசியோடும் பட்டினியோடும் வாழ்ந்திருக் கிறார்கள். அந்த அருமை நபி (ஸல்) அவர்களின் அவல நிலையைக் கண்ட கல்லும் மலையும் கசிந்துருகி, கண்ணீர்விட்ட வண்ணம் "கருணைக் குணம்கொண்ட அருமை நாயகமே! எங்களைப் பார்த்து, பொன்னாக மாறிவிடுக என்று தாங்கள் சொன்னால் நாங்கள் பொன் னாக மாறி விடுவோம்." அவ்வளவு பெரிய அருளை அல்லாஹுத் தஆலா தங்களுக்கு அளித்துள்ளான். நீங்கள் ஏன் வறுமையில் வாடவேண்டும்-? நாங்கள் பொன்னாக மாறிவிடின் எங்களிலிருந்து சிறிது சிறிதாக தாங்கள் வெட்டி எடுத்துக்கொண்டு போய் மக்களிடத் தில் விற்று உங்கள் வாழ்வை உல்லாசமாகக் கழிக்கலாமே என்று அவைகள் முறையிட்டன. அதைக் கேட்ட அருமை நபி (ஸல்) இறைவனிடம் இருகரமேந்தி என்ன இயம் பினார்கள் தெரியுமா...? "இறைவா! ஒரு வேளை புசித் திருந்து அதற்காக உனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மறுவேளை பசித்திருந்து அதற்காக உன்னிடம் கெஞ்சிக் கேட்க வேண்டும். அந்த ஏழ்மை நிலையையே நான்

விரும்புகிறேன். அதுவே எனக்குப் போதும்" என்று நெஞ்சம் நிறையக் கூறினார்கள். தங்கமாக மாறுகிறேன் என்று மலைகள் சொன்னதற்காக, தங்கத் திலும் தனிச்சிறப்பு வாய்ந்த தரமான வார்த்தைகளைச் சொன்ன தங்க நபியை எப்படித்தான் மறக்கமுடியும்....? அப்படிப்பட்ட அந்த உத்தமர், பிறந்த மண்ணைவிட்டு, கொண்ட கொள்கையை கோலோச்சுவதற்காக மதீனா சென்றார்கள். தாயிப் நகர மக்களிடம் இரத்தம் வடிய வடியக் கல்லடிபட்டார்கள். அதே நேரத்தில் அன்பு நபியின் பொன்நிற மேனியில் வழிந்த செந்நிறத் துளிகளை காணப் பொறுக்காத மலக்குகள், "நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, நாயகம் (ஸல்) அவர்களே, தாங்கள் விரும்பினால் இந்த தாயிப் நகரத்தையே தலைகீழாகப் புரட்டி தவிடு பொடியாக்கி விடுகிறோம்; ஆணையிடுங்கள்" நாயகமே! ஆணையிடுங்கள்" எனத் தளர்ச்சி கொண்டவனும் உணர்ச்சியடையும் எழுச்சியு டன் கூறினார்கள். ஆனால் அதைக்கேட்ட அருமை நபி (ஸல்) அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "வேண்டாம் இவர்கள் அறியாமல் செய்து விட்டார்கள். இவர்கள் திருந்தாவிடினும் இவர்கள் வழிமுறையின ராவது என் மார்க்கத்தை ஏற்று நடக்கும் பிறிதொரு காலம் வரும்" என்றுரைத்தார்கள். சோதனையிலும், வேதனை யிலும் சாதனை காட்டிய சத்திய நபி (ஸல்) அவர்களின் சான்றாண்மையை நினைக்கும் போது மெய்சிலிர்க்கிறது. இரத்தம் வடியும்போதும் சித்தம் ஓடியாமல், வஞ்சகம் தீர்க்கவல்ல வாய்ப்புக் கிடைத்தும் அதனை வகையாக பயன்படுத்திக்கொள்ளாமல், பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே என்ற பண்பு உணர்வுடன் வைதாரையும் வாழவைக்கும் வல்ல நோக்கத்துடன், முத்தான மூதுரைகள் மொழிந்தார்கள் ஏன் தெரியுமா?



அம்மூன்று நபிமார்களும் தாங்கள் கொண்ட ஈமானைக் காத்துக்கொள்ளவே இத்தகைய இன்னல் களில் ஆட் பட்டார்கள். அதுமட்டுமல்ல! துன்பத்திலும் இன்பம் கண்டு தூய உரைகளை அருளினார்கள். தங்களது ஈமானின் இனிய நிலையை, இறைவனுக்கு எடுத்துக் காட்டினார்கள். ஈட்டிமுனை முன்னே நிறுத்தி வருத்தியபோதும்கூட ஈமானை இழக்கமாட்டோம் என்பதைச் சொல்லிக் காட்டி நம்மையெல்லாம் அந்த நல்ல பாதையில் நடைபோட நளினமுடன் அழைத்தார்கள். நசிந்து நாசமாகும் நிலை வந்தாலும், ஈமானில் எத்தகைய உறுதி வேண்டும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டினார்கள்.

அடுத்து ஸஹாபாக்களின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம்.

முஸ்இப் பின் உமையர் (ரலி) அவர்கள் செல்வச் செழிப்பிலே மிதந்த சீமான் வீட்டுப்பிள்ளை. எண்ண எண்ண இனிக்கும் வண்ண வண்ண உடைகளை உடுத்திக் களித்தவர். பட்டாடைகளை உடுத்தி, பார்ப்பவர் பரவசம் கொள்ளும் வகையிலே மக்கா நகர் வீதியிலே அவர் நடந்து வரும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். அவர் ஆடையிலே தெளித்திருக்கம் அத்தரின் வாசனை வீதியிலே செல்லும் செல்வ சீமான்களைக்கூட கிறங்கச் செய்யும். அப்படிப்பட்ட முஸ் இப்பின் உமைர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஆரம்ப காலம். அன்னாரின் தந்தையோ மக்கா காபிர்களில் மாபெரும் தனவந்தர்களில் ஒருவர். மிகப்பெரும் செல்வாக்குப் படைத்தவர். தன் அன்பு மகன் இஸ்லாத் தை ஏற்றுக் கொண்டதை அறிந்ததும் மகனை அழைத்து இஸ்லாத்தை விட்டு விடும்படி வற்புறுத்தினார். ஆனால் மாண்புள்ள மார்க்கத்தில் மனதைப் பறிகொடுத்த மகனோ தந்தையின் வற்புறுத்தலுக்கு இசையவில்லை.

அதைக்கண்ட அவர் மகனை நோக்கி, "என் ஆணையை அலட்சியப்படுத்திய நீ இனி என்மகன் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை இழந்து விட்டாய்! நீ எனக்கும் மகனும் இல்லை; நான் உனக்குத் தந்தையும் இல்லை. என் பேச்சை கேளாத உனக்கு இந்த வீட்டில் இனி இடமுமில்லை. நமக்குள் இனி எந்த பந்தமோ பாசமோ, ஒட்டோ உறவோ, எதுவுமே இல்லை. என் முகத்தில் விழிக்கக்கூட உனக்கு உரிமையில்லை. போ வெளியே" என்று கொக்கரித்தார். உடனே மகன் எவ்வித சலனமும் இன்றி விரைவாக வெளிக்கிளம்பினார். "நில்!" "தந்தை மீண்டும் கர்ஜித்தார். உடனே மகன் அப்படியே அசையாமல் நின்றார்." நீ அணிந்திருக்கும் ஆடைகள் என் பொருளால் வாங்கப்பட்டவை. அவை அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறு" என்று வீராவேசமாக எச்சரித்தார்.

உடனே மகனும் எல்லா உடைகளையும் கழற்றி வைத்துவிட்டு ஒரு சிறிய துண்டைமட்டும் தன் இடுப்பில் சுற்றிக்கொண்டு கிளம்பினார். வாயிலின் பக்கம் சென்றிருப்பார். உடனே தந்தை "என் சொத்தில் ஒரு துரும்பளவைத் தொடக்கூட உனக்கு உரிமையில்லை. நீ கட்டியிருக்கும் அந்தத் துண்டையும் கழற்றி வைத்து விட்டுச் செல், மீறினால் என்ன நடக்கும் தெரியுமா?" என மார் தட்டினார். அதைக் கேட்டதும் மகனின் கண்களிலிருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்தது. "அப்பா! மானத்தைக் காக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இந்தத் துண்டை மட்டும் அணிந்து கொண்டேன் தயவு செய்து உங்கள் பிள்ளைக்கு இந்தத் துண்டை மட்டும் அணிய அனுமதியளியுங்கள் அப்பா, அனுமதியளியுங்கள்" என்று கெஞ்சினார். "சீ! என் பேச்சைக் கேளாத உனக்கு மானம் என்ன வேண்டியதிருக்கிறது மானம்" என்று சொல்லிக் கொண்டே, அந்த



மூர்க்கன், மகன் மீது பாய்ந்தார். உடனே இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த அந்தத் துண்டுத் துணியையும் பறித்துவிட்டு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார். படீரென கதவைச் சாத்தினார். எதிர்பாராத இந்தத் திடீர் நிகழ்ச்சியை முஸ்இப் பின் உமைர் (ரலி) கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. என்ன நடந்தது என்பதை உணரவே சற்றுநேரம் பிடித்தது. தன் நிலைக்கு வந்த அந்தத் தங்கம் தான் எந்நிலையிலிருக்கின்றோம் என்பதை உணர ஆரம்பித்தார். அவ்வளவுதான் தலை சுற்றியது; மேனி நடுங்கியது, கரங்கள் வெடவெடுத்தன, கால்கள் தள்ளாடின! வெட்கத்தால் நாணி ஒடுங்கினார், கூனிக் குறுகினார், பிள்ளையாய் பிறந்தபோது மடியிலே தன்னை படுக்கவைத்து மழலை மொழிகேட்டு மனம் மகிழ்ந்த அதே பெற்றோர் இன்று பெரியவனானதும் பிறந்த மேனியோடு பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டதை நினைத்து நினைத்து உருகினார். கை கால்களை மடக்கிக் கொண்டு அப்படியே முடங்கி உட்கார்ந்து கொண்டார். இறைவனை எண்ணினார்; தன் நிலையை எண்ணினார்; துடித்தார். கண்ணீர் வடித்தார். "இறைவா! இது என்ன சோதனை? ஏன் இந்த வேதனை. பாவா ஆதம் (அலை) அவர்களின் வழித் தோன்றிய அன்பு மகன் உன் வேதத்தின் நாதத்தை ஓதியதகாக நீதம் நிலைக்க தந்தையோடு வாதம் செய்ததற்காக உடுப்பதற்கு ஏதும் இன்றி ஏங்கி துடிக்கிறாரே, எந்தையே! எங்கள் சிந்தையில் குடியிருக்கும் விந்தையே. உன்னையே நிந்தை செய்யும் அந்த மந்தைக் கூட்டத்தின் தலைவனுக்கு ஈவு இல்லையா? இரக்கம் இல்லையா...? இதயமே இல்லையா...? கட்டிக்கொள்ள கச்சை கூட இல்லாமல் கதறுகிறதே அந்த உயிர். அழுக்குப்படாத ஆடையை அணிந்து கொண்டு ஆனந்த வாழ்வு நடத்திய அந்த மனிதர் உன் கொள்கை

யிலே அசைக்கமுடியாத பற்றுதல் கொண்டதற்காக, பற்றிக்கொள்ள பாதி ஆடை கூட இல்லாமல் பதறுகிறதே, பாரீர் அந்த மனிதரை" என்று அவரின் உள்ளம் இறைவனிடம் உரையாடியது.

தன் அன்பு மகனின் அவல நிலையை அறிந்த அவரது அன்னை தன் கணவனுக்குத் தெரியாமல் ஒரு துப்பட்டியை தன் மகனிடம் கொடுத்து "இதை அணிந்து கொண்டு இவ்விடத்தை விட்டும் ஓடிவிடு" என்று கூறினார். அத்துப்பட்டியை அணிந்து கொண்டு அந்த கொள்கைச் சிங்கம், தீனுக்காகக் தியாக நடைபோட துவங்கியது. பெருமானார் (ஸல்) அவர்களின் புனித இடத்தை நாடி ஓடியது. உயர்ந்த மாளிகையில் உல்லாச வாழ்வை உதறித் தள்ளிவிட்டு உத்தம நபி (ஸல்) அவர்களின் உன்னத உறைவிடத்தை தேடி ஓடியது. மாளிகையில் சீமானாக வாழ்வதைவிட மண்குடிசை யில் ஈமானோடு வாழ்வதை அந்த இதயம் இனிப்புடன் விரும்பியது. சுகம், செல்வம், சொந்தம், பந்தும் அத்தனையும் உதறிவிட்டு ஈமானோடு வாழவிரும்பிய அப்பெரியார் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சேர்ந்தார். காலம் கடந்தது. அந்தக் கனவான் இறுதியில் மதீனா வந்து சேர்ந்தார். மதீனா வீதியிலே மாமறையின் வசனங்களை ஓதி, மக்களைக் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் சேர்த்தார். இறுதியாக இந்த உத்தமர் உஹத் யுத்தத்திலே ஷஹீதாக்கப்பட்டார். இஸ்லாத்திற்காக தனது சுகபோகங்கள் அனைத்தையும் இழந்து ஏழ்மையின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்த அந்தப் பெரியாரின் உடல், கபன் துணிகூட சரியாக அணிவித்து அடக்கப் படவில்லை. இத்தனை இன்னல்களையும் துச்சமென மதித்து தூய்மையோடு துலங்கினாரே அப்பெரியார். ஏன் தெரியுமா....? ஈமானை எப்படியும் பாதுகாத்தே



தீரவேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தானே! இல்லையா....?

கப்பாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஆரம்ப காலத்தில் மக்கா குறைஷிகள் அவர்களுக்கு பல வகையிலும் கொடுமைகள் இழைத்து வந்தார்கள். நெருப்பை மூட்டிவிட்டு அதில் கப்பாப் (ரலி) அவர்களை ஆடைகளைக் கழற்றிய நிலையில் முதுகுப் புறமாக படுக்கவைத்து அத்தீயின் தகிப்பிலே வல்லூறை வதக்குவதுபோல் அவர்களை வாட்டி வதைத்தார்கள். தணலின் தகிப்பிலே அவர்களின் தங்க உடல் அங்குமிங்கும் ஆடாமல் அசையாமல் இருப்பதற்காக அவர்களின் மார்பிலே காலை வைத்து மிதித்துக் கொள்வார்கள் அக்கயவர்கள். அல்லலை அணு அணுவாக அனுபவிக்க வைத்து அதனால் அல்லாஹ்வின் அடியார் படும் அவஸ்தையைக் கண்டு ஆனந்தம் கொண்டார்கள் அந்த அற்பர்கள். தகிக்கும் நெருப்பிலே கப்பாப் (ரலி) அவர்கள் தவிக்கும் தன்மையைக் கண்டு ரசித்தார்கள் அத்தீயவர்கள். ஆனால் அவ்வளவு கொடூரத்திலும் கொஞ்சம் கூடக் கலங்கவில்லை அக்கனவான். ஒரு சமயம் உமர் (ரலி) அவர்களிடம் கப்பாப் (ரலி) அவர்கள் சட்டையைக் கழற்றி முதுகை காட்டியபோது அவர்களின் முதுகிலே வெள்ளைத் தழும்புகள் நிறையக் காணப் பட்டன.

குபைப் (ரலி) அவர்கள் எதிரிகளின் சூழ்ச்சியால் தூக்கு மரத்திலே நிறுத்தப்பட்டார்கள். அப்போது எதிரிகள் "குபைபே! முஹம்மதை உமக்கு பதிலாக தூக்கிலிட அதற்கு நீர் சம்மதிப்பீரா?" என்று கேட்டார்கள். அதற்கு குபைப் (ரலி) அவர்கள் "என் தசைகள் சிதைக்கப்பட்டாலும் நான் சகித்துக்கொள்வேன். ஆனால், முஹம்மது (ஸல்) அவர்களின் காலில் ஒரு சிறு முள் தைப்பதைக்கூடக்காண சம்மதிக்க மாட்டேன்"

என்றுரைத்தார்கள். இறக்கப்போகும் இறுதி வேளையில் கூட உறுதியுடன் தம் ஈமானைக் காத்த அந்த இறைநேசரை எண்ணும்போது கண்கள் ரத்தக் கண்ணீர் வடிக்கின்றன.

அபூஜஹிலாகிறவன்,தனது அடிமைப் பெண் ஸனீரா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட தற்காக அவர்களுக்கு சகிக்க முடியாத அளவிற்கு தொல்லை கொடுத்தான். பலவாறும் அடித்துத் துன் புறுத்தினான். இதனால் அவ்வம்மையார் பலவகையிலும் கஷ்டம் அடைந்தார்கள். அவர்களுக்கு தலையில் மிகுந்த கடினமான அடிகள் பட்டிருந்ததால் அவர்களின் கண்களில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இதனால் கண்களில் வீக்கம் ஏற்பட்டு கண்பார்வையை இழந் தார்கள். இதைக்கண்ட அபூஜஹல் அவ்வம்மையாரிடம் "எங்கள் லாத்-உஸ்ஸா என்ற தெய்வம்தான் உன் கண்களைக் குருடாக்கியது" என்று கூறினான். இதைக் கேட்ட அவ்வம்மையார் "லாத்உஸ்ஸா என்ற உங்களின் தெய்வங்களுக்கே பார்ப்பதற்கு கண்களில்லை; கேட்பதற் குக் காதுகளில்லை! அது எப்படி தன்னை மறுப்பவ னையும், இழித்துரைப்பவனையும் தெரிந்து கொள்ளும்? என் இறைவனே எனக்கு மீண்டும் கண்பார்வை அளிக்க சக்தி வாய்ந்தவன்" என்று கூறினார்கள். சில காலத்திற்கு பிறகு அவர்களுக்கு மீண்டும் கண் பார்வை ஏற்பட்டது.

ஸுஹைறப் (ரலி) அவர்கள் மககா குறைஷிகளின் கொடுமை தாளாமல் மதீனா செல்லத் திட்டமிட்டார் கள். அது சமயம் மக்கா குறைஷிகளுக்கு இது செய்தி தெரிய வந்தது. அப்போது ஸுஹைறப் (ரலி) அவர் களிடம் "நீங்கள் மதீனா செல்வதாக இருந்தால் உங்கள் பொருள்களை நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதியளிக்க மாட்டோம். அனைத்தையும் எங்களிடம் கொடுத்து விட்டுத்தான் செல்லவேண்டும்" என்றார்கள் குறை



ஷிகள். அதற்கும் ஸுஹைறப் (ரலி) அவர்கள் சம்மதித்து தமது செல்வங்களைவிட ஈமானைப் பெரிதாக மதித்து அதைக் காப்பாற்றிக்கொள்ள தம் பொருட்களை எல்லாம் மக்கா குறைஷிகளிடையே ஒப்படைத்துவிட்டு மதீனா புறப்பட்டார்கள்.

பிர்ஔனைப்பற்றி ஓரளவு அறிந்திருப்பீர்கள். அல்லாஹ்வின் விரோதிகளில் முதன்மை பெற்றவருள் ஒருவன் அவன். அப்பேர்ப்பட்ட அந்த அநியாயக்கார னுக்கு ஆசியா என்ற அருமையான மனைவியும் உண்டு. அல்லாஹுத்த ஆலாவின் மீது ஈமான் கொண்டு மூஸா (அலை) அவர்களை நபியாக ஏற்றுக்கொண்ட இரத் தினமே அந்த ஆசியா அம்மையார்! சத்திய மார்க்கத்தின் பக்கம் தன் புத்தியை திருப்பிய அந்த உத்தமியின் சித்த உறுதியை சிதைப்பதற்கு அந்த சிறு மதியாளன் செய்த கொடுமைகள் கொடுமையிலும் கொடுமை!

அக்கொடியோன், அன்னை ஆசியா அவர்களை அல்லாஹ்வை மறுத்து தன் கொள்கையின் பக்கம் திரும்புமாறு வற்புறுத்தினான். என்றாலும் அவ்வம் மையார், தான் கொண்ட ஈமானை விட்டும் அணுகளவும் சருகாமல் உறுதியாக நின்றார்கள். இதனால் ஆத்திரம் கொண்ட பிர்ஔன் அம்மையார் அவர்களை ஒரு மலைச்சரிவுக்கு இழுத்துச்சென்று அங்கே அவர்களை படுக்கவைத்து மலையின் பாராங்கல்லை உருட்டி நசுக்கி விடுங்கள் என்று தம் காவலாளிகளுக்கு ஆணையிட் டான்! அதன்படியே அவ்வம்மையாரை மலைச்சரிவுக்கு இழுத்துச் சென்று படுக்கவைத்து கல்லை உருட்டு வதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. அப்போது பிர்ஔனானவன் அம்மரணப்பிடியில் சிக்குண்டிருக்கும் ஆசியா அம்மையாரை நோக்கி "ஆசியாவே! இறுதியாகக் கேட்கிறேன். இப்போதாவது நீ என் வழிக்கு இணங்குவாயானால் நீ காப்பாற்றப்

படுவாய் என்ன சொல்கிறாய்?" என்று பிதற்றினான். ஆனால் ஆசியா அம்மையாரிடம் இருந்து யாதும் பதில் வரவில்லை. அவர்களின் வாய் மட்டும் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தது. 'லாயிலாஹ இல்லல் லாஹு' என்ற கலிமாவை மொழிந்து கொண்டிருந்தது. இறுதியாகக் கல், உருட்டி விடப்படுகிறது. கல்லும் அவ்வம்மையார் அவர்களை நசுக்கிவிட்டு நகர்ந்து நின்றது.

அவ்வம்மையார் அவர்களின் உடல் நசுக்கப்பட்டு அதிலிருந்து பீரிட்டெழும் இரத்தத் துளிகளிலிருந்து "லாயிலாஹ இல்லல்லாஹு" என்ற தௌஹீது கலிமா வின் முழக்கம் எழுந்தது. இத்தனை சிரமங்களுக்கும் இடை யில் அவ்வம்மையார் அவர்கள் தன்னுடைய ஈமானை இழக்காமல் உயிர் நீத்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஈமானை பாதுகாப்பதற்காக எத்தகு இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள் இவை எல்லாம் நம் உள்ளத்தை உலுக்கிட வேண்டாமா?

அத்தகைய ஆசியா அம்மையார் அவர்கள் நாளை மறுமையில் சொர்க்கத்தில் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவியாகின்ற பேறு பெற்றார்கள் என்றால் இறைவனிடத்தில் எந்த அளவுக்கு உயர்ந்த இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் பார்த்தீர்களா? எப்படி பெற்றார் கள் அந்த இடத்தை? ஈமான்! ஈமான்! ஆம் தங்களை சாகவைத்து தம் ஈமானைச் சாகாமல் காத்தார்கள். எவ்வளவு தொல்லைகள் துளைத்தெடுத்தாலும் துணிந்து செயல்பட்டார்கள் நம் முன்னோர்கள். நம்மில் பலர் அவர்களை வாயார வாழ்த்திவிட்டு ஷைத்தானுக்கு இணங்கி நடக்கிறார்கள். அவனோடு கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கிறார்கள். தலையிலே குல்லா? உதட்டின் உரையிலே அல்லாஹ்! ஆனால் உள்ளத்தில் மட்டும் லஃனத்துல்லா! எந்தவகையிலும் இந்த கீழான நிலைக்குச்



சொந்தக்காரனாக நம்மை ஆக்கி விடாமல் நாயன் காப்பானாக! இறந்து போகும் நிலை வந்தாலும் ஈமானை இழந்து போகும் நிலை வராமல் இறைவன் காப்பானாக நற்கிருபை நல்லருள் புரிவானாக! ஆமீன்! ஆமீன்!

## அல்லாஹ் அறிவுறுத்தும் அமுத மொழிகள் பன்னிரண்டு

ஹஜ்ரத் கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். "நான் தவ்றாத் - ஜபூர் - இன்ஜில் - குர் ஆன் ஆகிய நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்துள்ளேன். அவ்வேதங்களிலிருந்து மணியான 12 விஷயங்களை அணியாக தேர்ந்தெடுத்து அவைகளை ஒரு காகிதத்தில் எழுதி என் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டேன். அனுதினமும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் அதனை மும்முறை நோட்டம் விட்டு என்னை திருத்திக் கொள்வேன்" என்று கூறினார்கள்.

அந்த அருமையான விஷயங்களை நீங்களும் அறிய வேண்டாமா?

இதோ....இறைவன் கூறுகிறான்:

1. அடியேனே! எனது பொக்கிஷம் நிறைந்திருக்கும் வரை உனக்குரிய உணவு கிடைக்காமல் தப்பிவிடும் என்றெண்ணிக் கலங்காதே...பயப்படாதே!...நிச்சயமாக எனது பொக்கிஷம் ஒருபோதும் குறையாது.

2. அடியானே! உனது தகுதி (நன்மை)க்குத் தக்கவாறு உன்னை நான் நேசிக்கின்றேன். எனது தகுதிக்குத் தக்கவாறு நீ என்னை நேசி.

3. அடியானே! ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை நீ கடந்து சென்று உனது இரு பாதங்களையும் சொர்க்

கத்தில் காணும் வரை எனது சோதனையைப் பற்றி நிம்மதியாக இருந்து விடாதே!

*4.* அடியானே! உலகிலுள்ள சகல பொருள்களையும் உனது வாழ்வுக்காகவே, வசதிக்காவே, தேவைக்காகவே படைத்திருக்கின்றேன். ஆனால் என்னை வணங்குவதற்காகவே உன்னைப் படைத்திருக்கிறேன்.

*5.* அடியானே!...எனது திறமையும் வல்லமையும் நிரந்தரமாக இருக்கும் காலமெல்லாம் என்னைத் தவிர்த்து வேறு எவருக்கும் நீ வழிப்படாதே...

*6.* அடியானே! உனது தவறினாலும் குற்றத்தினாலும் ஏற்படும் துன்பத்திற்காக, தீமைக்காக நீ என் மீது கோபமும், வெறுப்பும் கொள்ளாதே! நீ எனக்கு மாறு செய்த குற்றத்தினாலே அத்தீமைகள் நிகழ்ந்தன என்று உணர்ந்து உன்னையே நீ கோபித்துக்கொள்.

*7.* அடியானே...அர்ஷுக்கு அப்பாலிருந்து பாதாளம் வரையிலுமுள்ள படைப்புகள் அனைத்தும் என்னையே நாடுகின்றன. ஆனால் நான் உன்னையே நாடுகின்றேன். எனினும் நீ என்னை விட்டும் உன் பாவச் செயல்களால் வெகுதூரம் வெருண்டோடுகின்றாய்.

*8.* அடியானே...நீ என்னைத்தவிர எப்பொருளையும் நேசிக்காதே! ஏனெனில் அவை உனக்குத் தக்க சமயத்தில் பயன் தராது. ஆனால் என்னை நீ எப்போது நாடுகிறாயோ அப்போதே எனது உதவியைப் பெற்றுக் கொள்வாய்.

*9.* அடியானே! நாளைய தினத்தின் உணவை இன்றே நீ என்னிடம் கேட்காதே. ஏனெனில் நாளைய தினத்தின் அமலை (நற்செயலை) இன்றே நான் உன்னிடம் கேட்பதில்லை.

*10.* அடியானே! உன்னை நான் அற்ப விந்திலிருந்து படைத்தேன். நீ உனது தாயின் கர்ப்பத்தில்



இருக்கும்போது கூட உனக்குத் தேவையான உணவை நான் கொடுத்தருளினேன். அதில் அணுவளவும் நான் குறைக்கவில்லை.

*11.* அடியானே! உனக்காக நான் பங்கிட்டுக்கொடுத்த செல்வத்தைக் கொண்டு நீ திருப்தியடைவாயேயானால் உனது உடலையும், உள்ளத்தையும் நான் நலம்பெறச் செய்வேன். ஆனால் அந்த நிறைவான நன்றியுணர்வு உன் நெஞ்சத்திலே கிஞ்சித்தும் இல்லையானால், காடு மேடெல்லாம் உனது உணவைத் தேடி மிருகங்கள் அலைவதுபோல் உன்னையும் அலையச் செய்து விடுவேன். அகிலம் முழுவதும் நீ அவ்விதம் அலைந்து திரிந்தாலும் என் கண்ணியத்தின் மீது ஆணையாக நான் உனக்கு நிர்ணயித்ததைத் தவிர ஒரு துரும்பைக் கூட உன்னால் அடையமுடியாது. அது மட்டுமா...? நீ என்னிடத்திலும் மக்களிடத்திலும் வெறுக்கப்பட்டவனாவாய்.

*12.* அடியானே! எவர் எனது முடிவையும் விதியையும் மனநிறைவோடு ஏற்றுப் பொருந்திக்கொள்ளவில்லையோ, எவர் எனது சோதனைகளை கண்டு பொறுமை கொள்ளவில்லையோ, எவர் எனது உபகாரத்திற்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் எனது வானப்பரப்பின் கீழ் இருந்து வெளியேறிக் கொள்ளட்டும்; என்னை அல்லாத வேறு இறைவனைத் தேடிக் கொள்ளட்டும்.

வாசக நேயர்களே, தான் படைத்த மனிதன் நல்லவனாயினும் சரி, பொல்லாதவனாயினும் சரி, "அடியானே!" என அன்பொழுக அழைக்கும் அல்லாஹ்வின் அன்பைப் பார்த்தீர்களா...? தனது ஆற்றலைக் காட்டி ஆணையைத் தீட்டி நம்மையெல்லாம் நளினமாக எச்சரிக்கும் நயத்தைப் பார்த்தீர்களா...? கனிவோடு கூறி தெளிவோடு வாழச் சொல்லும் பாங்கைப் பார்த்தீர்களா...? ஆழ்ந்து படிக்கும்போது நம் ஐயமெல்லாம் அகன்று விடுகின்றது

உள்ளத்தின் கள்ளமெல்லாம் கறைந்து எண்ணத்தின் பள்ளமெல்லாம் நிறைந்து விடுகிறது, சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்ப்போர் இதனை பன்னிரண்டு முறை என்ன பன்னிரண்டு ஆயிரம் முறை படித்துக் கொண்டேயிருக்கலாம்! அறிவு பெற்று ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்கலாம்!

## ஹதீஸ் குத்ஸியில் இறைவன் கூறுவது!

ஹதீஸ் குத்ஸியில் கரை காணாக் கருணை மனம் கொண்ட ஹக்கன் கனிவுடன் கூறுவதை பணிவோடு படிக்க உங்களை எல்லாம் உள்ளன்போடு அழைக்கின்றேன். உங்கள் உணர்வுகளைத் தீட்டிக்கொண்டு உவகையோடு கவனியுங்கள். உற்சாகத்துடன் வாருங் கள், உன்னிப்பாகக் படியுங்கள்.

இதோ இறைவன் இயம்பத் தொடங்கிவிட்டான்: எனது கௌரவத்தின்மீது ஆணையாக உலகில் என்னை பயந்தவர்களுக்கு கியாமத்து நாளில் உபாயமும் என்னிடம் பயங்கொள்ளாதவர்களுக்கு அவலமும் அளிப்பேன்.

என் அடியார்களே! அநியாயம் செய்வதை என்மீது ஹராமாக்கிக் கொண்டதைப் போலவே உங்களுக்கும் ஹராமாக்கியுள்ளேன். ஆகவே உங்களில் எவரும் அநியாயத்தின் அருகில்கூட அணுகவேண்டாம்.

என் அடியார்களே! உங்களில் எவர்கள் என்னால் நேர்வழி அடையப்பெற்றார்களோ, அவர்களே ஜெய சீலர்கள், மற்றவர்கள் வழிதவறிய்வர்கள், ஆகவே, நீங்கள் நேர்வழி பெற என்னிடமே பிரார்த்தனை புரியுங்கள். நிச்சயமாக உங்களின் பிரார்த்தனைகளை நான் ஏற்றுக் கொள்கிறவனாக இருக்கிறேன்.



என் அடியார்களே! நான் உங்களில் எவருக்கு இரணம் அளித்துள்ளேனோ, அவர்களைத் தவிர மற்றவர்கள் பசியாளிகளாக இருக்கிறார்கள். ஆகவே உங்களுக்கரிய இரணத்தை என்னிடமே கேளுங்கள். நிச்சயமாக நான் இரணம் அளிப்பதில் மிகச் சிறந்த வனாகவும் நிகரற்றவனாகவும் இருக்கிறேன்.

என் அடியார்களே! உங்களில் எவர்களுக்கு நான் ஆடை அளித்துள்ளேனோ அவர்களைத் தவிர ஏனை-யோர்கள் நிர்வாணஸ்தர்கள். ஆகவே உங்களின் உடைகளுக்கும் என்னிடமே பிரார்த்தனை புரியுங்கள். ஏனெனில் திண்ணமாக நான் உங்களின் தேவைகளை நிறைவு செய்யும் கிருபையாளனாக இருக்கிறேன்.

என் அடியார்களே! நீங்கள் இரவிலும், பகலிலும் பாவம் செய்பவர்களாக இருக்கிறீர்கள். எனவே உங்களின் பாவங்களுக்காக என்னிடம் மன்னிப்புக் கேளுங்கள். ஏனெனில் நிச்சயமாக நான் உங்களின் பாவங்களை மன்னித்துக் கிருபை செய்வதில் அளவற்ற அருளாளனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறேன்.

அடியார்களே! என் தண்டனைகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தி (தைரியம்) உங்களுக்குக் கிடையாது. ஆகவே என் தண்டனை ஏற்படும் முன்னே அதனை விட்டும் என்னிடம் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுங்கள் ஏனெனில் நிச்சயமாக நான் பாதுகாப்போரில் மிகச் சிறந்த பாதுகாவலனாக இருக்கிறேன்.

அடியார்களே! என்னைத் தவிர வேறு எந்த பொருளினாலும் உங்களுக்கு எவ்விதப் பயனையும் அளித்து விட முடியாது. எனவே உங்களின் எல்லா வகையான நலனுக்கும் பலனுக்கும் என்னையே பொறுப்பாளனாக்குங்கள். ஏனெனில் நிச்சயமாக நான் பொறுப்

பாளர்களிலெல்லாம் மிகச்சிறந்த பொறுப்பாளனாக இருக்கிறேன்.

என் அடியார்களே! நீங்களோ உங்களுக்கு முன்னுள்ளோர்களோ பின்னுள்ளவர்களோ மற்ற ஜின் இனங்களோ எவராக இருப்பினும் சரியே, என்னையன்றி என்னால் படைக்கப்பட்ட எந்தப் பொருளும் தங்களை ஆதரித்துப் பாதுகாக்கும் என்று நம்புவீர்களேயானால் அதனால் எனக்கொன்றும் நட்டமில்லை. உங்களுக்கு நீங்களே நட்டத்தை உண்டு பண்ணிக் கொள்கிறீர்கள் நெறி தவறி அநியாய வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களை நிச்சயமாக நான் நேசிக்கவே மாட்டேன்.

என் அடியார்களே! நீங்களும் ஜின்களும் இந்த மண்ணில் உள்ள ஒவ்வொரு பொருளையும் வகைக்கு ஒன்றாகத் தனி தனியாக என்னிடம் கேட்டு அதை நான் உங்களுக்குக் கொடுப்பேனேயானாலும் என்னுடைய கஜானா இம்மியளவுகூட குறைந்துவிடாது. ஏனெனில் என்னுடைய கஜானா எடுக்க எடுக்க குறையாதது.

என் அடியார்களே! உங்களுக்கு நன்மைகளை தருவதும், தீமைகளைத் தருவதும் உங்களின் செய்கைகள் தான். நான் உங்களோடு பின்னிப்பிணைந்து உங்களின் ஒவ்வொரு செயலையும் உற்று நோக்குகிறேன். உங்களுக்களித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். உங்களின் செயலுக்குத் தக்க கூலியை கியாமத்து நாளில் குறைவின்றி கொடுப்பேன். அன்னாளில் நல்லவை செய்து நலம் பெற்ற நல்லோர்கள் தங்களின் நாயகனை உளமாரப் போற்றிப் புகழ்ந்திடுவார்கள். வாயார வாழ்த்திடுவார்கள். தீயவை செய்து திக்கித் திணறித் திண்டாடும் தீயோர்கள் தம்மைத்தாமே நொந்து கொண்டு துடிப்பார்கள்; கண்ணீர் வடிப்பார்கள். நாம் உலகிலேயே அம்மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும், அன்புரைகளையும், ஆலோசனைகளையும்,



ஆதாரங்களையும், வேதங்கள் மூலமாக வேண்டிய மட்டும் வெளிப்படுத்தினோம். அவைகளை அணுவளவும் பிசகாது அழகாக எடுத்துச் சொல்ல ஆற்றல்மிக்க ரசூல்மார்களை அனுப்பினோம். நபிமார்களைத் தந்தோம். உலமாக்களை தந்தோம் அவ்வளவு செய்தும் அம்மக்கள் அலட்சியப் படுத்திவிட்டார்களே! அவர்களுக்கு செவி கொடுக்க மறந்தார்களே! தன் தவறை உணர்ந்து வருந்தித் திருந்திட தவறிவிட்டார்களே என இறைவன் ஹதீஸ் குத்ஸியில் அறிவுறுத்தியுள்ளான்.

கழிந்த காலத்தில் தவறியதை சரிசெய்து கொள்வதும் எஞ்சிய காலத்தை எள்ளளவும் வீணாக்காது வினயத்தோடு செயல் புரிவதும் அறிவாளிகளின் அறச் செயலாகும்.

## அல்லாஹ் எப்படியும் இரணமளிப்பான்

பல்க் நாட்டின் சிம்மாசனத்தில் ஆட்சி புரிந்து வந்த அரசர் இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்களின் ஞானப் பாதையிலே ஓர் நாள்...காட்டிலும் மலையிலும் இறைவனின் கருணையை இமைப்பொழுதும் மறவாது கால்கடுக்க களிப்புடன் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். ஓயாத அலைச்சலால் அந்த ஞானியின் மேனி வாடியது. ஆனால் உள்ளமோ அல்லாஹ்வின் அன்பைத்தேடி ஓடியது. அல்லாஹ்வின் அந்த ஒப்பற்ற அடியாருக்கு மழையும் காற்றும் வெயிலும், பனியும் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அனைத்தும் அவனே, அனைத்தும் அவனுடைய அருட்கொடையே என்று எண்ணிக்கொண்டிருக்கும் உள்ளத்திற்கு உலகத்துப் பொருட்களின் உறுத்தல் எங்கே தெரியப்போகிறது. அந்த அடியவரின் சுகம், இன்பத்தையும் துன்பத்தையும், ஒன்றாகவே கண்டது. வெம்மையும், தண்மையும், ஒரே

வகையிலேயே ரசித்தது. இனிப்பையும், புளிப்பையும், பழிப்பின்றியே சுவைத்து கழித்தது. ஆம், அந்த சுகம் அனைத்துப் பொருளிலும் அல்லாஹ்வையே பார்த்தது. அந்த உணர்ச்சியுடன் அனைத்தையும் அனுபவித்தது. அதனால் அவன் படைப்பில் அது ஏற்ற தாழ்வைக் காணவில்லை. குற்றம் குறையைப் பார்க்கவில்லை. எங்கும் எதிலும் எப்போதும் இறை மயம்; அது ஒன்றே அந்த அன்பு நெஞ்சின் நிறைநயம்! அப்பேர்ப்பட்ட அந்த அடியவரை சோதனை செய்வதிலே அல்லாஹ் ஆவல் கொண்டான். தன் நேசர்கள் தன்னை நெருங்க நெருங்க அவர்களின் நேர்மையில் மேலும் சீர்மையைப் பெருக்க விந்தைக்குரியவன் விளை யாட்டைக் காட்டி, சிந்தைக்கு விருந்து படைக்கும் தன்மையை எண்ணும்போது....

அன்றொரு நாள், இப்றாஹீம் பின் அத்ஹம் வெயிலின் கொடுமையில், தம்மை மறந்து பசியோடும் தாகத்தோடும் நடந்து கொண்டிருந்தார்கள். கதிரவனின் காய்வால் களைத்துப்போன அந்த கண்ணியவாளர், கடும்வெளியிலும் களைக்காமல் நிலைத்திருந்த ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள். ஏதாகிலும் சாப்பிடப் பொருள் இருக்கிறதா என்று தன்னைத் தடவிப் பார்த்தார்கள். இறுதியாகத் தன் சட்டைப் பையிலிருந்து காய்ந்த ஒரு ரொட்டித் துண்டைக் கண்டெடுத்தார்கள். அதைச் சாப்பிட தன் வாயின் அருகாமையில் கொண்டு செல்கையில் அம்மரத்தின்மேல், கிளையில் உட்கார்ந்திருந்த காகமொன்று அந்த ரொட்டித் துண்டை அப்படியே அபகரித்துக்கொண்டு பறந்தது. ரொட்டியை பறிகொடுத்த அந்த பண்பாளர் காகத்துடன் தொடர்ந்தார்கள். இறுதியாக அக்காகம் ஒரு மலையுச்சியிலிருந்து பாழடைந்த மண்டபத்தின் மேல்தளத்தில் போய் அமர்ந்தது. அதை குறிப்பாகப் பார்த்துக் கொண்டு வந்த பெரியார் அவர்களும் அம்மண்டபத்தையடைந்தார்கள்.



அக்காகம் என்னதான் செய்கிறது என்று கவனிக்கத் தொடங்கினார்கள்.

அக்காகமானது ரொட்டித் துண்டை காலில் வைத்துக்கொண்டு தனது அலகால் ரொட்டியை விண்டு விண்டு போட்டது. இதைக் கண்ட பெரியார் அவர்கள் இதென்ன விநோதம் தனக்காக ரொட்டியை பறித்து வந்த காகம் தான் தின்னாமல் ரொட்டியை விண்டு கீழே யல்லவா போடுகிறது என்று யோசிக்கலானார்கள். ஏன் இப்படிச் போடுகிறது மண்டபத்தின் உள்ளே போய்த் தான் பார்ப்போமே என்றெண்ணி மண்டபத்தின் உள்ளே சென்றார்கள். அங்கே அவர்கள் கண்ட விநோதக் காட்சி அவர்களையே திகைக்க வைத்து விட்டது.

மண்டபத்தினுள்ளே நலிந்து மெலிந்து போன ஒரு மனிதர் கை கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் கிடந்தார்கள். அவர் அந்நிலையில் இருந்து கொண்டே மேல் நோக்கி வாயைத் திறக்க அக்காகம் ரொட்டியை விண்டு அவர் வாய்க்கு நேரே போட, அக்காட்சியை அப்பெரியார் ஆர்வத்துடன் கவனிக்கலானார்கள். சற்று நேரத்திற்குப் பின் அக்காகம் மறுபடியும் பறந்து போய் தண்ணீர் நிறைந்த ஒரு சிரட்டையை (கொட்டாங்கச்சியை) வாயில் கவ்விக் கொண்டு வந்தது. மண்டபத்தின் மேலிருந்து கொண்டு சிரட்டையிலிருந்து தண்ணீரை அப்படுத்திருப்பவர் வாயில் ஊற்றியது. அவர் அதை அருந்தினார். தண்ணீர் ஊற்றி முடிந்ததும் காகம் பறந்து விட்டது.

இந்த விந்தை நிகழ்ச்சியால் நெஞ்சம் நெகிழ்ந்து நின்ற இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்கள் கட்டுண்டு கிடக்கும் இம்மனிதரை அணுகி அவரின் கட்டுகளை அவிழ்த்து விடுவித்து "நீங்கள் யார்? எப்படி இம்மண்டபத்திற்குள் வந்தீர்களென வினவினார்கள். அதற்கு அம்மனிதர் "நான் ஒரு வியாபாரி வியாபாரம் செய்து விட்டு நிறைந்த

பொருளுடன் ஊர்நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது சில கள்வர்கள் என் பொருள்களையும் குதிரையையும் கவர்ந்து கொண்டு என்னைச் சங்கிலியால் இங்கே கட்டிவைத்து விட்டுச் சென்றுவிட்டார்கள். நான் இப்படியே இங்கேயே பல நாட்களாக இருக்கிறேன், இது நாள் வரை இக்காகம்தான் இப்படியே ஏதாகிலும் உணவு கொண்டு வந்து கொடுக்கும்" என்றார்.

உடனே இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்களின் உடல், பயத்தால் நடுநடுங்கிவிட்டது. இம்மாறுதலைக் கண்ட வியாபாரி" ஏன் இப்படி பீதி பிடித்தவர் போலாகிவிட்டீர்கள்?" என வினவினார். அதற்கு இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்கள், "ஒன்றுமில்லை இறைவன் மிக மிகக் கிருபையாளன். நான் திக்கு தெரியாத இக்காட்டிலே தணியாத தாகத்தோடு தனித்திருந்தேன். உண்ண உணவின்றி பசித்திருந்தேன். வெயிலின் வெம்மையாலும், பசியின் கொடுமையாலும், உடல் சோர்ந்திருந்தேன். அப்போது என் உள்ளம், "ஓ-இப்ராஹீம் பின் அத்ஹம் என்ற அரசரே உன் பதவி என்ன, உன் பட்டமென்ன, நீ இருந்த சுகபோகமென்ன அத்தனையும் துறந்துவிட்டு, ஆனந்த வாழ்வை இழந்துவிட்டு இக்கானகத்திலே இப்படியெல்லாம் இன்னலில் பின்னிக் கிடக்கின்றாயே இங்கே உன்னை யார் கவனிப்பார்கள் எனக்கூறி என்னை ஏங்க வைத்தது. இத்தகைய எண்ணம் என் உள்ளத்தில் ஊசலாடிய வண்ணம் ஒரு மரத்தடியில் அமர்ந்தேன்" என்று கூறி அதைத் தொடர்ந்து நடந்த நகிழ்ச்சிகளை விவரித்தார்கள்.

மேலும் கூறினார்கள்: "இன்று இறைவன் என் இதயத்திற்கு நேரிய பதிலை சீரிய முறையில் வழங்கியிருக்கிறான். ஆம், அனைத்துயிரையும் படைத்துக் காத்து ஆதரிக்கும் அருளாளன், எந்த உயிருக்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எந்த வகையிலாவது உணவளித்துக் காப்பான். கேவலம் மேனிக்கு மெருகூட்டும் நினிக்காக உன் ஞானப் பாதையிலேயே உன் ஊனப் பார்வையை ஊடுருவ விட்டு அந்த உயர்ந்த பாதையை உதறித் தள்ளப் பார்த்தாயே உத்தமனே உஷார் என்று படிப்பினை தருவதற்காகவே இறைவன் இப்படிப்பட்ட நிகழ்ச்சியை எனக்கு நிகழ்த்திக்காட்டி இருக்கிறான் என எண்ணியபோது அந்த எண்ண அலைகள் என்னை இத்தகைய மாறுதலுக்கு ஆட்படுத்திவிட்டது" என்று கூறினார்கள். பின்னர் அம்மனிதர் தம் சொந்த ஊர் நோக்கி நடக்க முற்பட்டார்.

இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் பழையபடி தன் ஞான வழி நோக்கி சுழலவிட்டார்கள்.

## அறிவொளிகள்

அனைத்திலும் சிறந்தவன் யார்...அல்லாஹ்வே அவன்ஒப்புவமை அற்றவன். இணைதுணை இல்லாதவன். அவன் அளித்த அவனியையோ அண்ட கோளங்களையோ, அல்லது அதிலுள்ள பொருள்களையோ, வைத்துக்கொண்டு அவனை ஒப்பிடமுடியாது. அவனுக்கென்று உதாரணமாகவோ உவமையாகவே, சிறப்பாகவோ, குறிப்பிட குவலயத்தில் என்ன இருக்கிறது? அதுவும் அவனால் ஆக்கப்பட்டவைகளையே குறிப்பிடுவதென்றால் அது நகைப்புக்கு அல்லவா இடம் தரும். அப்படியாயின் அவனை போன்ற ஒரு சக்தியை ஒப்பிடலாம். அப்படி ஒன்று எங்கேனும் இருக்கிறதா ஊஹூம் இல்லவே இல்லை. பின் அவனை எப்படித்தான் போற்றுவது...கருணையில் கடலையும் கடந்தவனே! பொறுமையில் பூமியை மிஞ்சியவனே! என்று போற்றலாமோ-ஊஹூம், அதுகூட அவனது அற்புதத்தை முழுமையாக உணர்ந்து போற்றியதாக ஆகாது.

என்னதான் இருந்தாலும் அவன்மேல் அன்பு கொண்ட அடியான் அவனை எப்படியாவது ஏற்றிப் போற்றி யாகவேண்டுமெனத் துடிக்கிறானே...அந்தத் துடிப்புக் காகவாவது எதாவது ஒன்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும். எதைச் சொல்வது...? ஆம் அதுதான் சரி. அவன் அருளுக்கு எல்லையில்லை யல்லவா? அப்படி யாயின் அவனை அளவற்ற அருளாளன் என்று போற்ற லாம். அவன் அருளைப் போலவே அன்புக்கும் எல்லை யில்லையல்லவா, அப்படியாயின் அவனை நிகரற்ற அன்புடையோன் எனவும் ஏற்றலாம் இதனை எவரும் ஏற்றுக் கொள்வர்.

ஆக எந்த ஒரு செயலையும் ஆரம்பிக்கும்போது அந்த அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் எனும் பொருள் கொண்ட "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்ற மூல மந்திரத்தை கூறும்போது. அவனைப் பூரணமாகப் புகழ்ந்த உணர்வோடு பூரிக்கிறான் அடியவன். அவன் இப்படி எந்த ஒரு செயலையும் ஆரம்பிக்கும்போது போற்றிப் புகழும் முறை இஸ்லாம் தவிர வேறு எம் மார்க்கத்திலும் காணமுடியாது.

இது நமக்கே உரிய தனிச் சிறப்பு, சரி விஷயத்துக்கு வருவோம். அவனை விடுத்து அவன் தந்த படைப்பி னங்களில் எது சிறந்தது என ஆராயப் புகுவோமே! மாதங்களிலெல்லாம் சிறந்தது ரமலான் மாதம். நாட்களிலெல்லாம் சிறந்தது வெள்ளிக்கிழமை. இரவு களிலெல்லாம் சிறந்தது லைலத்துல் கத்ர் இரவு...இப்படி ஒவ்வொன்றாக அடுக்கிக் கொண்டே போனால் எப்படி? இதோ அடுத்தடுத்துத் தொடுத்தாற்போல் தேடி வருகிறதே தெவிட்டாத தெள்ளமுதத் தேன் மொழிகள்.

1. எல்லாவற்றையும் விட உள்ளத்திற்குச் சாந்தி அளிப்பது இறை தியானத்தில் ஈடுபட்டிருப்பதேயாகும்.



2. அனைத்திலும் நிறைந்த அன்பிற்குரியவர்கள் நபி (ஸல்) அவர்களே யாவார்கள்.

3. எல்லாவற்றிலும் நல்ல உபதேசி மன சாட்சியேயாகும்.

4. அனைத்திலும் அருமருந்து நன்னம்பிக்கையே யாகும்.

5. அனைத்திலும் கஷ்டமானது கடனேயாகும்.

6. அனைத்திலும் நற்பாக்கியம் நல்குவது ஆனந்தமும் ஆரோக்கியமாகும்.

7. அனைத்திலும் மிக நல்லது உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்வது.

8. அனைவரிலும் பெருவீரன் கோபத்தை அடக்கு பவனே.

9. அனைத்திலும் அங்கீகரிக்கக் கூடாத காரியம் கோபமே.

10. அனைத்திலும் அழியாப் பெருஞ் செல்வம் கல்வியே!

11. அனைவரிலும் மிக மோசக்காரன் நயவஞ்சகனே!

12. அனைத்திலும் அதிகச் சக்திவாய்ந்தது இனிய அன்பும் பேச்சும் இராகமுமே.

13. அனைத்திலும் நற்பெயர் கொடுப்பது கொடை கொடுப்பதே.

14. அனைவரிலும் அற்பமானவன் செய்நன்றி மறந்தவனே!

15. அனைவரிலும் மிக மடமையானவன் பிறருக்கு உபத்திரவம் செய்பவனே!

16. அனைவரிலும் மிகக் கெட்டவன் புறம்பே-சுபவனே.

17. அனைத்துப் புறம் பேசுபவனிலும் மிகக் கொடியவன் குழப்பம் விளைவிப்பவனே.

18. அனைவரிலும் பெரும் விரோதி மக்களுக்குத் தக்கவாறு பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மாற்றிப் பேசி மக்களைக் காக்காய் பிடிப்பவனே!

19. அனைவரிலும் மிகப் பாவியானவன் குர் ஆனையும் ஹதீஸையும் மறுப்பவனே!

20. அனைத்திலும் மன்னிக்க முடியாத குற்றம் இறைவனுக்கு இணை வைத்தலே.

## பணிவு கொள்ளுங்கள்!

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

எவர் இறைவனுக்காகப் பணிவோடு நடக்கிறாரோ அவரை இறைவன் மேன்மைப்படுத்துகிறான். எவர் பெருமை கொள்கிறாரோ அவரை இறைவன் தாழ்மைப் படுத்துகிறான்:.

-அல்ஹதீஸ்

மனிதர்கள் ஒவ்வொருவர் தலையிலும் இரண்டு சங்கிலிகள் பிணைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று ஏழாவது வானத்திலும், பிறிதொன்று ஏழாவது பூமியிலும் சொருகப்பட்டுள்ளது. எவர் இறைவனுக்காக பணிந்து நடக்கிறாரோ அவரை அல்லாஹ் ஏழாம் வானத்தளவில் உயர்த்திவிடுகிறான் எவர் பெருமை கொள்கிறாரோ அவரை ஏழாவது பூமிவரை தாழ்த்தி விடுகிறான்.

-அல்ஹதீஸ்

சங்கை என்பது இறைவனை பயந்து நடப்பதிலும் சீமான் தனமென்பது இறைவனைப்பற்றி (நன்நம்பிக்கை) உறுதி கொள்வதிலும், சிறப்பு என்பது பணிந்து நடப்பதிலும் உண்டாகும்.

-அல்ஹதீஸ்



தாழ்மை என்பது நபிமார்களின் குணங்களில் நின்று முள்ளதாகும். பெருமை என்பது பிர்ஔன் போன்றவர்களின் குணங்களில் நின்றுமுள்ளதாகும். -அல்ஹதீஸ்

தாழ்மையாகப் பணிவுடன் நடப்பவர்களைக் கண்டீர்களாயின் நீங்களும் அவர்களிடம் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். -அல்ஹதீஸ்

பணிவு கொள்வதின் சிறப்பானது ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைக் காணும்போது அவருக்கு ஸலாம் சொல்லுவதும் அவையில் மரியாதையாக ஒதுங்கி இருப்பதை விரும்புவதுமாகும். -அல்ஹதீஸ்

இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி, "ஓ மூஸாவே! எவனொருவன் என் பெருமைக்குப் பணிவு கொள்கிறவனாயும், மற்ற ஜனங்களிடத்தில் பெருமை கொள்ளாதவனாயும் தன் மனதில் என்னைப் பற்றி பயம் கொள்கிறவனாயும் எல்லா நாட்களையும் என் ஞாபகத்தில் கழிக்கிறவனாயும் என்னை பயந்து இச்சை களை விட்டும் தவிர்ந்து கொள்கிறவனாயும் இருக்கிறானோ அவனுடைய வணக்கங்களை நான் ஏற்றுக் கொள்வேன் என்று இறைவன் நபி மூஸா (அலை) அவர்களுக்கு வஹி அறிவித்ததாக நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

சங்கை என்பது அல்லாஹு தஆலாவுக்குப் பயப் படுவதிலும், மேன்மை என்பது பணிவு கொள்வதிலும் செல்வமென்பது உண்மை கொள்ளல் என்னும் மன வுறுதியிலும் இருக்கிறது. அல்ஹதீஸ்

இப்னு சம்மாக்கு ரஹிமஹுல்லாஹு அவர்கள ஹாரூன் ரஷீது என்னும் அரசரை நோக்கி, "யா அமீறல் மூமினீன்! பெருமை பொருந்தியிருக்கிற நீர் பணிவு கொள்வது உங்களுடைய பெருமையினும் மிகப்பெருமையா யிருக்கிறது" என்று சொல்ல அதற்கு ஹாரூக் ரஷீது அவர்கள் இபுனு சம்மாக்கு (ரலி) அவர்களை நோக்கி

"மிகவும் நல்ல வார்த்தை சொன்னீர்கள்" என்றார். அப்போதவர்கள், யா அமீறல் மூமினீன் அவர்களே அல்லாஹுத்த ஆலா ஒரு மனிதனுக்குப் பொருளையும் அழகையும் பெருமையையும் கொடுத்து அந்த மனிதன் அந்தப் பொருளில் மற்றவர்களுடைய மனங்களை சந் தோஷப்படுத்துகிறவனாயும், அந்த பெருமையில் பணிவு கொள்கிறவனாயும் அந்த அழகில் தன்னைப் பேணிக் காப்பவனாயும் இருப்பானாகில் அல்லாஹுத ஆலா வின் வணக்கக்காரர்களில் ஒருவராக அவன் பெயரை வானவர்கள் எழுதுவார் என்று சொன்னார்கள்.

சங்கையுள்ளவன் வணக்கவாளியானால் பணிவு கொள்வான். அற்பனாகிய ஈனன் வணக்கவாளியானால் பெருமைகொள்வான். என யஹ்யா இப்னுல் காலிது (ரஹ்) அறிவிக்கிறார்கள்.

தவ்ஹீதை (இறைபக்தி) உடையவர்கள் பணிவு கொள்வது பெருமையாய் இருக்கிறது என ஜுனைதுல் பக்தாதிய்யி (ரஹ்) அறிவிக்கிறார்கள்.

அல்லாஹு தஆலா எந்த மனிதனுக்குசங்கையை அதிகப்படுத்தினானோ அவனேயன்றி மற்ற ஒருவனும் பணிவு கொள்வதில்லை. "இன்னும் தலையில் கடிவாளக் கயிறு மாட்டாதபடி எந்த மனிதனுமில்லை, அந்த கயிறு இரண்டு மலக்குகளுடைய கையில் இருக்கிறது" அவன் பணிவுகொண்டால், அவர்கள் அந்தக் கயிற்றை மேலாக இழுத்து, "எங்கள் ஆண்டவனே! இவனை உயர்த்தி மேன்மையுள்ளவனாயிருக்கவை, என்று சொல்கிறார்கள் என்றும் அவன் பெருமையடிப்பானாகில் அவர்கள் அந்தக் கயிற்றைக் கீழாக இழுத்து, "எங்கள் இறைவா! இவனை தாழ்த்திக் கீழ்மையுள்ளவனாய் இருக்கவை" என்றும் சொல்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.



## பெருமை கொள்ளாதீர்கள்

வாசக நேயர்களே! பெருமை என்பது மனிதனின் பண்பைக் கெடுக்கும் ஒரு பாதகச் செயலாகும். அதை விட்டொழித்த மனிதர்களே மக்களில் மாணிக்கமாக மாபெரும் மேதைகளாக தோன்ற முடிகிறது. பெரு மையாளர்களைப் பற்றி அல்லாஹுதஆலாவால் திருக்குர் ஆனிலே கூறப்பட்டிருப்பதை கவனிப்போமாக:

அல்லாஹுதஆலா, வம்பரான பெருமைக்காரருடைய உள்ளங்கள் அனைத்திலும் முத்திரை வைத்து விடுகிறான்.

-அல்குர் ஆன்

கர்வங்கொண்ட வம்பர்களெல்லாம் கெட்டொழிந் தார்கள்.

-அல்குர் ஆன்

கியாமத்து நாளில் ஈமான் கொள்ளாத கர்வங் கொண்ட அனைவர்களைவிட்டும் எனக்கும் உங்க ளுக்கும் இறைவனான அல்லாஹ்விடம் காவல் தேடு கிறேன்.

-அல்குர் ஆன் 101.

அன்பனே! இதுவரை இறைமறையில் உள்ள கருத் தை கவனித்தோம். அடுத்து பண்பைக்கெடுக்கும் பாதக உணர்வான பெருமையை விட்டொழிக்க நம் பெரு மானார் (ஸல்) அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை கவனிப்போம்.

எவருடைய உள்ளத்தில் கடுகளவேனும் பெருமை இருக்கிறதோ அவர் சுவர்க்கம் புகமாட்டார். எவர் உள்ளத்திலே கடுகளவு ஈமான் இருக்கிறதோ அவர் நரகம் புகமாட்டார். -அல்ஹதீஸ்

எவர் ஆண்டவனுக்கு அடிபணிகின்றாரோ அவரை அவன் உயர்த்துகிறான், மேலும் எவர் பெருமை கொள்கிறாரோ அவரை அவன் வீழ்த்துகிறான்.

இறைவன் இப்லீஸை சொர்க்கலோகத்திலிருந்து வெளியேற்றியதற்கு காரணம் அவன் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸஜ்தா செய்ய மறுத்ததுதான் என்பது மட்டுமல்ல, பின் என்ன காரணம்? மண்ணால் படைக்கப்பட்ட ஆதமுக்கு நாம் ஸஜ்தா செய்வதா...? என்று பெருமைப்பட்டுக்கொண்டான் என்பதேயாகும்.

ஆறு வகையான ஜனங்களுக்கு ஆறு வகையான அம்சங்கள் இருப்பது அழகில்லை. அவை;:

1. ஏழைகளுக்குப் பெருமை அழகில்லை.
2. உலமாக்களுக்குப் பேராசை அழகில்லை.
3. அரசர்களுக்கு அவரசம் அழகில்லை.
4. செல்வ சீமான்களுக்கு கஞ்சத்தனம் அழகில்லை.
5. மேதைகளுக்கு மாண்பற்ற செயல் அழகில்லை.
6. உயர் வம்சத்தாருக்கு வஞ்சிப்பது அழகில்லை.

சிந்தித்துப் பார் மனமே! நீ உயரிய இடத்தில் அமர்ந்திருப்பதை எண்ணி மகிழ்ந்திடாதே! சுவர்க்கத்தில் சுகித்திருந்த ஆதம் (அலை) அவர்களுக்கு என்ன விளைந்தது பார்த்தாயா? அதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப்பார். உன்னுடைய வணக்கத்தைப் பற்றியும் கல்வியைப் பற்றியும் பெருமைகொள்ளாதே! இப்லீஸானவன் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வணக்கம் புரிந்தவன். அல்லாஹ் அவனுக்கு அனைத்து வகையான அறிவையும் ஆற்றலையும், கல்வியையும் அருளி இருந்தான், அதனால் அவன் மலாயிக்கத்துமார்களுக்கெல்லாம் தலைவனாகவும் ஆக்கப்பட்டான். அஸாஜீல் என்ற உயர்ந்த சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தான். இவ்வளவு



பேறு பெற்றும் இறுதியில் அவன் கதி என்னவாயிற்று? அவன் கொண்ட பெருமையல்லவா அவனை வீழ்த்தியது.

ஆம், பட்டமும் பதவியும் பெற்றவுடன் அனைவரும் நம் பாதங்களை முத்தமிட்டு கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டும் என்று எண்ணி இறுமாந்து பெருமை கொள்ளும் இதயங்களை இன்று உலகில் பார்க்கிறோம். பொன்னும் பொருளும் குவிந்த பின் மண்ணிலுள்ள மனிதர்களில் பலர் தன் மனம்போன போக்கில் போகும் பொடு போக்கை பார்க்கிறோம்.

கல்வியைக் கற்றவனும் செல்வத்தைப் பெற்றவனும் தன்னிலே உயர்ந்ததற்கு தானே காரணம் எனத் தருக்கித் திரிகிறான். உயர்ந்த நிலையின் உச்சிப்படியை எட்டிப் பிடித்ததும், தனக்கு நிகர் தானே எனக்கொட்டமடிக்கிறான். உருவத்தால் உயர்ந்தவன் கர்வத்தால் தாழ்கிறான். பட்டு மெத்தையிலே புரளும் போது பண்பையும் புரட்டி விடுகிறான்; எட்டுத்திக்கும் அவனை ஏற்றிப் போற்றியதும் ஏகனாக தன்னையே எண்ணிக்கொண்டு ஏமாறுகிறான்.

இறைவன் ஹதீஸ் குத்ஸியில், ஆதமுடைய மக்களே உங்களை நான் மண்ணால் படைத்திருக்கிறேன். நீங்கள் மீளும் ஸ்தலமும் மண்தான். ஆதலால் வம்சத்தையும் பொருளையும் குறித்து என் அடியார்களிடத்தில் பெருமை கொள்ளாதீர்கள். அவ்வாறு பெருமை கொள்வீர்களாயின், நீங்கள் என்னிடம் அணுவைப் பார்க்கினும் மிக அர்ப்பமாகி விடுவீர்கள். கியாமத்து நாளில் உங்களுக்கு கூலி கொடுக்கப்படுவதெல்லாம் உங்களின் செயல்களைக் கொண்டுதான் வம்சங்களைக் கொண்டல்ல. இவ்வுலகில் பெருமை கொள்பவர்களை கியாமத்து நாளில் அணுவைப் போலாக்கி விடுவேன். பூமியில் மிருகங்கள் வைக்கோல்களை மிதித்து நடந்தது போல ஜனங்கள் அவர்களை மிதித்து நடக்கச் செய்திடுவேன்

என இறைவன் கூறியிருப்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களிடத்தில் இருவர் தங்கள் வம்சத்தையும் குலத்தையும் குறித்துப் பெருமை அடித்துப்பேசினர். அவ்விருவரில் ஒருவர் நான் இன்னார் மகன் இன்னார் என ஒன்பது தலைமுறை களை அடுக் கடுக்காக எண்ணிவிட்டார். அப்பொழுது இறைவன், அவ்வொன்பது பேர்களும் நரகில் இருக்கிறார்கள், நீ பத்தாவது நபராக இருக்கிறாய் என்று அறிவிக்கும்படி ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு வஹி அறிவித்தான்.

நிச்சயமாக இறைவன் பெருமைக்காரர்களை நேசிப் பது கிடையாது.

பெருமைக்காரர் ஒதுங்குமிடம் நரகமாக இருக் கிறது.

- அல்குர் ஆன்

தனக்காகத் தன் மனத்துடன் போராடுபவன் மாண்பு பெறலாம், ஆனால் இறைவனுக்காகத் தன் மனத்துடன் போராடுபவன் இறைவனையே பெற்றுக் கொள்ளலாம் என்கிறார்கள் உவைஸுல்கறனீ.

வாசக நேயர்களே! பெருமைபற்றி உண்டான கருத் துரைகளை இதுவரை படித்துத் தெரிந்தீர்கள். அந்தப் பெருமையினால் சிறுமையடைந்து, சீரழிந்த ஒரு சிலரின் சரித்திரங்களை இங்கு சான்றாகத் தருகிறேன்.

ஷத்தாத் என்பவன் மாபெரும் பேரரசன். உலகில் உள்ள புதைப்பொருள்களெல்லாம் அவன் கண்களுக்குத் தெரியும்படியான ஒரு சக்தியை இறைவன் அவனுக்குக் கொடுத்திருந்தான். அவனிடம் செல்வங்கள் மலைபோல் குவிந்திருந்தன. அவனின் பெயரைக் கேட்டோரெல்லாம் தலை வணங்கி நின்றனர், அனைத்தும் தன்னாலே, தரணியெல்லாம் தன் பின்னாலே என்று பெருமை யடித்துப் பெரும் புகழ் தேடி வந்தான். இதனால்



இவ்வுலகில் பெரும் சுவர்க்கத்தையே கட்டத் திட்டமிட்டான்.

வைரங்களையும், வைடூரியங்களையும் வரவழைத் தான், முத்தையும் பவளத்தையும் கொண்டு கட்டினான். மாணிக்கங்களையும், மரகதங்களையும் மழைபோல் கொட்டினான். மாளிகையின் ஒவ்வொரு பகுதியிலும் பொன்னையும் மணியையும் நாலா பக்கங்களிலும் தூண்களில் நவரத்தினங்களையும் பதித்தான். அவனின் நாட்டமும் நிறைவேறியது. சுவர்க்கத்தையும் கட்டி முடித்தான். பார்ப்பவர்களுக்கு இன்னும் பத்துக் கண்கள் இருந்தாலும் பார்த்து ரசிக்கலாமே என்று எண்ணி ஏங்குமளவிற்கு வண்ணங்கள் தீட்டியிருந்தான். ஆனால்... அந்தப் பெருமைகொண்ட பேராசைக் காரனின் இறுதி நிலை...!

அவன் கட்டிய சொர்க்கத்தைக் கண்டு களிக்க மக்கள் கடலாகத் திரண்டு இருந்த நேரத்தில் தான் அமைத்த சுவர்க்க மாளிகையின் தலைவாயிலில் தன் பாதம் பதியும் முன் தலைகுப்புற வீழ்ந்து மடிந்தான். அவனின் பெருமையும் புகழும் அவன் சவத்திற்கு எதிர் நின்று எள்ளி நகையாடின, தன் எண்ணப்படி மலர்ந்த வண்ண மாளிகையை கண்டு களிக்கக்கூட ஹக்கன் அவனைவிட்டு வைக்கவில்லை.

அதுபோன்றே மிஸ்ரு தேசத்தின் அரசனான பிர்ஔன் தன்னையே இறைவனென்று வாதித்தான். மக்களெல்லாம் தன்னையே போற்ற வேண்டும். வணங்க வேண்டுமென எண்ணிப் பெருமை கொண்டான், தன் கொள்கைக்கு விரோதமான மூஸா (அலை) அவர்களை எதிர்த்தான். அவர்களை அழித்து விடவும் கங்கணம் கட்டினான். அவர்களை முடித்துவிட எண்ணி படை களுடன் துரத்தினான்; மூஸா நபியவர்கள் தப்பிச் செல்ல நைல்நதி முட்டுக்கட்டையாக இருந்தது. இறைவன் தன்

தூதரைக் காப்பாற்ற நைல்நதியின் நடுப் பகுதியை பிளக்கீ வைத்து பாதைகளை அமைத்து அக்கரையை அடையச் செய்தான். பிந்தி வந்த பிர்ஔன் அதே பாதைக்குள் பாய்ந்தான் பாதை தண்ணீரால் மூடியது. அதன் அசுர சுழலில் ஆழ்ந்து மாய்ந்தான். தன் கர்வத்தின் பெரு மையால் உண்மையை ஒழிக்க முயன்ற பிர்ஔன் மாய்ந்தொழிந்தான்.

ஹஜ்ரத் உத்தமர் உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை கூறி இப்பகுதியை நிறைவு செய்கிறேன்.

கலீபா அவர்கள் காலத்தில் வாழ்ந்த ஹஜ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இஸ்லாம் கண்ட இணையற்ற வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். யானை பலம் கொண்ட வீரர்களையும் பானையை நொறுக்குவது போல் நொறுக்கி வானை நோக்கி அனுப்பிய அந்த சேனைத் தளபதியை இத்தரணியின் தன்மான சிங்கங்கள் என்றும் மறக்க முடியாது. அப்படிப்பட்ட காலித் (ரலி) அவர்களை ஒரு புலவன் புகழாரம் தொடுத்து புகழ்ந்து பாடிவிட்டான். அதனால் காலித் (ரலி) அவர்கள் களிப்படைந்து அப்புலவனுக்கு ஒரு பொன்முடிப்பையும் பரிசாக அளித்தார்கள். அத்தோடு அவர்களின் சேனை வீரர்களும் தன் தளபதியின் வீரத்தையும் தீரத்தையும் புகழத்துடங்கி விட்டார்கள்.

இந்நிலையைக் கேள்வியுற்ற கலீபா (ரலி) அவர்கள் அத்தருணத்திலேயே காலித் (ரலி) அவர்களை தளபதி பதவியிலிருந்து விலக்கி சாதாரண வீரர்களில் ஒரு வராகப் பணியாற்றும்படி ஆணை பிறப்பித்தார்கள். ஏன் தெரியுமா? அனைத்து வெற்றிகளுக்கும் மூலக் காரணம் இறைவனேயாகும். அவனே பெருமைக் குரியவன் என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்து வான் வேண்டுமென் பதே அதன் உள்நோக்கம்.



காலித் (ரலி) அவர்கள் தன் வீரத்தைக்கொண்டு பெருமையோ, கர்வமோ கொள்ளவில்லை. என்றாலும் எல்லா பெருமையும் இறைவனுக்கே உரியது என்ற எண்ணத்தில் சிறிதுகூட மக்கள் மாறுபடக் கூடாதே என்பது கலீபா அவர்களின். எண்ணமாகும். இதனாலேயே உமர் (ரலி) அவர்களின் ஆட்சிகாலம் உலக அரசியல் நாடுகளுக்கே கலங்கரை விளக்கமாக திகழ்ந்தது. இதனாலேயே உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலம் உலக அரசியல் நாடுகளுக்கே கலங்கரை விளக்கமாக திகழ்ந்தது. கலீபா அவர்கள் ஆணவம், அகம்பாவம், அகப்பெருமை என்ற ஷைத்தானிய கொள்கைகளை விட்டொழித்ததால் உலகம் இன்றளவும் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறது. நம்மால் நாம் பெருமை பேசிக்கொள்வதில் பெருமை ஏற்படும் என்று நினைப்பது அறியாமையாகும்; நம் செயலால் நம்மை பெருமை படுத்தவேண்டும் அதுவே அறிவுடைமை.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேற்கில் ஆப்பிரிக்க வடக்கு பகுதியிலிருந்து கிழக்கில் இந்தியா வரையிலும் வடக்கில் குராஸானிலிருந்து தெற்கே அபிஸீனியா வரையிலும் உள்ள நாடுகள் அனைத்திற்கும் சக்கர வர்த்தியாக இருந்தார்கள். அப்படியிருந்தும் அவர் களிடம் ஒரு சிறிதளவும் பெருமை இருந்தது கிடையாது. அவர்களின் சட்டையில் பல ஒட்டுகள் போடப் பட்டிருந்தது. அவர்களின் படுக்கை வெறும் ஓலைப்பாய் தான். சில சமயங்களில் மரத்து நிழலின் மணலில் துண்டை விரித்து படுத்துக்கொள்வார்கள்.

அத்தகைய உத்தமர்களின் வழிகளை எண்ணிப் பார்ப்போமாக. அவ்வழியில் நடக்க முற்படுவோமாக.

## பொறுமை கொள்ளுங்கள்

ஈமான் கொண்ட விசுவாசிகளே! பொறுமையைக்கொண்டும் தொழுகையைக் கொண்டும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.

**-அல்குர் ஆன்**

வாசக அன்பர்களே! மேற்கண்ட திருவசனத்தில் இறைவன் பொறுமையாளர்களுடன் தான் இருப்பதாகக் கூறுகிறான் என்றால் அந்தப் பொறுமையின் மகத்துவத்தை நன்கு உணர்ந்து பாருங்கள். அடுத்து பொறுமையைப் பற்றி இறைவன் ஹதீஸ் குத்ஸியில் கூறுகிறான்.

எனது அடியானை அவனுக்குப் பிரியமான இரண்டு வஸ்துவைக் கொண்டு சோதிப்பேன். அவன் அச் சோதனையில் பொறுமையாக இருப்பானேயாயின் அவனுக்கு நான் சுவர்க்கத்தைப் பகரமாக்குவேன்.

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

உடலுக்குத் தலையிருக்கும் அந்தஸ்தில் ஈமானுக்குப் பொறுமை இருக்கிறது.

**-அல்ஹதீஸ்**

பொறுமையானது அது முழுதும் நன்மையாக அமைந்திருக்கிறது.

**-அல்ஹதீஸ்**

கியாமத்து நாளில் "பொறுமையாளர்கள் எங்கே என்று ஒரு மலக்குக் கூப்பிடுவார். சில பேர் எழுந்து சுவர்க்கத்தை நோக்கிச் செல்வார்கள். அப்பொழுது அங்குள்ள மலக்குகள் "நீங்கள் யார்? என்று கேட்பார்கள். அதற்கு நாங்கள் "தான் பொறுமையாளர்கள் என்று பதிலுரைப்பார்கள். அதைக்கேட்ட அம்மலக்குகள்



நீங்கள் சுவர்க்கம் புகுங்கள்" என்று அம்மனிதர்களைப் பார்த்து சுபச் செய்தி கூறுவார்கள்.

**-அல்ஹதீஸ்**

பொறுமைகொண்ட உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக. எனவே (மறுமையின்) வீடு உங்களுக்கு நல்லதாகி விட்டது.

**-அல்குர் ஆன்**

மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமாகினார்கள். பொறுமை மூன்று செயல்களில் நிலைத்திருக்க வேண்டும். பாவம் செய்யாமல் சகித்து இருப்பதின் பேரில் பொறுமை கொள்ளல்.

இறைவனின் கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற சிரமத்தின் பேரில் பொறுமை கொள்ளல். அல்லாஹ்வினால் அளிக்கப்பட்ட சோதனைகளின் பேரில் பொறுமை கொள்ளல்.

**-அல்ஹதீஸ்**

சிறிது நேரம் பொறுமையாய் இருப்பதானது புவியின் பொருள்கள் அனைத்தையும் விடவும் சிறந்ததாகும்.

**-அல்ஹதீஸ்**

மூஸா (அலை) அவர்களுக்கு வஹியின் மூலம் "ஓ...மூஸாவே! எனது திருஷ்டாந்திரங்களை ஒப்புக்கொள்ளாதவனும், எனது நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்தாதவனும், எனது சோதனையின் பேரில் பொறுமை கொள்ளாதவனும் எனது வானத்தைவிட்டு வெளியேறி வேறு இறைவனைத் தேடிக் கொள்ளட்டும்" என அறிவித்ததாக நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்.

**-அல்ஹதீஸ்**

எவனொருவனுக்கு தனது பொருளிலோ, உடலிலோ, பிள்ளைகளிலோ ஏதாகிலும் ஒரு சோதனை ஏற்பட்டு அதற்காக அவன் பொறுமை கொள்ளவில்லை என்றால் கியாமத் நாளில் அவனது அமலைத் தராசில் நிறுக்கவும் அவனின் பட்டோலையை விரிக்கவும் நான் வெட்கப்படுகிறேன் என இறைவன் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மஷாய்க்மார்கள் (பெரியோர்கள்) கூறுகிறார்கள்:

அடியார்கள் நான்கு விஷயங்களில் பொறுமை கொள்ளவேண்டும்.

1. பர்ளான (இறைவனால் கடமையாக்கப்பட்ட விஷயங்களை நிறவேற்றுவதில் ஏற்படும் கஷ்டங்களிலும்-

2. சங்கடம் ஏற்பட்டால் சகிப்பதின் பேரிலும்

3. மனிதர்களால் ஏற்பட்ட நோவினைகளின் பேரிலும்,

4. வறுமையால் பீடிக்கப்பட்டால் சகிப்பதின் பேரிலும் பொறுமை கொள்ளவேண்டும்.

பர்ளுகளை நிறைவேற்றுவதில் பொறுமை கொள்வதாகிறது, இறைவனின் நல்லுதவியை ஏற்படுத்தும்.

கஷ்டங்களில் பொறுமை கொள்வதானது, அதிகமாக நன்மைகளை வருத்தி வைக்கும்.

மனிதர்களின் நோவினையின் பேரில் பொறுமை கொள்வதாகிறது, மக்கள் மத்தியில் நல்ல பிரியத்தையும் அபிமானத்தையும் உண்டாக்கும்.

வறுமையிலும் பொறுமை கொள்வதாகிறது, ஆண்டவனின் திருப்தியையும் பொருத்தத்தையும் உண்டாக்கும்,



பொறுமையும், ஈமானும் எந்த உள்ளத்தில் இருக்கிறதோ அதுவே இறைவனின் இல்லாமாகும்.

-ஹதீஸ் குத்ஸி

ஷைத்தானை கொல்வதற்கும், இறைவனின் அன்பைப் பெறுவதற்கும் தக்க சாதனம் பொறுமையாக இருக்கிறது.

-மஷாயிகுல் அவ்வலீன்

பொறுமையாளர்களுடன் இறைவன் இருக்கிறான் பெருமையாளர்களுடன் ஷைத்தான் இருக்கிறான்.

-கஸ்ஸாலீ (ரஹ்)

ஒரு சமயம் ஹைறாபாக்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் "யாரசூலல்லாஹ் மீஜான் தராசை அதிகமாக கனக்கச் செய்யும் பொருள் யாது?" என்றார்கள். அதற்குப் "பொறுமை" என நாயகம் (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள். "கேள்விக்கணக்குகளை இலகுவாக்கும் பொருள் யாது?" என்றார்கள். அதற்கும் "பொறுமை" என்று பதிலுரைத்தார்கள், பின் "ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைச் சுலபமாக கடக்கச் செய்யும் பொருள் யாது?" என்றார்கள். அதற்கும் "பொறுமையே" என்று அருமை நாயகம் (ஸல்) பதிலுரைத்தார்கள்.

-அல்ஹதீஸ்

நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் விளங்கிய மூன்று முக்கிய அம்சங்கள்: 1. தூய்மை, 2. எளிமை, 3. பொறுமை, தூய்மை அவர்களின் தூய உள்ளத்தை உலகுக்குக் காட்டியது. எளிமை அவர்களின் ஏழ்மை வாழ்வை அகிலத்தாருக்கு அறிவித்தது: பொறுமை எத்தகைய இன்னல்களையும் இடர்பாடுகளையும் இனிய முகத்தோடு ஏற்று ஈடு இணையற்ற இஸ்லாத்தை உலகிற்குக் காட்டியது. தூய்மை, எளிமை, பொறுமை, ஆகியவை நாயகம் (ஸல்) அவர்களோடு பின்னிப்

பிணைக் கப்பட்டிருந்தன. அதிலும் பொறுமை அவர்களின் ஒப்பற்ற வாழ்வுக்கு பெரிதும் அணிகலனாக விளங்கியது. அப்துல்லாஹ்வின் அருந்தவப் புதல்வராகப் பிறந்தபோதும், கதீஜாவின் அகங்கவர்ந்த மணாளராக மலர்ந்தபோதும், இறைவனின் இறுதித்தூதராக உயர்ந்த போதும், ஒரு சமுதாயத்தின் அமைப்பாளராக, ஒரு சாம்ராஜ்யத்தின் காவலராக, ஒரு சமயத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக வளர்ந்தபோதும் கூட பொறுமை அவர்களின் பொன் னான நெஞ்சில் சுடர்விட்டுப் பிரகாசித்தது. வறுமை கண்டும் பொறுமை கொண்டு அருமைநபியாக திகழ்ந் தார்கள். அன்றைய அராபிய மக்கள் அண்ணல் அவர்களைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்கள். பொறுத்துப் பொறுத்துப் புடம் போட்ட தங்கமாக திகழ்ந்த அண்ணலவர்களின் பொறுமை பற்றி உலகம் வாழ்த்திக்கொண்டே இருக்கிறது.

## மௌனம் கொள்ளுங்கள்

மௌனமாய் இருப்பது சற்றுக் கடினம்தான். ஆனால் அது இறைநேசர்களுக்கு கைவந்த கலையாகும். அந்தக் கலையின் வலையில் நாம் வீழ்ந்த விட்டோமானால் இகபரத்தில் நம் நிலை உயரும். இந்த நாவு இருக்கிறதே இது மிகவும் பொல்லாதது. ஆறு அங்குல நீளமுள்ள இந்த நாக்கை ஆரம்பத்திலேயே அடக்கி ஆளாவிட்டால் ஆறடி நீளமுள்ளமனிதனையும் வீழ்த்தி விடும். இதனால்தான் சிலர் எதையாவது உளறிவிட்டு எக்கச்சக்கமாக வாங்கிக் கட்டிக்கொள்வதைவிட அமைதியாக இருந்து விடுவது மேல் என்று எண்ணுகிறார்கள், நரம்பில்லாத நாவால் வரம்பில்லாமல் பேசி வம்புக்கு ஆளாவதை விட மௌனமாக இருந்து அடக்கம் ஆயிரம் பொன்பெறும் என்னும் பழமொழியை மெய்ப்பிக்கும்படி வாழ்ந்து காட்டிப் பெருமை பெற எண்ணுகின்றனர். ஆன்மீக வாழ்வின் தொடக்கமே இந்த



அடக்கத்தில்தான் அடங்கிக்கிடக்கிறது. இப்படிப் பட்ட இந்த அடக்கம் பற்றி மௌனத்திற்கு மேலும் மெருகு கூட்டும் இந்த மௌனத்தின் மாண்பு பற்றி நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

நாவின் பத்தினித்தனம் வாய்மூடி மௌனமாய் இருப்பதாகும்.

வாய்மூடி இருப்பது இஸ்லாத்தின் தலை போன்றதாகும்.

ஈமானின் பக்தர்களுக்கு இறைநேசமும் கிரீடமும் வாய்மூடி மௌனமாய் இருப்பதாகும்.

ஒரு ஆலிம் மார்க்க விஷயத்தில் மௌனமாய் இருப்பது குற்றமாகும். அவர் பேசுவது சிறப்பாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் நாவைப் பிடித்துக் கொண்டு இதை (தீயவழியில்) உபயோகிக்காமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

-அல்ஹதீஸ்

ஒருசமயம் நான், (முஆத் (ரலி) நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் "நாங்கள் நாவால் செய்வதற்கெல் லாம் மெய்யாகவே குற்றவாளிகளாக்கப்படுவோமா?" என்று கேட்டேன். அப்பொழுது பெருமானார் (ஸல்) என்னை நோக்கி "ஓ...முஆதே! ஜாக்கிரதை. தங்கள் நாவால் அறுவடை செய்ததைத் தவிர வேறு எது மக்களை (நரக) நெருப்பிலே தலைகீழாகத் தள்ளுகின்றது?" என்று கேட்டார்கள்.

-அல்ஹதீஸ்

உங்களில் அளவுக்கு அதிகமாக பேசுவோனும், வீண்பேச்சுப் பேசுவோனும் தற்பெருமையாகப் பேசுவோனும், வளவளப்பாகப் பேசுவோனும் என்னால்

வெறுக்கப்பட்டவன். கியாமத்து நாளையில் அவன் என்னிடமிருந்து வெகு தூரத்தில் இருப்பான் (அல் ஹதீஸ்)

வளவளப்பாக பேசுவோனையும் பசுவைப் போன்று தனது நாவை இயக்குவோனையும் ஆண்டவன் வெறுக்கிறான்.

-அல் ஹதீஸ்

மக்களுடைய மனதைக் கவரச் செய்யும் நோக்கத்துடன் தன் வார்த்தைகளை அடுக்கி மாற்றி (உண்மைக்குப் புறம்பாக) பேசுவோனுடைய தவ்பாவை -பச்சாத்தாபத்தை கியாமத் நாளையில் இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

-அல் ஹதீஸ்

மௌனமாயிருப்பதால் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் கண்ணியமானது, அறுபது ஆண்டு வணக்கத்தை விட மேலானது.

-அல் ஹதீஸ்

இறைவன் மீதும், கியாமத் (மறுமை நாள்) மீதும் நம்பிக்கை தரக்கூடிய நல்லதையே மனிதன் பேசுவானாக! அல்லது மௌனமாக இருப்பானாக.

-அல் ஹதீஸ்



அதிகமாகப் பேசாதீர், மெய்யாகவே, ஆண்டவனை நினையாமல் அளவுமீறிப் பேசுவது (உங்களை) கல்நெஞ்சராக்கி விடும். மெய்யாகவே, ஆண்டவனிடத்திலிருந்து வெகுதூரம் விலக்கப்பட்டவன் கல்நெஞ்சுள்ள மனிதனேயாகும்.

-அல் ஹதீஸ்

"பெருமானார் (ஸல்) அவர்களே! எனக்கு ஒரு நல்லொழுக்கத்தைப் போதியுங்கள்" என்று நான் (அபூதர் ரலி) பெருமானாரிடம் விண்ணப்பம் செய்தேன். "நீண்ட நேரம் மௌனமாய் இருக்கும்படி உமக்குப் போதிக்கப்படுகிறது. ஏனென்றால் அது ஷைத்தானைத் துரத்தி விடும். மேலும் உம்முடைய மார்க்க விஷயங்களில் அது உமக்கு உதவியாக இருக்கும்" என்று பெருமானார் (ஸல்) போதித்தார்கள்.

-அல் ஹதீஸ்

வாசக நேயர்களே! இதுவரை மௌனமாய் இருக்க வேண்டிய அவசியத்தையும் அதற்காக நாவைப் பேணிக் கொள்ள வேண்டுமென்ற பெருமானாரின் பொன்மொழிகளையும் கண்டோம். அடுத்து மௌனமாய் இருக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து உங்களுக்கு ஒரு சிறு நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாம் கலீபாவான ஹஜ்ரத் அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்கள் தங்கள் வாழ்நாளில் பெரும்பாலும் மௌனமாய் இருப்பதையே விரும்பினார்கள். அதிகமாய்ப் பேசுவதின் அபாயத்தை பயந்து அதைவெறுத்தார்கள். ஒரு சமயம் உமர் (ரலி) அவர்கள் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களிடத்தில் உரையாடத் துவங்கினார்கள். அது சமயம் அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்கள் தங்களின் வாயிலிருந்த கற்களை எடுத்துவிட்டுப் பேசத்துவங்கினார்கள். அது கண்டு உமர் (ரலி) அவர்கள் "என்ன

காரணத்தால் தாங்கள் வாயில் கற்களை வைத்திருந் தீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு சித்தீக் (ரலி) அவர்கள் "வாய் சும்மா இருந்தால் எதையாகிலும் வீண் பேச்சுக்களை பேசச் செய்யும், வீண் பேச்சுக்கள் பேசுவதால் மனிதனின் உள்ளம் மங்கிவிடும் என்று பெருமானார் (ஸல்) கூறியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆகவே என்னில் வீண் பேச்சுகள் நிகழ்ந்துவிடக் கூடாதே என்பதற்காக என்வாயில் கற்களை வைத்திருக்கின்றேன். தேவைப்படும் போது அவைகளை எடுத்துவிட்டு பேசுவேன்" என்று பதிலுரைத்தார்கள். ஆகவே நாம் மௌனத்தால் அனேக மான அபாயங்களை விட்டும் தப்பிக்கிறோம் என்னும் உண்மையை உணர்ந்து மௌனம் கொள்வோமாக!.

"எவர் மௌனமாய் இருந்தாரோ அவர் ஈடேற்றம் பெற்றவராவர். எவர் ஈடேற்றம் பெற்றாரோ அவர் ஜெயம் பெற்றவராவார்" என நபி (ஸல்) நவின்றுள்ளார்கள்.

-அல்ஹதீஸ்

## அதிகமாகச் சிரிப்பதின் அபாயங்கள்

சிரிப்பு பலருடைய வாழ்வை சீரழிய வைத்திருக் கிறது. தனது மரிப்புத், தாரணியில் நிகழப் போகிறது என்பதை எண்ணிப் பார்த்தும் எப்படித்தான் சிரிப்பு வருகிறதோ சிலருக்கு. துன்யாவில் துடிக்கும் உயிர்களைப் பார்த்த பின்னும் சிரிப்பு வரத்தான் செய்யுமா...? ஆனந் தத்தின் எல்லையிலும் அளவோடு சிரிப்பதே அழகு! புன்னகைத் தவழும் மென்மையான சிரிப்பு பொன்ன கையின் அழகையும் மிஞ்சிவிடும் ஆற்றல் வாய்ந்தது. மனதில் ஊறிக்கிடக்கும் மகிழ்ச்சியை மாற்றாருக்கும் தெரியும் வண்ணம் மலர விடுவது தவறல்ல. அகத்தின் ஆனந்தத்தை முகத்தில் மலரவிடுவது குற்றமல்ல. சுற்றி நிற்கும் அனைவரிடமும் சுந்தரப்பார்வையை சுழல



விட்டுபூரிப்போடு சிரிக்கும் புன்சிரிப்பு மாற்றார் மனதிலும் மகிழ்ச்சியை மலரவிடும் என்பதில் மறுப் பேதுமில்லை. உண்மையையே உரைக்கும் அந்த மென்மையான உதட்டிலிருந்து உதிரும் மெல்லிய மகிழ்ச்சி ஒலி, யாருக்கும் கோபத்தைக் கொடுக்காது, ஆனால் உடலின் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு அலைகடல் போல ஆர்ப்பரிக்கும் சிரிப்பு, இடிச் சிரிப்பு நம்மை விலங்கு நிலைக்குக் கொண்டு போய் விடும். இப்படிப்பட்டச் சிரிப்பைப்பற்றி நாயகம் (ஸல்) கூறும் கருத்துக்களைக் கேட்போம். அவர்கள் கூறுகி றார்கள்:

அதிகமாகச் சிரிப்பது மனதை மரணிக்கச் செய்து விடும்.

பள்ளியிலிருந்து சிரிப்பது கப்ரை (மண்ணறையை) இருளாக்கிவிடும்.

அதிகமாக அலறிச் சிரிப்பது அறிவை மங்கச் செய்து மறதியை உண்டு பண்ணிவிடும்.

"ஹஹ் ஹஹ் ஹா" என்று அலறிச் சிரிப்பவனை அல்லாஹ் தனது அர்ஷுக்கு மேலிருந்து சபிக்கிறான்.

நான் அறிந்த அளவிற்கு நீங்கள் அறிந்திருப்பீர் களானால் கொஞ்சமாகச் சிரிப்பீர்கள். அதிகமாக அழு வீர்கள்.

இம்மையில் அதிகமாகச் சிரித்தவன், மறுமையில் அதிகமாக அழுவான். உலகில் அதிகமாக அழுதவன் ஆகிரத்தில் அதிகமாகச் சிரிப்பான்.

எவர் ஒருவர் பிறரைச் சிரிக்க வைக்க வேண்டு மென்று பேசுகிறாரோ அவரின் பெயரை அல்லாஹ் நரகத்தில் எழுதுகிறான்.

நபிமார்களின் சிரிப்பானது சப்தமில்லா புண் சிரிப்பாகும். ஷைத்தானின் சிரிப்பானது "ஹஹ்ஹ ஹ்ஹா" என்ற வெடிச் சிரிப்பாகும்.

ஆகவே அல்லாஹ்வின் அடியானே அளவோடு சிரிபிறர் சிரிப்பதற்காகப் பேசுவதைவிட சிந்திப்பதற் காகப் பேசு. இதனால் உன் வாழ்வில் வளம் பெறுவாய் மகிழுறுவாய்.

## நாயகம் (ஸல்) கூறிய நல்லுரைகள்

1. ஓ...அலியே! நீர் காலையிலும், மாலையிலும் மஃரிப், இஷா இரண்டிற்கும் இடைப்பட்ட நேரத்திலும் இருள் சூழ்ந்த இடத்திலும் உறங்கா தீர்.
2. உட்கார்ந்திருப்போருக்கு மத்தியிலும்படுத்து உறங்காதீர்.
3. கன்னத்தில் கைவைத்து உட்காராதீர்.
4. இடது கரத்தால் உண்ணல், குடித்தல் போன்ற வற்றை செய்யாதீர்.
5. உலோபிகளின் மத்தியில் உட்காராதீர்.
6. விரல்களை நெட்டி முறிக்காதீர்.
7. தொழுகையில் இருக்கும்போது வானத்தை நோக்காதீர்.
8. இரவில் கண்ணாடி பார்க்காதீர்.
9. பற்களுக்கிடையில் சிக்கிக் கொண்டதைக் குத்தித் தின்னாதீர்.
10. மலஜலத்தில் எச்சில் உமிழாதீர்.



11. உணவுப் பொருள்கள் எலும்பு, அடுப்புக் கரி, கண்ணாடி துண்டு முதலியவைகளால் மலஜலம் கழித்துத் துப்புரவு செய்யாதீர்,
12. உணவு உண்டுவிட்டு கை அலம்பாமல் உறங் காதீர்.
13. உட்கார்ந்துகொண்டு தலைப்பாகை அணியா தீர்.
14. நின்றவண்ணம் கால் சட்டை அணியாதீர்.
15. கடினமான பொருள்களைப் பல்லால் கடிக் காதீர்.
16. தொழுகையில் ஸுஜூது செய்யுமிடத்திலும் சூடான ஆகாரத்திலும் வாயினால் ஊதாதீர்.
17. பூமி அதிரும்படி நடக்காதீர்.
18. நடக்கும்போது திரும்பி பார்க்காதீர்.
19. எவரையும் இழிவாகவோ, தாழ்வாகவோ பரிகசிக்காதீர்.
20. அண்டை வீட்டாரைத் துன்புறுத்தாதீர்.
21. உமது நேயர்களை வெறுத்துக் கோள் சொல் லாதீர்.
22. மலஜலம் கழிக்கும்போது பேசாதீர்.
23. பாங்கு இகாமத்திற்கிடையில் பேசாதீர்.
24. பிறரின் குற்றங்குறைகளைத் தேடித்திரியாதீர்.
25. நண்பர்கள்மீது வீண் சந்தேகம் கொள்ளாதீர்.
26. எந்த நிலையிலும் உண்மையையே உரைப்பீர்.
27. பகைவர்களை எளிதில் நம்பி விடாதீர்.
28. பெருமை கொள்ளாதீர்.
29. பேராசை கொள்ளாதீர்.

30. யாசிப்போரை விரட்டாதீர்.

31. உமது உணவைப்பற்றி துக்கம் கொள்ளாதீர்.

32. உமது ஆலோசனை முடிவுகளை சிறந்தோரிடம் கூறி ஆலோசனை செய்யும்.

33. அனாதைகள் விஷயத்தில் நீதமாய் இருந்து கொள்ளும்.

34. ஆகாரத்தை அதிகமாக வாயில் நுழைய வைத்து உண்பதைத் தவிர்த்துக் கொள்ளும்.

35. இருளில் உண்ணாதீர்,

36. தனித்துப் பயணம் செய்யாதீர்.

37. ஆகாரத்தை நுகர்ந்து பார்ப்பதை தவிர்த்துக் கொள்.

38. விலக்கானவற்றை (ஹராமானவற்றை) நோக்குவதை விட்டும் பேணிக்கொள்.

39. எதையும் பிறருக்குப் புரியும்படி பேசுவீராக.

40. பிறரின் (விருந்து) அழைப்பை ஏற்றுக்கொள்.

41. இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்.

42. பிறரையும் நன்மையின் பால் தூண்டுவீராக.

43. பிறர் உனக்கு தீங்கு செய்யினும் அவருக்கு நீர் நன்மையே செய்வீராக.

44. தினமும் நூறு முறை மன்னிப்புத் தேடி கொள்வீராக.

இறைவன் கூறுகிறான்: "மன்னிப்பு என்பது என் அடியார்களுக்கு நான் செய்கின்ற கிருபைகளில் மாபெரும் கிருபையாகும். தன் தவறுகளை உணர்ந்து மன்னிப்புக்கேட்டுத் திருந்திக்கொண்டவனே என் சமூகத்தில் மிகச் சிறந்த அடியானாகும்.



45. அதிகமாக உறங்காதீர். ஏனெனில் அதனால் நேயம் மரித்துக் கைதேசம் ஏற்படும்.

46. நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பீராக.

47. துன்பம் வந்தபோதிலும் பொறுமை கொள்வீராக.

செய்யவேண்டிய ஒவ்வொரு செயலின் தன்மையும் எப்படி இருக்கவேண்டுமென்பதை எவ்வளவோ திண்மையுடன் நபி (ஸல்) தீட்டித் தந்துள்ளார்கள். அவைகளில் ஏதோ ஒரு சிலவற்றை அன்பர்களுக்கு அகம் சுவைக்கத் தந்தேன்! சுவைத்தவற்றை சுகவாழ்வில் அமைத்து வாழ அல்லாஹ் அருள்வானாக! ஆமீன்!

## என் உம்மத்தில் இப்படி ஒரு காலம் வரும்

வள்ளல் நபி (ஸல்) வம்பான வார்த்தைகளை வழங்கியதாக வரலாறே கிடையாது. தேவையான நேரத்தில் தேவையான விஷயங்களை தெள்ளத் தெளிவாக அள்ளித் தெளித்தார்கள். மற்ற நேரங்களில் மௌன நபி மௌனமாகவே தங்கள் காலத்தைக் கழித்தார்கள். அவர்களது ஒவ்வொரு சொல்லும் செயலும் அரியதோர் படிப்பினையை அகிலத்திற்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் எதைச் சொன்னார்களோ அதையே செய்தார்கள். எதைச் செய்தார்களோ அதைச் சொன்னார்கள். ஆனால் இன்று செய்யமுடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான். நபி (ஸல்) அவர்கள் சாதிக்கவும் செய்தார்கள் போதிக்கவும் செய்தார்கள். போதனை பெரியதா? சாதனை பெரியதா? என்று ஒன்றிலிருந்து ஒன்றை இனம் பிரித்துப் பார்க்க முடியாதபடி அவர்களது வாழ்வும், வாக்கும் பின்னிக் கிடந்தன.

இறைவன் அருளிய திருமறைப்படி வாழ்ந்துகாட்ட முடியுமா? என்ற வினாவுக்கு விடையாக வாழ்ந்து காட்டினார்கள் அந்த வள்ளல் நபி. அந்த கருணை

நபி(ஸல்) அவர்களின் கண்ணிய வாழ்வை கண் திறந்து கருத்துடன் படித்து பார்த்தால் கரையாத கல்நெஞ்சமும் கரைந்து விடும். நிறையாத குறை நெஞ்சமும் நிறைந்துவிடும். அறிஞனுக்கும்-வறிஞனுக்கும்-அரசனுக்கும் -ஆண்டிக்கும் குருவுக்கும்-சீடனுக்கும் இன்னும் வாழ்வில் எந்தெந்த படிகளில் இருக்கிறார்களோ அத்தனை பேர்களுக்கும் அவர்களது வாழ்வு ஓர் ஒளிவிளக்காக மிளிர்கிறது. உலகின் எங்கோ ஓர் மூலையில் முகிழ்ந்த ஒரு அறிவுமலர், அது சிந்திய அறிவுமணம் அகிலத்தின் அனைத்து மக்களின் மனங்களையும் கொள்ளை கொண்டதென் றால் அவர்களின் மாண்புதான் என்னே...! மகத்துவம் தான்என்னே!! என்றோ நடக்கப் போவதையும் அன்றே சொல்லிவிட்டுச் சென்ற அந்த ஒப்புயர்வற்ற தீர்க்க தரிசியின் தேன் உரைகளை, தீன்வழி நடக்கும் உங்கள் திருக் காதுகளும் கேட்வேண்டாமா? இதோ நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

ஓ...அலியே! என் உம்மத்தோருக்கு விரைவில் இப்படி யொரு காலம் வரும். அக்காலத்திலே.....

ஜனங்கள் ஆணவம், அகம்பாவம் முதலிய துர்க்கு ணங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள்.

கல்வி கற்பதை வெறுத்து அறிவிலிகாளகத் திரிவார் கள்.

அநீதம், அக்கிரமம், அழிச்சாட்டியம் செய்வதையே விரும்புவார்கள்; நீதம் பேசத் தயங்குவார்கள்.

நல்லவைகளைக் கெட்டவைகளாகவும், கெட்டவை-களை நல்லவைகளாகவும் கருதுவார்கள்.

முஸ்லிம்கள் இழிவாகவும் காபிர்கள் சங்கைவான் களாகவும் கருதப்படுவார்கள்.

முஸ்லிம்களில் ஒற்றுமை குன்றி வேற்றுமை வேரூன்றி நிற்கும்.



மஸ்ஜிதுகள் நடைபாதைகளாகவும், தூங்குமிடமாக வும் பயன்படுத்தப்படும்.

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டு சர்ச்சைகள் செய்து சபித்துக் கொள்வார்கள்.

ஐங்காலத் தொழுகைகளையும் அலட்சியமாகக் கருதி, விட்டு விடுவார்கள்.

ஏழைகள் கேவலமாகக் கருதப்படுவார்கள். (இன பந்துக்காளக இருப்பினும் சரியே) .

சிறியவர்கள் உள்ளங்களில் பெரியோர் பற்றிய பயம் இராது.

பொறாமை அதிகமாகும். இதனால் ஒரு மகன், தன் தகப்பன் மரணிப்பதை விரும்புவான்.

உண்மை குறைந்து பொய்மை மிகைத்துவிடும்.

மது அருந்தும் பழக்கம் சர்வ சாதாரணமாகி விடும்.

வட்டி, கையூட்டு (இலஞ்சம்) முதலியன சர்வ சாதாரணமான செயலாகக் கருதப்படும்.

ஆண்கள் வெட்கப்படுவார்கள்; பெண்கள் வெட்கப் படமாட்டார்கள்.

அக்கிரமக்காரனுக்கு உதவியும், ஒத்தாசையும் புரிவார்கள். யாசிப்போரை விரட்டிவிடுவார்கள்.

மோச நாசங்கள் நிறைந்துவிடும். நம்பிக்கை குறைந்து விடும்.

ஒரு பாவமுமறியாத பத்தினிப் பெண்கள் மீது விபச்சாரப் பட்டம் சுமத்தப்படும்.

தொழுகை நேரங்களில் மஸ்ஜிதுகள் மூடப்படும்.

ஒரு தாசி தன் மகளைச் சிங்காரிப்பதுபோல ஒரு தாய் தன் மகளைச் சிங்காரிப்பாள்.

அக்காலத்திலே வான் பொழியாது, பூமி முளைக்காது.

சிறியோர் பெரியோரைக் கண்ணியப்படுத்த மாட்டார்கள். பெரியோர் சிறியோர்மீது அன்பு செலுத்த மாட்டார்கள்!

நல்லொழுக்கச் சீலர்கள் இழிவாகக் கருதப்படுவார்கள்.

அக்காலத்தில் ஒரு வியாபாரி தன் வியாபாரத்தின் மூலமும், ஒரு விவசாயி தன் விவசாயத்தின் மூலமும் ஒரு செல்வந்தன் தன் செல்வத்தின் மூலமும் ஆனந்தம் அடைய மாட்டான்.

எங்கு நோக்கினும் குழப்பமும் புரட்சியும் பரவிப் பெருகி நிற்கும். இதனால் எந்த நேரத்தில் என்ன நேரிடுமோ என்ற பயத்தால் மக்களின் மன அமைதி மடிந்துவிடும்.

தர்க்கம் புரிவதற்கும், திறமையைக் காட்டுவதற்குமே கல்வி பயில்வார்கள்,

மூமின்களின் மனதில் ஈமானின் (நிலை) குலைந்து விடும்.

தவறுகள் செய்துவிட்டு அதைப் பிறரிடம் பெருமையாகக் கூறுவார்கள்.

உண்மையை உரைப்பவர் மக்களால் நிந்திக்கப் படுவர்.

குர்ஆன் ஷரீபை சங்கீதத்தைப் போன்று இராகமிட்டு ஓதுவார்கள். ஆனால் அது அல்லாஹ்வின் அருள் மொழியாயிற்றே என எண்ணிப்பார்க்க மறந்திடுவார்கள்.

ஓ...அலியே! இவ்விஷயங்கள் அனைத்தையும் மனனம் செய்து மக்களிடம் அறிவித்து விடுவீராக!-



## உலக மாயை

மனிதர்கள் பலர் மாய உலகில் மயங்கிக் கிடக்கிறார்கள். இங்கே நேற்றிருந்தார் இன்றில்லை. இன்றிருந்தார் நாளைஇல்லை. நாளையிருப்போர் மறு தினம் இருப்பாரோ என்னவோ! ஆய கலைகள் அறுபத்து நான்கையும் அறிந்த அறிவாளியும் மாயமாய்மறைந்து போகும் மகத்துவத்தை இம்மண்ணுலகிலே நாம் காணுகிறோம்! குழந்தை அழுது கொண்டே பிறக்கிறது. கூடியிருந்தோரெல்லாம் அது குவலயத்தில் பிறந்தது கண்டு குதூகலித்துச் சிரிக்கிறார்கள். இப்படி மனிதன் உலகத்திற்கு ஆரம்பமாக வரும்போது அழுதுக் கொண்டே பிறக்கிறான். ஏன் தெரியுமா...பரிசுத்தமானவனாகவும் ஏதும் தெரியா புண்ணியவானாகவும் இருந்து பாவங்களும் மோசங்களும் நிறைந்த பாழ் உலகில் உதிக்கின்றோமே என்பதே அதன் மூலக் கருத்தாகும். பெற்றோரின் சிரிப்பு அடங்குவதற்கு முன்னே குழந்தையின் அழுகை நின்றுவிடுகிறது. என்னவென்று பார்த்தால் குழந்தைக்கு மூச்சில்லை. கொஞ்சம் நேரத்திற்கு முன் அழுத குரல் கேட்டு ஆனந்தம் கொண்டவர்கள் இப்போது அழுகிறார்கள்!...ஏன்? மாய உலகின் இயற்கைகள் அந்த மகவை மரிக்கச் செய்திட்டது. சந்தூக்கிலே மையத்தைத் தூக்கிக் கொண்டு (கப்ருஸ்தான்) சவக்காடு சென்றவன், மறுநாள் சந்தூக்குக்குள்ளே மௌத்தாகி கிடக்கிறான். இதுவும் அம்மாய உலகின் மர்மக்கதையே!

மார்பிலே மலர்மாலை தவழ முகத்திலே முறுவல் மலர மணக்கோலத்தோடு, மங்கல வாழ்த்துப் பாட பவனிவரும் மணவாளன் மறுநாள் பிணவாளனாகக் காட்சி தருகிறான். மாப்பிள்ளையின் கட்டுடல் மேனிக்கு வண்ண வண்ண உடைகளை எண்ணி எண்ணி எடுத்தவர்கள் இப்போது கண்ணீரை வடித்துக்கொண்டு கபன் துணி எடுக்கும் கண்ணராவிக் காட்சிகளைக்

காண்கிறோம். இதுவும் அந்த நஞ்சு உலகின் வஞ்சகச் செயலே. மையத்தின் முன்னே உற்றார், உறவினர், பெற்றோர், சுற்றம், நட்பு, துணைவி அனைத்தும் கூடியிருந்து கதறியழும் கொடுமையையும், பதறியழும் பரிதாப நிலையையும் பார்க்கிறோம். தனக்குப் பிரியமானவனின் உயிர் பிரிந்துவிடும் போது தான் இறப்பின் கொடுமையைச் சரியாக உணர முடிகிறது. ஆம் உலகம் ஒரு மாயை என்று நம் உள்ளத்தில் உறைக்கிறது.

என்ன வாழ்வு? பணம், பதவி, பட்டம், படாடோபம், பாராட்டு, அதிகாரம், ஆணவம், அனைத்தும் என்றோ ஒரு நாள்! போய்த்தானே தீரவேண்டும். இருப்பது சில நாள் அதிலும் நோய் நொடி தொல்லைகள், துயரங்கள்!. இந்த இழிந்த வாழ்விலே அழிந்து போவதற்குமுன் இறைதூதர் வழிகளில் இடம் பிடிக்க வேண்டாமா? நம்மை மண்ணைப்போட்டு மூடிவிட்டு அத்தோடு மறந்து போகும்படியா வாழ்வது? ஆம் இனியுள்ள காலத்தை யாவது இனிமையாக கழிக்க வேண்டும். கடந்த காலம் கழிந்துவிட்டது வருங்காலம் வந்தபின்பு தான் அதன் வல்லமையைப்பற்றிச் சொல்ல முடியும். இனி நிகழ்கின்ற காலத்திலாவது நீதியாக வாழ்வோம் நியாயமாக வளர்வோம். ஏனெனில் முடிவுக்குப் பின்னாலும் ஒரு வாழ்வு இருக்கிறதல்லவா?...துன்யா வாழ்வு அசிங்கத்தையும், அட்டூழியத்தையும் மறைத்துக்கொண்டு அழகை மட்டும் வெளிக்காட்டும் அலங்கார வாழ்வாகும். வயிறு புடைக்கும் வரை அள்ளிப்போடு; வாழ்வு முடியும் வரை துள்ளியாடு; சிட்டுக்குருவிபோல எட்டுத்திக்கும், கொட்ட மடித்து வட்டமிடுவதை விட்டுவிட்டு கட்டுப்பாட்டுக் குள்ளே கட்டுண்டு கிடப்பதா? என்று எண்ணுகிறான் மனிதன், இதனால் உள்ளத்திலே தயக்கமும் உணர்விலே கிரக்கமும் கொள்கிறான். இதுதான் மாய உலகின் மயக்கம்; கசக்கிப் பிழிந்து சாறு



எடுக்கும்வரை சத்திய வாழ்வில் சேர மறுக்கிறான்! காரணம் மாய உலகின் மகத்துவம் அந்த அளவுக்கு அவனை மாற்றிவிட்டது. அதோ அங்கே ஈஸா (அலை) அவர்கள் தன் சீடர்களிடம் உலக மாயைப்பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். நாமும் நம் கவனத்தை அந்தப் பக்கம் திருப்புவோம்.

நான் மகிதர்களைப்பற்றி ஒருவகையான இரக்கம் கொள்கிறேன். உலக இன்பத்தைப்போற்றி வரவேற்கும் மனிதன், இறப்பின்போது என்ன செய்யப்போகிறான்! இம்மையையும், அதன் இன்பங்களையும் அவன் எவ்வாறு விட்டுப்பிரியப்போகிறான்? உலகம் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. எனினும் அதனை அவன் முழுக்க முழுக்க நம்புகிறான்! இந்நிலையில் அது அவனை மோசம் செய்கிறது. அவன் நினைப்பது ஒன்று, அடைவது வேறொன்றாகி விடுகிறது. தான் எதை அடையக் கூடாது என்று அச்சம் கொண்டானோ அதுவே அவனைக் கவ்விப் பிடித்துக்கொள்கிறது. தவறு செய்பவர்களும், உலகக் காரியங்களுக்காக கவலைப்படுபவர்களும், மறுமையில் எப்படி வேதனை செய்யப்பட்டு இழிவடையப்போகிறார்களோ?....

கடும் நோயால் நொந்து நிற்கும் ஒரு நோயாளி தான் உண்ண வேண்டுமென ஆசைப்படுகிறான். ஆனால் அவனின் நோய் அதற்கு தடையாய் இருக்கிறது. அப்படியே அவன் உண்டாலும் சுவையை அறிய முடிவதில்லை. காரணம் ருசித்துப் புசித்து ரசிக்கும் அவன் நாவில் உணர்ச்சிக்கு அவனின் வியாதி திரையாகத் தடைப்போட்டு விடுகிறது. இதுபோல இகலோக (உலக) இன்பத்தில் இழைபவன் இறை வணக்கத்தை எண்ணிப் பார்க்கிறான்; அவனது மனோ வியாதியோ இறை வணக்கத்திலுள்ள இணையில்லா பேரின்பத்தை சுவைக்க திரைபோட்டு மறைத்துவிடுகிறது. அவனியின் ஆனந்தம்

மீது அவனுக்கு ஏற்பட்ட ஆசையானது அவன் இறை வணக்க இன்பத்தை அடைவதை தடைபோட்டுத் தடுத்து விடுகிறது என்று ஈஸா (அலை) அவர்கள் பகர்ந்தார்கள்.

வழி தவறி, நேர்மை நெறிதவறி பழியான பாதையில் பாய்ந்து செல்லும் பாவ மனக்குதிரையைப் பண்புள்ள பாதைக்குத் திருப்பிவிடும் தன்மையைப்பற்றி மேலும் ஈஸாநபி (அலை) அவர்கள் இப்படி கூறுகிறார்கள்: அதாவது உங்களின் ஒட்டகங்களையும், குதிரைகளையும் நல்ல முறையில் பழக்குங்கள். அதற்கு அவசியமான பயிற்சிகளை ஒழுங்காகக் கொடுங்கள். இல்லை எனில் அவை கடைசி நேரத்தில் இடக்குப் பண்ணத் துவங்கி விடும் என்றார்கள். இதுபோன்றே உங்கள் உள்ளமும் இருக்கிறது. அதை ஒழுங்காக நடத்துங்கள் தவறான வழிகளில் பழக்கப்பட்ட உள்ளம், தப்பித் தவறி நல்ல தைத் தேடிப் பெறும்போதுகூட, பெற்றுக் கொள்ளும் கடைசிக் கட்டத்தில் காலை வாரிவிடும்; கயவனைப் போன்றே செயல்படும்.

ஆகவே தன் உள்ளத்தை ஒழுங்கான உயர்ந்த விஷயங்களோடு உறாவாட விடுங்கள் என்று கூறுகிறார் கள். ஈஸா (அலை) அவர்கள் ஒழுங்கு ஒழுக்கத்தின் பிறப்பிடம்! ஒழுக்கம் உயர்ந்த உள்ளத்தின் இருப்பிடம். உயர்ந்த உள்ளம் உத்தமர்களின் சிறப்பிடம். உத்தமர் களின் உள்ளம் ஒப்புவமையற்ற இறைவனின் இருப்பிடம்! ஆக இறைவனே இன்பத்தோடு தங்கக்கூடிய இல்லம்தான் உயர்ந்த இல்லம். அந்த இனிமையான இல்லம்தான் இறை யடியார்களின் உள்ளம். அந்த உள்ளம் மாய உலகின் லீலைகளில் காலை வைக்காது, அதன் மகிமைகளைக் கண்டு மயங்காது, அதன் விநோதங்களைக் கண்டு வியக்காது அப்படிப்பட்ட உள்ளமாக நம் உள்ளத்தை உருவாக்கிட நபி ஈஸா (அலை) இயம்புவதை மேலும் கேட்போம்.



ஒரு சமயம் ஈஸா (அலை) அவர்களிடம் தங்களைத் திருத்தியது யார்? என்று கேட்கப்பட்டது. அப்போது ஈஸா (அலை) அவர்கள், "என்னையாரும் திருத்தவில்லை முட்டாள்களின் மூடச்செயல்களையும் பார்த்தேன். அத னால் ஏற்படும் இழிநிலைகளையும் பார்த்தேன். அதை இழிவாகவும் மதித்தேன். அத்தகைய தன்மைகளை என்னை விட்டும் அகற்றினேன். இப்படியே என்னை நான் திருத்திக் கொண்டேன்" என்று பகர்ந்தார்கள்.

இறைவன் ஹதீஸ் குத்ஸியில், "ஓ ஆதமுடைய மகனே! உன்னிடமிருந்து ஆறு காரியங்கள் ஏற்பட்டால் என்னிடமிருந்து ஆறு காரியங்கள் உண்டாகும் என்று கூறுகிறான். அவை

ஆதமுடைய மகனே! உனக்குச் சொர்க்கம் என்னிடம் கிடைக்கும். ஆனால் உன்னிடமிருந்து வழிபாடு உண் டாக வேண்டும்.

ஆதமுடைய மகனே! உனக்கு தெய்வீகத் தன்மை என்னிலிருந்து உண்டாகும். ஆனால் உன்னிலிருந்து அடிமைத் தனம் உண்டாக வேண்டும்.

ஆதமுடைய மகனே! ஒப்புக் கொள்வது என்னி லிருந்து உண்டாகும், ஆனால் உன்னிலிருந்து பிரார்த் தனை உண்டாக வேண்டும்.

ஆதமுடைய மகனே! உனக்கு சோதனை என்னிலிருந்து உண்டாகும். ஆனால் சகிப்புத்தன்மை உன்னிலிருந்து உண்டாக வேண்டும்,

ஆதமுடைய மகனே! உனக்கு ஆகாரம் அளிப்பது என்னிடமிருந்து உண்டாகும். ஆனால் நன்றி செலுத்து வது உன்னிடமிருந்து உண்டாக வேண்டும்.

ஆதமுடைய மகனே! உனக்கு மன்னிப்பு என்னிலிருந்து உண்டாகும். ஆனால் மன்னிப்புத்

தேடுவது உன்னி லிருந்து உண்டாக வேண்டும் என்று கூறியுள்ளான்.

ஒரு சமயம் ஈஸா (அலை) அவர்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது வெண்குஷ்டம், கருங்குஷ்டம், பக்கவாதம் முதலிய மூன்று நோய் களினாலும் பாதிக்கப்பட்ட ஒரு பிணியாளனைக் கண் டார்கள். குஷ்டத்தின் கொடூரம் காரணமாக சிதைந்து போன சதையிலிருந்த சீழ் சிறுகச் சிறு வடிந்து கொண் டிருந்தது. அந்நிலையிலும் அப்பிணியாளன், "இறைவ னே பெரும்பான்மையோருக்கு இருக்கும் நோயை விட்டும் என்னைக் காத்தருளினாயே உனக்கே புகழனைத்தும் என்று கூறிக் கொண்டிருந்தார். அதுகேட்டு ஈஸா (அலை) அவர்கள் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில் லை. அவர்கள் அப்பிணியாளனை அணுகி, "அப்பா பெரும்பான் மையோருக்கு ஏற்பட்டுள்ள வியாதி" உனக்கு ஏற்படவில்லை என்றாயே அதென்ன வியாதி என்று கேட் டார்கள். அதற்கு அவன், "அதுவா! அதுதான் அறியாமை நோய். இம்மாபெரும் உலகையும் அதிலுள்ள பொருள் களையும் படைத்துக் காத்து இரட்சிக்கின்ற, அந்த அல்லாஹ்வைப் பற்றி நான் ஓரளவு அறிந்திருக்கிறேன்.

ஆனால் அகிலத்திலுள்ள அநேகம்பேர் அவனைப் பற்றி அறியா மக்களாக அவனால் படைக்கப்பட்ட உலகின் மாயையில் வீழ்ந்து அறியாமை நோயில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். அம்மக்களின் அறியாமை நோயானது எனக்கிருக்கும் இந்நோயைவிட பன்மடங்கு கொடியது என்று கூறினான். இதைகேட்டு இதயம் இளகிய ஈஸா (அலை) அவர்கள் அவனின் மேனியில் தம் கரம் கொண்டு தடவினார்கள். அவரின் நோயும் நீங்கியது. அக்கணமே அம்மாந்தர் நபி ஈஸா (அலை) அவர்களின் அன்புச் சீடரானார்.



உருக்குலையாத உடலோடு, உலகமாயையில் உருண்டு கொண்டிருப்பதைவிட உறுதிக் குன்றா உள்ளத் தோடு உயர்ந்த இறைவனை எண்ணி பெருமைப்பட்டதே அந்த நோயாளியின் உள்ளம் அதல்லவா அழியா உள்ளம், இறைவா! புழுப்பூச்சிகள் இந்த மாய உலகில் மலர்ந்த என் உடலை எவ்வளவு துளைபோட்டு துள்ளி விளையாடினாலும் எனக்கு கவலையில்லை. ஆனால் உன்னையே எண்ணியிருக்கும் இந்த உள்ளத்தையும், உன் திருநாமங்களையே உச்சரிக்கும் இந்த நாவையும் துளை போடும்படி ஆக்கிவிடாதே என்று எண்ணி இறைவனை இறைஞ்சியதே அய்யூப் நபி (அலை) அவர்களின் உள்ளம். அதல்லவா அல்லாஹ் அகமகிழ்வோடு தங்கும் உள்ளம்.

இறைவன் திருமறையில் கூறுகிறான்:

"நிச்சயமாக இறைவன் உங்களின் வெளித் தோற் றங்களையும் புறச் செயல்களையும் நோக்கவில்லை; என் றாலும் உங்கள் உள்ளங்களையே நோக்குகிறான்.

-அல்குர்ஆன்

இந்த மாய உலகில் மதிமயங்கும் எதிர்கால உம்மத் தார்களின் உள்ளத்தின் நிலை உத்தம நபியின் எண் ணத்தில் பளிச்சிடுகிறது. கவலை தரும் அந்த காலத்தை, புண்ணிய நபி கண்ணீர் விடாத குறையாக எண்ணிக் கூறுவதை கேளுங்கள்:

என் உம்மத்தின் பேரில் ஒரு காலம் வரும். அக் காலத்தில் அவர்கள் ஐந்து காரியங்களை ஆசிப்பார்கள் ஐந்து காரியங்களை மறந்திடுவார்கள்.

*1.* ஜீவியத்தில் பிரியம் கொள்வார்கள் இறந்திடு வோம் என்பதை மறந்திடுவார்கள்.

*2.* சொத்து சுகங்களைத் தேடுவதில் தேட்டம் கொள்வார்கள். அவைகளைப்பற்றி கேள்வி கணக்குகள் கேட்கப்பட இருப்பதை மறந்திடுவார்கள்,

3. வீடுகளை உயர்த்தி மாளிகைகளாகக் கட்டுவார்கள். கப்ரை மறந்திடுவார்கள்.

4. இம்மையை விரும்புவார்கள் மறுமையை மறந்திடுவார்கள்.

5. படைத்தவனை மறந்திருப்பார்கள். படைக்கப்பட்ட பொருள்களின் இன்பங்களில் மூழ்கி இருப்பார்கள்.

ஒரு சமயம் இறைவன் நபி தாவூது (அலை) அவர்களுக்கு லுக்மானுல் ஹக்கீம் அவர்களை அழைத்து அமரச் செய்து அவர்களிடம் நுண்ணறிவைப் படித்துக் கொள்ளும்படி வஹீ அறிவித்தான். அதுபடியே தாவூது (அலை) அவர்கள் செய்தார்கள். அப்பொழுது லுக்மானுல் ஹக்கீம் அவர்கள் சொன்ன நுண்ணறிவானது பின்வருமாறு :-

"தாவூதே! நீ உலகில் எந்த அளவு தங்குவதாக எண்ணுகிறாயோ அந்த அளவுக்கு அதன்மீது பாசம் கொள்.

தாவூதே! நீ மறுமையில் சொர்க்கத்தில் எவ்வளவு காலம் தங்க வேண்டுமென ஆசிக்கின்றாயோ அந்த அளவுக்கு நற்கிரியைகள் புரிவாயாக.

தாவூதே! உன்னால் நரக நெருப்பை எந்த அளவுக்கு பொறுத்துக் கொள்ள முடியுமோ, அந்த அளவுக்குப் பாவம் செய்வதில் தீவிரம் காட்டுவாயாக.

தாவூதே! உனது எஜமானாகிய அல்லாஹ்விற்கு நீ பாவம் செய்ய நாடினால் அவன் உன்னைக் காணாத மறைவான இடத்திற்குச் சென்று விடுவீராக" எனப் பகர்ந்தார்கள்.

சிறிய போதனை! ஆனால் அதனுள் எவ்வளவு பெரிய தத்துவங்கள் மிளிர்கின்றன. கண்ணை மூடிக் காலை நீட்டிக் களிப்போடு தூங்கியவன், காலை கருக்கலுக்குள் கட்டையாகி கதை முடியும் காட்சிகள்



இந்த உலகில் ஒன்றா, இரண்டா...எல்லாம் மாயம். மாயம்...ஒரே மாயம், அந்த மயா உலகை லுக்மானுல் ஹக்கீம் அவர்கள் மறைமுகக் கருத்துக்களாலேயே குறை மிக நீங்க குறிப்புடன் உணர்த்தும் பாங்கு சிந்திக்கத் தக்க அறிவுரையாகும். இன்றே முடிந்து விடுமோ என ஐயப்படக் கூடிய துன்யா வாழ்வைவிட என்றும் அழியா சொர்க்கவாழ்வைச் சிந்தித்துப்பார். நரக நெருப்பை நன்கு எண்ணிப்பார். அளவற்ற அருளாளனின் அன்பை எண்ணி அனுதினமும் அயராது வழிபடு. நுண்மையிலும் நுண்மையான இடத்திலும் அவன் நுகர்ச்சி உண்டென எண்ணி, உண்மையுடன் வாழ்ந்து உய்வாயாக என சொல்லாமல் சொல்லி மாயப் போதையிலிருந்து நம்மை விடுவிக்கிறார்கள். விடுவிக்கப்பட்ட அந்த விவேக உள்ளங்களுக்கு மேலும் மெருகு கூட்ட புண்ணிய நபியின் புனித உரைகளை பூரிப்புடன் படியுங்கள். இதோ! நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். என் உம்மத்துக்களே...! நீங்கள் ஐந்து காரியங்களை விட ஐந்து காரியங்களை அதிகமாக சிந்தியுங்கள்.

1. மனிதர்கள் செய்த உபகாரத்தைச் சிந்திப்பதைவிட இறைவன் செய்த உபகாரத்தைச் அதிகமாக சிந்தியுங்கள்.

2. இம்மை வாழ்வை சிந்திப்பதைவிட மறுமை வாழ்வை அதிகமாக சிந்தியுங்கள்.

3. நீங்கள் செய்த நன்மைகளைச் சிந்திப்பதைவிட உங்களில் நிகழ்ந்துள்ள பாவங்களைப் பற்றி அதிகமாக சிந்தியுங்கள்.

4. நீங்கள் உயிருடன் வாழப்போவதைச் சிந்திப்பதைவிட உயிரிழந்து மாளப் போவதைப் பற்றி அதிகமாக சிந்தியுங்கள்.

5. மாற்றார் குற்றங் குறைகளை சிந்திப்பதை விட உங்கள் குற்றங் குறைகளை அதிகமாக சிந்தியுங்கள்.

-அல்ஹதீஸ்

மாய உலகின் குறைகளை மனங்கவரும் உரைகளால் உணர்ந்து கொண்ட உங்களை ஈஸா (அலை) அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்து செல்கிறேன். தின்னும் ரொட்டியும், மின்னும்பொன்னும் மனிதனை என்ன பாடுபடுத்துகிறது பாருங்கள், பொன்னில் கொண்ட போதை மண்ணில் வீழ்ந்து மாயும்வரை மறையாதிருந்த மாயத்தைப் பாருங்கள். மாய உலகில் மயங்கி, பேயாய் அலையும் மாந்தரின் அழியும் நிலையை பாருங்கள். பண்பான வழிகளில் பக்குவத்தை அணுகுவதற்கு இந்த அழகிய அவல நிகழ்ச்சி அவசியம் துணை செய்யும் என நம்புகிறேன்.

ஒரு சமயம் ஈஸா (அலை) அவர்களிடம் ஒரு யூதன் "நான் தங்களோடு இருக்க விரும்புகிறேன்" என்று கூறினான். அதற்கு ஈஸா (அலை) அவர்களும் ஒப்பினர். அவ்விருவரும் ஒரு வழியே நடந்து சென்று கொண்டிருக்கையில் இடையில் ஒரு ஆறு குறுக்கிட்டது. அவ்வாற்றங் கரையில் அமர்ந்து ஈஸா (அலை) அவர்கள் தங்களிடம் இருந்த பொட்டலத்தை அவிழ்த்தனர். அதில் மூன்று ரொட்டிகள் இருந்தன. அதிலொன்றை யூதனிடம் உண்ணக்கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் உண்டார்கள், பின்னர் நீர் அருந்த தான் மட்டும் அருகிலிருந்த ஆற்றிற்கு சென்று திரும்பினார்கள். அப்போது எஞ்சியிருந்த மூன்றாவது ரொட்டியைக் காணவில்லை. உடனே யூதனைப் பார்த்து "மூன்றாம் ரொட்டி எங்கே!" என வினவினார்கள். அதற்கு அவன் "எனக்கென்ன தெரியும்!" என்று கூறிவிட்டான். அது கேட்ட ஈஸா (அலை) அவர்கள் எந்த மறுமொழியும்



கூறாது நடக்கத்துவங்கினர். யூதனும் அவர்களுடன் நடந்தான்.

வழியில் ஒரு மானையும், இரு குட்டி மான்களையும் கண்டனர். உடன் ஈஸா (அலை) அவர்கள் அவ்விரு குட்டி மான்களில் ஒன்றை அழைத்தார்கள். அது வந்ததும் அதைப்பிடித்து அறுத்தனர். பின் இருவரும் பக்குவப் படுத்தி உண்டனர், பின் அந்த மானின் எலும்புகளை யெல்லாம் ஒன்றாகக் குவித்து முன்போல் ஆகுக என்று ஈஸா (அலை) அவர்கள் கூறவே, அது முன்போலவே உயிர் பெற்றெழுந்து துள்ளி ஓடியது. அது சமயம் ஈஸா (அலை) அவர்கள் யூதனை நோக்கி "உனக்கு இவ்வற்புதத்தைக் காட்டிய இறைவன்மீது ஆணையாக மூன்றாம் ரொட்டி எங்கே!" என கேட்டார்கள். அப்போதும் அவன் தனக்குத் தெரியாதென்றே கூறினான்.

மேலும் அங்கிருந்து அவ்விருவரும் நடக்கத் துவங்கினர். இடையே பெரும் ஆறொன்று குறுக்கிட்டது. ஈஸா (அலை) அவர்கள் யூதனை கையில் பிடித்துக் கொண்டு ஆற்றின் நீரின்மேல் நடந்து அக்கரையை அடைந்தார்கள். பின் மீண்டும் யூதனிடம், "உனக்கு இந்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய இறைவன் மீது ஆணையாக மூன்றாம் ரொட்டி எங்கே?" என்று கேட்டார்கள். அப்போதும், அந்த யூதன் "எனக்குத் தெரியாது" என்றான். மேலும் அவ்விருவரும் பயணத்தைத் துவங்கினர். சிறிது தூரம் சென்றதும் ஈஸா (அலை) அவர்கள் பாதையில் கிடந்த மண்ணை மூன்று குவியலாகக் குவித்து, அம்மண் குவியல் மூன்றையும் பார்த்து பொன்னாக மாறுக என்றார்கள். அவை அப்படியே பொன்னாக மாறி மிளிர்ந்தன. அப்போது ஈஸா (அலை) அவர்கள் அந்த யூதனை பார்த்து, "இப்பொன் குவியல்களில் ஒன்று எனக்கு, மற்றொன்று உனக்கு, பிறிதொன்று மூன்றாவது ரொட்டியைத் தின்றவனுக்கு எனக் கூறினார்கள். அவ்வளவுதான்!

மாயத்தின் சாயம் அவன் நெஞ்சில் பாய ஆரம்பித்தது. பொற்குவியலின் போதை அவன் கல் மனதைக் கரைய வைத்தது, பொன்னின் ஜொலிப்பைக்கண்டு பொங்கி வந்த களிப்பில் "மூன்றாம் ரொட்டியை நான் தான் தின்றேன். எனக்கே மூன்றாம் குவியலையும் தந்துவிடுங்கள்", என்று கூறி பந்துபோலக் குதிக்கலானான், பேராசைப் பித்து அவனின் சித்தத்தை சிந்துபாடி சிரிக்க வைத்தது. அந்தச் சிரிப்பு அவனை சீரழிய வைத்து சின்னாபின்னப்படுத்தி சிதைக்கப் போகிறது என்பதை சிந்தித்திருந்தால் அவ்விதம் அவன் சிரித்திருப்பானா என்ன! ஈஸா (அலை) அவர்கள் அந்த யூதனிடம் "நீயே இந்த மூன்று குவியல்களையும் வைத்துக் கொண்டு பூதம் புதையலைக் காத்ததுபோல காத்துக் கொண்டிரு" என்று கூறிவிட்டு, அவனை விட்டுச் சென்றார்கள்.

மூன்று குவியல்களும் தனக்கே என்பதை கண்டதும் யூதன் பொங்கிப் பூரித்தான். புன்னகைத்தான் புளங்காகிதம் கொண்டான்!. அப்பொற்குவியலை காத்துக் கொண்டு அங்கேயே வீற்றிருந்தான். அப்போது அவ்வழியே வந்து கொண்டிருந்த இருவர், அம்மூன்று பொற்குவியல்களைக் கண்டதும் அவனைக் கொன்றுவிட்டு அக்குவியல்களை அபகரித்துக் கொள்ள எண்ணினர். அவர்களின் எண்ணத்தை புரிந்து கொண்டயூதன் "என்னைக் கொல்ல வேண்டாம், நாம் மூவரும் இக்குவியல்களை ஆளுக்கொன்றாகப் பங்கிட்டு கொள்ளலாம்.," என்று கூறினான் மற்ற இருவரும் அதற்கு மனம் ஒப்பினர், நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. அவர்களுக்குப் பசி அதிகரிக்கவே இருவர் அங்கேயே அமர்ந்து கொண்டு ஒருவரை உணவு வாங்கி வருமாறு அண்மையில் உள்ள ஊருக்கு அனுப்பினர். அடுத்து நடக்கப் போகும் மாய விளையாட்டின் மகத்துவத்தை பாருங்கள்....



உணவு வாங்கச் சென்றவன் நன்கு உணவு உண்டான். உடலுக்குள் உணவு போனதும் அவனின் உடலுக்குள் உறங்கிக் கிடந்த உன்மத்த உணர்வுகள் உசுப்பிக் கொண்டு எழுந்தன. ஆம் அந்த மூன்று குவியல்களையும் தானே அடைய வேண்டுமென்ற ஆசை அவனுக்குள் குமிழிட்டது. ஆசை தன் அசுரத்தனத்தைக் காட்ட ஆரம்பித்தது அவன் அவ்விருவருக்கும் வாங்கிய உணவில் விஷத்தைக்கலந்து கொண்டு சென்றான். சரி...இவன் அங்கே செல்வதற்குள் அவர்கள்...அங்கே என்ன செய்கிறார்கள் தெரியுமா? அவர்களிருவரும் அம்மூன்று பொற்குவியல்களையும் தாமே அடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு உணவு வாங்கி வருபவனைக் கொன்று விடத் திட்டமிட்டனர். அவனும் வந்து சேர்ந்தான். உடனே அவனிடமிருந்த உணவை வாங்கிக் கொண்டு, குபீரென்று அவ்விருவரும் அவன்மீது பாய்ந்தனர். அவ்வளவுதான் அடுத்த கணமே அவன் மாய்ந்து வீழ்ந்தான்.

இப்போது இருவரும் இருந்த இரையை இன்பத்தோடு புசிக்கலானார்கள். மாய்ந்தவனால் அவ்வுணவில் கலக்கப்பட்ட விஷம் எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாகத் தன் வேலையை செய்யத் துவங்கியது. ஆம் சிறிது நேரத்தில் அவ்விருவரும் அடுத்தடுத்து அடியற்ற மரம்போல சாய்ந்து, வீழ்ந்துமாய்ந்தனர். அந்தோ பரிதாபம்! அவர்களின் ஆசையே அவர்களை அழித்துவிட்டது. மாய உலகம்தன் மயானக் காட்டை அங்கே உருவாக்கிக் காட்டியது. மூன்று உயிர்கள் அதன் மோகத்தில் மூழ்கி முடங்கிக் கிடந்தன. ஆடிப்பாடி அனுபவிக்க எண்ணிய ஆசை நெஞ்சங்கள் அடங்கி ஒடுங்கிக் கிடந்தன. உள்ளம் பொன்குவியலை நாடியது. உடலை மண் குவியல் மூடியது. என்ன செய்வது? தங்கத்தின் மோகத்தில் தாகங்கொண்ட அம்மூவரின்

முடிவைக்கண்டு ஒரு சோகப் பெருமூச்சை சொரிந்து விட்டுப் போகவேண்டியதுதான்.

அடுத்து...சில ஆண்டுகள் உருண்டோடின, ஈஸா (அலை) அவர்கள் தன் தோழர்களுடன் அவ்வழியே வந்தார்கள். அப்போது அம்மூன்று பொற்குவியல்களையும் அவற்றின் அருகே மக்கி, உக்கி, உருக்குலைந்து போய் கிடந்த மூன்று எலும்புக்கூடுகளையும் கண்டார்கள். நிகழ்ந்ததை உய்த்துணர்ந்து தன் தோழர்களிடம் நடந்த வரலாற்றைக் கூறினார்கள். உலகம் இப்படித்தான் மனிதர்களை ஏமாற்றி அழித்தொழிக்கிறது. ஆனால் மனிதன் இதைச் சிந்திப்பதில்லை ஆகவே நீங்கள் எச்சரிக்கையாக இவ்வுலகில் இருங்கள் என ஈஸா (அலை) அவர்கள் தன் தோழர்களுக்கு எடுத்தியம்பினார்கள்.

இப்றாஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் கூறுகிறார்கள். "நான் காடு வனங்களில் சுற்றித் திரிகையில் ஜபலுல் லுப்னா என்ற மலையில் இருந்த ஒலிமார்களைக் கண்டு அவர்களுடன் சேர்ந்திருந்தேன். அந்த ஒலிமார்கள் என்னிடத்தில் நான்கு உபன்யாசம் செய்து, அந்நான்கினையும் தானும் கற்று மக்களுக்கும் அறிவிக்கும்படியும் சொன்னார்கள். இதோ :-

1. சுவையான உணவை அடைவதை ஆசிப்பவன் இறைவணக்கத்தில் இன்பத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டான்.

2. அதிகமாகத் தூங்குபவன் வாழ்நாளில் (பரகத்) அபிவிருத்தி அடையமாட்டான்.

3. மனிதர்களின் புகழைத் தேடுபவன் இறைவனின் பொருத்தத்தை அடைய முடியாது.

4. புறமும் வீண் பேச்சும் பேசுபவன் தீனுல் இஸ்லாத்தின் பேரில் மரணிக்கமாட்டான்.



நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்: நீங்கள் மறுமையில் விசாரிக்கப்படுமுன் (இவ்வுலகிலேயே) உங்கள் ஆன்மாக்களை விசாரணை செய்து கொள்ளுங்கள். ஏனெனில் தன் ஆன்மாவிடம் விசாரணை செய்து கொண்டு மறுமைக்காக நற்காரியங்களைச் செய்கின்றவரே சிறந்த அறிவாளி. ஈதன்றி, தன் மனோ இச்சைகளுக்குக் கட்டுப்பட்டு, பாவங்கள் செய்துகொண்டு தனக்கும் இறைவனிடம் ஏதாவது விமோசனம் கிடைக்குமென்று மனக்கோட்டை கட்டுவது முற்றிலும் அறிவுடைமை யாகாது.

-அல்ஹதீஸ்

பொருட் செல்வங்களும், பிள்ளைகளும் உலகத்தின் அலங்காரப் பொருள்களாகும். மேலும் ஸாலிஹான நற்செயல்களே நிரந்தரமானதாகவும் உமது இறைவனிடம் கூலியால் மிகச் சிறந்ததாகவும் இருக்கிறது.

-அல்குர்ஆன்

ஒரு சமயம் நாயகம் (ஸல்) அவர்களிடம் "உலகம் என்பது யாது?" என்பதாக வினவப்பட்டது, அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள்! "உமது இறைவனின் கவனத்தை விட்டும் உன்னை எது மாற்றுகிறதோ அதுவே உலகம்" என்று கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

உலக மாயை என்பது மனிதனுக்கு தனது இழிந்த கோலத்தை எப்படியெல்லாமோ அழகுடன் காட்டி மனிதனை இழிந்த சாக்கடை வாழ்க்கையில் தள்ளுகிறது. அப்படிப்பட்ட போலி உலக மாயையைக் கண்டு ஏமாறாமல் எப்படியெல்லாம் மனிதன் வாழவேண்டும் என்பதற்கு இதுவரை நல்ல பல கருத்துக்களைப் படித்துணர்ந்தீர்கள்.

மேலும் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

என் உம்மத்தார்கள் நான்கு வகையான கேள்விகளுக்கு பதிலளிக்காமல் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடக்க முடியாது என்றார்கள்.

1. உனது வயதை எப்படி கழித்தாய்?
2. நீ உன் ஜீவியத்தில் என்ன செய்து கொண்டிருந்தாய்?
3. நீ எப்படி பொருள்களை சம்பாதித்தாய்?
4. நீ சம்பாதித்த பொருள்களை எப்படி செலவு செய்தாய்?

-அல்ஹதீஸ்

உலகில் நீ பரதேசியின் கோலத்தில் (அல்லது) வழிப்போக்கனின் கோலத்தில் வாழ்ந்துகொள். மேலும் உன்னை கப்ராளியாக (மையத்தாக) எண்ணிக்கொள்.

-அல்ஹதீஸ்

எனது உம்மத்தினர் எனது வழியை விட்டும் தவறிய காலத்தில் எம்மனிதர் என் சுன்னத்படி நடக்கின்றாரோ அவருக்கு நூறு ஷஹீது (மார்க்கத்திற்காக உயிர் நீத்ததியாகிகளின்) நன்மைகள் கிடைக்கும்.

-அல்ஹதீஸ்

மனம் போல வாழ்ந்தாயே...
மரணத்தில் வீழ்ந்தாயே...
வாழ்க்கைப் பயணம் முடிந்ததடா...
கண்ணீரில் உனைக் கழுவி கதறும் உறவெல்லாம்
மண்மூடும் காலம் வரை மகிழுதடா
நெஞ்சிலே நஞ்சு வைத்து
நாவிலே அன்பு வைத்து
வஞ்சக வாழ்வு நீ வாழ்ந்தாயடா



மேனிக்குத் தீனி போட்டு
மெத்தையில் சுகம் கண்டாய்
கட்டையாய்க் கடைசியில் கதை முடிந்ததடா
குல்லாவைப் போட்டுவிட்டு
அல்லாஹ்வை மறந்து கெட்டால்'
கல்லாவில் காலமெல்லாம் காத்திருந்தாய்
பல்லக்கில் வலம் வந்தாய்
செல்லாத காசாகி இன்று நீ
சந்தூக்கில் சாந்தி கொண்டாய்
மாடிமேல் மாடி வைத்தாய்
கோடி கோடியாய்ப் பணம் சேர்த்தாய்
கூடுவிட்டே இன்று நீ ஓடிவிட்டாய்
பெற்றோரும் தவித்திடவே
பிள்ளையும் துடித்திடவே
பள்ளத்தில் பலர் உன்னைப் படுக்கவைத்தார்.

## தீயோரின் இலட்சணங்கள்

நல்லோரையும், தீயோரையும் பிரித்துப்பார்த்து இலங்கவேண்டிய உலகமிது. கெட்டவர்களை விட்டும் எட்டி நிற்க வேண்டியது அவசியத்திலும் மிக அவசியம். தீயாரைக் காண்பதும் தீது; தீயார் சொல் கேட்பதும் தீது; தீயார் குணங்களை உரைப்பதும்தீது. நடமாடி வரும் தீயவரை நாம் இனங் கண்டு கொள்ள வேண்டாமா...? அப்படியாயின் அவரின் அவல அம்சங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் தானே.

இதோ தீயோரின் இலட்சணங்கள்:

1. மரணத்தை மறந்து மனம் நாடியபடியெல்லாம் நடப்பது.
2. பிறர் செய்யும் நற்செயல்களைத் தடுப்பது.
3. பெருமையை விரும்பி பெருமைக்காக எதையும் செய்வது.
4. கஞ்சத்தனமுடையோராக இருப்பது,
5. ஐவேளைத் தொழுகைகளையும் அதற்குரிய நேரங்களில் நிறைவேற்றாதிருப்பது.
6. தீயோரிடம் பழக்கம் கொள்வது.
7. துர்க்குணம் கொள்வது.
8. பொய், புறம் பேசுவதை பழக்கமாக கொள்ளல்
9. மனோ இச்சைகளுக்கு இசைந்து நடத்தல்.
10. மறுமைப் பற்றுதலைக் குறைத்து இம்மைப் பற்றுதலில் மிகைத்திருத்தல்.
11. இறைவனின் படைப்பினங்கள்மீது அன்பும் இரக்கமும் காட்டாதிருத்தல்.
12. தான் செய்த பாவங்களை நினைத்து வருந்தாமலிருத்தல், மார்க்க விஷயங்களில் அலட்சியம் காட்டல்.
13. உலக விஷயங்களை மிகைப்படுத்தி ஏக்கம் கொள்ளல்.
14. அவசியமற்ற வீண் பேச்சுக்களை பேசுதல்.
15. பிறரின் குற்றங்குறைகளைத் துருவி ஆராய்தல்
16. கல்நெஞ்சமாய் மனம் இருகி இருத்தல்.
17. கடுகடுத்த தன்மையோடு காணப்படல்
18. பெரியோரைக் கண்ணியப்படுத்தாமலும் சிறியோர்மீது அன்பு செலுத்தாமலும் இருத்தல்.



இத்தகைய இழிகுணங்கள் எவனிடம் இழையோடுகிறதோ அவன் பார்வையில் கூட நீ பட்டுவிடாதே.

அன்பர்களே இதுவரை தீயோரின் இலட்சணங்களைப்பற்றி படித்தீர்கள். இறைவனும் தனது திருமறையில் அவர்களைப்பற்றி பலவாறும் இயம்பியுள்ளான் இதோ:

அல்லாஹ், விசுவாசங்கொண்ட (நல்லடியார்)களுக்கு காரியஸ்தனாக இருக்கிறான். அவன் அவர்களை தீமையை விட்டும் நன்மையின்பால் மிளிரச் செய்கிறான். மேலும் காபிரான (தீய அடியார்)களுக்கு காரியஸ்தர்கள் ஷைத்தான்களாக இருக்கிறார்கள். அவர்கள் அவ்வடியார்களை நன்மையை விட்டும் தீமையின்பால் இருக்கச் செய்கிறார்கள். அவர்கள் (அனைவருமே) நரகவாதிகளாகும். அதில் அவர்கள் (என்றென்றும்) தரிப்பட்டு இருப்பார்கள்.

-அல்குர்ஆன்

இன்னும் அநியாயக்காரர்களுடன் நீங்கள் சேராதீர்கள். சேர்வீராயின் (நரக) நெருப்பு உங்களையும் பற்றிக்கொள்ளும். மேலும் இறைவனை அன்றி (வேறு) காரியஸ்தர்கள் உங்களுக்கு (எவரும்) இல்லை. அன்றி (இறைவனைப் புறக்கணிப்பீர்களாயின்) நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்.

-அல்குர்ஆன்

இன்னும் நாம் சத்தியமாக ஜின் இனங்களிலிருந்தும், மனித இனங்களிலிருந்தும் அதிகமானவர்களை நரக நெருப்பிற்காகப் படைத்திருக்கிறோம். அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு விளங்கிக் கொள்ள மாட்டார்கள். மேலும் அவர்களுக்கு கண்கள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு (இறைவனின் திருஸ்டாந்தரங்களை) பார்க்க மாட்டார்கள்

மேலும் அவர்களுக்கு செவிகள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு (இறைவனின் நல்லுபதேசங்களை) செவியேற்க மாட்டார்கள். (அப்படிப்பட்ட) அவர்கள் மிருகங்களைப் போன்றிருக்கின்றார்கள். அன்றியும் அவைகளை விடவும் அற்பமானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிக வழிகேடர்கள். (இறைவனின்) வேதனையை மறந்த பொடுபோக்கர்கள்.

-அல்குர்ஆன்

மேலும் நாம் நாடி இருந்தோமாயின் அவைகளைக் கொண்டு அவரை (பல் காமுப்னு பாகூராவை) உயர்த்தி இருப்போம். எனினும் அவர் பூமியின் பால் சார்ந்து தனது இச்சையை பின்பற்றி விட்டார் ஆகவே அவருடைய தன்மையானது நாயின் தன்மையைப் போன்றிருக்கிறது.

அல்குர்ஆன்

நமமுடைய ஆயத்துக்களை பொய்ப்பித்து தங்களின் நப்ஸுகளுக்கு அநியாயம் செய்து கொண்டிருக்கிறார்களே அந்த ஜனங்களின் தன்மை, கெட்டதாகிவிட்டது,

-அல்குர்ஆன்

வாசக நேயர்களே இதுவரை ஈடு இணையற்ற இறைவனின் அருள் மொழிகளில் சிலவற்றைக் கண்டீர்கள். தீயோரின் தீய நிலையை நன்கு புரிந்து கொண்டீர்கள்.

மனிதகுல மாணிக்கம் மாசில்லா மாநபி (ஸல்) அவர்கள் தீயோரின் நிலைபற்றி கூறி இருப்பதைக் கவனியுங்கள். இதோ:

உங்களில் மிகத் தீயவர் எவர் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா? எவர் தாமே, தின்று கொண்டும் தம் அடிமையைச் சாட்டையால் அடித்துக் கொண்டும், தம் தேவைக்கு மேல் பொருள் சேர்த்துக் கொண்டும் இருக்கின்றாரோ அவர் தாம் (உங்களில் மிகத்



தீயவர்) என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி)-அல்ஹதீஸ்

"மோசடிக்காரன், உலோபி, தான் செய்த நன்மையைக் கூறித் திரிபவன் ஆகிய அனைவரும் நரகத்திற்கருகே இருக்கின்றனர் என்றும், மற்றொரு அறிவிப்பின் படி "மோசடிக்காரன், உலோபி தான் செய்த நன்மையைக் கூறித்திரிபவன் ஆகியோர் சுவர்க்கம் செல்லமாட்டார்கள் என்றும் நபி (ஸல்) கூறினர்.

அறிவிப்பவர்: அபூபக்கர் (ரலி) அல்ஹதீஸ்

## ஷைத்தானின் விரோதிகளும் நண்பர்களும்

ஒரு சமயம் அல்லாஹுத்தஆலா இப்லீசுக்கு ஓ இப்லீசே! நீ முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கூறு என்று உத்திரவிட்டான். அதுகேட்டு இப்லீசானவன் கையில் குச்சியை ஊன்றிக்கொண்டு கிழவனின் உருவத்தில் நபி (ஸல்) அவர்களிடம் வந்தான். நாயகம் (ஸல்) அவர்கள் அவனை நோக்கி "நீ யார்" என்று வினவினார்கள். அதற்கவன் "நான்தான் இப்லீஸ்" என்று கூறினான். "எதற்காக என்னிடம் வந்தாய்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கவன் "இறைவன் எனக்கு தங்களை சந்தித்து தங்களின் கேள்விகளுக்கு பதில் கூறும்படி உத்திரவிட்டிருக்கிறான்" என்று கூறினான்.

அதுகேட்டு நாயகம் (ஸல்) அவர்கள் "என் உம்மத்தில் உனக்கு விரோதியாக இருப்பவர்கள் எத்தனைபேர்கள்" என்று கேட்டார்கள். அதற்கு இப்லீஸ் "உமது உம்மத்தில் 15 பேர் என் விரோதிகள் என்று கூறினான்" அவர்களாகிறவர்கள்:

1. ஓ...முஹம்மதே நீ ஒருவர்!

2. நீதியான அரசன்;

3. பணிவு, தாழ்மையுள்ள சீமான்;

4. உண்மையுரைக்கும் வியாபாரி;

5. உள்ளச்சமுள்ள ஆலிம்;

6. பிறருக்கு நல்லுபதேசம் செய்யும் இறைபக்தர்,

7. தவ்பாச் செய்து அதிலேயே நிலையாக இருப்பவர்.

8. ஹறாமான காரியங்களை செய்யாமல் பேணி நடக்கும் நற்குண சீலர்;

9. எந்த நேரமும் ஒலுவுடன் சுத்தமாக இருப்பவர்;

10. ஜனங்களுடன் நற்றன்மையுடன் பழகுபவர்;

11. ஜனங்களுக்குப் பிரயோஜனம் செய்பவர்;

12. திருகுர்ஆனை மனனம் செய்து அதனை எப்பொழுதும் ஓதிக் கொண்டிருப்பவர்;

13. அதிகமாக (ஸதக்கா) தர்மம் கொடுக்கும் படியான முஃமின்;

14. நடுநிசியில் மனிதர்களெல்லாம் தூங்கும்சமயத்தில் நித்திரை செய்யாதிருந்து இறைவனை வணங்குபவர் என உரைத்தான்.

15. இரக்கச் சித்தமுள்ள முஃமின்:

அடுத்து நாயகம் (ஸல்) அவர்கள் என் உம்மத்தவரில் உனக்கு நேசர்களாக இருப்பவர் யார்? யார்? என்று கேட்டார்கள். கீழ்கண்டவாறு விடை பகர்ந்தான்.

ஷைத்தானின் நண்பர்கள்.

1. அநியாயம் செய்கின்ற அரசன்;

2. தற்பெருமைக்கார சீமான்;

3. மோசடி செய்யும் வியாபாரி;



4. விலை ஏறுவதை எதிர்பார்த்து உணவு தானியத்தை சேர்த்து வைத்திருப்பவன்

5. கள் குடிகாரனும், கஞ்சத்தனக்காரனும்;

6. கொலைகாரன்;

7. வட்டி வாங்குபவன், வட்டியையுண்பவன்;

8. அனாதைகளது பொருளைச் சாப்பிடுபவன்;

9. விபச்சாரம் செய்யும் ஆண்கள், பெண்கள்;

10. அநீதத்திற்கு அடிபணியும் அறிஞன்;

11. ஜகாத்தைக் கொடுக்காதிருப்பவர்;

12. அதிக பேராசையுடையவர் ஆகிய இவர்கள் என் சகோதரர்களும் தோழர்களுமாக இருக்கிறார்கள் என்று கூறினான்.

நிச்சயமாக என்னுடைய அடியார்கள்மீது உனக்கு (ஷைத்தான்) எவ்வித அதிகாரமுமில்லை; (ஆனால்) வழி கேடர்களான உன்னைப் பின்பற்றியவர்களைத் தவிர்த்து.

அல்குர்ஆன்

தங்களது ஈமான் என்னும் மார்க்க விசுவாசத்தில் அந்தரங்க சுத்தியாகவும், அல்லாஹுதஆலாவைத் தவிர்த்து மற்றெதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருப்பவர்களான நல்லடியார்களின் இருதயத்தில் வழிகெடுக்கும் விஷயத்தில் இப்லீசுக்கு எவ்வித அதிகாரமுமில்லை. ஆனால் இப்லீஸைப் பின்பற்றுபவர்களான வழிகேடர்களது இருதயங்களில் தான் அவன் அதிகாரம் செலுத்த முடியும்.

## உங்களில் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக் கொள்ளுங்கள்

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

1. முஸ்லிமாகிய நீங்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் ஸலாம் கூறிவிட்டு மற்ற விஷயங்களைப் பேசிப் பழகுங்கள்.

2. உங்களில் யார் ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்கிறாரோ, அவர் அல்லாஹ்வின் அருளுக்கும் நாயகம் (ஸல்) அவர்களின் ஷபாஅத்திற்கும் மிகவும் தகுதியுடையவராவார்.

3. ஸலாம் என்பது இறைவனின் திருநாமங்களில் ஒன்றாகும். அதை உங்களுக்கிடையே பரப்பிக்கொள்ளுங்கள்.

4. யாராகிலும் உங்களிடம் ஸலாம் கூறாமல் பேசினால் அவரின் பேச்சுக்கு பதில் கூறாதீர்கள்.

5. மனிதர்களில் மிகச்சிறந்தவர் ஸலாமைக் கொண்டு முந்துபவரே.

6. இரண்டு நண்பர்கள் சந்திக்கும்போது அவர்களில் அல்லாஹ்வின் அன்புக்கு அதிகமாக நெருக்க மானவர் ஸலாத்தைக் கொண்டு முந்தியவரே.

7. மனிதர்களில் மிக உலுத்தனானவன் ஸலாம் சொல்வதில் உலுத்தத்தனம் செய்பவராகும்.

8. ஸலாமானது என்னைச் சார்ந்தவர்களுக்கு காணிக்கையாகும். திம்மி காபிர்களை விட்டும் பாது காவலாகவும் இருக்கிறது.

9. நீங்கள் அன்னிய பெண்களுக்கு ஸலாம் கூறாதீர்கள். அவர்கள் ஸலாம் கூறுவார்களானால் பதில் ஸலாம் கூறுங்கள்.

வாசகர்களே! சாந்தியையும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் சாற்றும் சான்றாண்மை மிக்க ஸலாத்தை உங்களில் ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளுங்கள். ஏனெனில் நட்புணர்வுகளை காண்பதில்



நல்லதொரு நாகரீகத்தை நாயகம் (ஸல்) அவர்கள் ஸலாத்தின் மூலம் அமைத்துவைத்திருக்கிறார்கள். இப்படி நல்லதொரு பண்பாட்டை நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த சமுதாய தலைவனும் இந்த உலகில் தோற்றுவிக்கவில்லை. அப்படி தோற்றுவிக்கப் பட்டிருந்தாலும் அதற்கும் இதற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசமேயாகும் என்ற உண்மையை இன்றைய உலகம் ஏற்றுக் கொள்கிறது. அப்படிப் பட்ட அழகிய தத்துவத்தைக் கொண்ட ஸலாமை இன்று நாம் மிக சாதாரணமாக மதித்து வாழ்வது விந்தையிலும் மாபெரும் விந்தையாக இருக்கிறது, அதிலும் வினோதம் அதைக் கூறுவதில் வெட்கப்படுவதுதான். இவர்களை நினைத்தால் மிக வியப்பாக இருக்கிறது. இறைவனம் திருமறையில் ஸலாமின் சிறப்பைப்பற்றி கூறுகிறான்.

அதாவது:

அவைகளில் (சொர்க்கங்களில்) அவர்களதுபிரார்த்தனை ஸுப்ஹானக்கல்லா ஹும்மவாகும். இன்னும் அவர்களின் காணிக்கை ஸலாம் (ஸலாமுன் அலைக்கும்) என்பதாகும். மேலும் அவர்களின் கடைசிப் பிரார்த்தனையாகிறது அல்ஹம்து லில்லாஹ் என்பதாகும்.

**-அல்குர்ஆன்**

அல்லாஹுத்த ஆலா தன் திருமறையில்ஸலாமுன் அலைக்கும் (அஸ்ஸலா மு அலைக்கும்) என்பது சுவர்க்க வாசிகளின் காணிக்கையாக இருக்கிறது என்று சிறப்பித்துக் கூறுகிறான். அதன் மேன்மையை நாம் சற்று சிந்திப்போமாக. இன்று நம்மிடையே எத்தனையோ பேர் ஸலாம் கூறுவதில் அலட்சியம் காட்டுகிறார்கள்.

அது இறைவனின் திருநாமங்களில் ஒன்று அதை சிறப்பாகக் கூறுங்கள் என்று நாயகம் (ஸல்) அவர்கள்

கூறியிருப்பதை எண்ணிப் பார்க்க மறந்திட்டார்கள். தன் நண்பர்களை சந்தித்தால் என்ன...? இப்படி சிலர், வாங்க இப்படி சிலர், நன்றி...இப்படி சிலர், இப்படி ஏதேதோ சொல்லிக் கொள்கிறார்கள். இவைகளிலெல்லாம் இருக்கின்ற சிறப்பைவிட அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்) என்று கூறிக்கொள்வது எவ்வளவு சிறப்பாகத் தெரிகிறது இல்லையா? எனவே தான் நீங்கள் உங்கள் நண்பர்களை சந்தித்தால் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக்கொள்ளுங்கள். உங்களில் ஸலாமைக் கொண்டு எவர்முந்தினாரோ அவரேசிறந்த நண்பர் என நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே இனியாகிலும் ஸலாத்தின் மேன்மையை உணர்ந்து நடக்க முற்படுவோமாக.

## பய பக்தி

வலியோரின் வஞ்சகத்தாலும், வல்லமையாலும் எளியோர் அவர்களைக் கண்டதும் கட்டுண்டநாகம் போல அடங்கி, ஒடுங்கி, நடுநடுங்கி நடப்பதைக் காண்கிறோம். அல்லன செய்து நம்மை அழித்துவிடுவார்களோ என்ற அச்சத்தால் அவர்களுக்கு அடிபணிந்து நடக்கும் அவலத்தை அன்றாடம் நாம் இந்த அவனியில் காண்கிறோம். அந்த எளியோர் அந்த வலியோர்மீது கொண்ட பயமே பக்தியாக பாசாங்கு செய்து பரிமளிப்பதைப் பார்க்கிறோம். கேலிக்குரிய அந்தப் போலி பக்தியால் எத்தனையோ அப்பாவிகள் அநியாயக்காரர்களின் அடிவருடிகளாக ஆகிவிட்டதையும் காண்கிறோம். எந்த எளியோர் அந்த வலியோர்மீது கொண்ட பயமே பக்தியாக பாசாங்கு செய்து பரிமளிப்பதைப் பார்க்கிறோம். கேலிக்குரிய



அந்தப் போலி பக்தியால எத்தனையோ அப்பாவிகள் அநியாயக்காரர்களின் அடிவருடிகளாக ஆகிவிட்டதையும் காண்கிறோம். ஆம் பயந்து பயந்து சாவதைவிட நயந்து போவதே நல்லது என்று எண்ணி அந்த வம்பனை மூச்சக்கு முன்னூறு தடவை புகழ்ந்து கொண்டு பக்திமானாக பண்ணிசைக்கும் பரமாத்மாக்களை இன்று பாரின் பல பக்கங்களிலும் பார்க்கமுடிகிறது. படைப்பின் ஏற்ற தாழ்விலுள்ள இப்பரமரகசியத்தைப் புரிந்து கொள்ளாமல் இத்தகைய போலி பக்தர்கள் பெருகி வருகிறார்கள்.

அப்படியானால் அல்லாஹ்வின் மீது கொண்ட பயமும் அதன்பின் ஏற்படும் பக்தியும் இத்தகைய பரிகசிப்புக்கு ஆட்பட்டதுதானா? என்று கேட்கத் தோன்றுகிறதா, உங்களுக்கு...? இல்லை...இல்லை இதோ உண்மை பயபக்தியாளர்களைப் பற்றி இறைவன் கூறுகின்றான் பாருங்கள்!

(வேதக்காரர்களே) நன்றி என்பது உங்களின் முகங்களை (தொழுகையில்) கிழக்கிலும் மேற்கிலும் நேராகத் திருப்புவதில் மட்டுமில்லை. எனினும் நன்றியுள்ளவனாகிறவன், எவர்கள் அல்லாஹ்வையும் கடைசி நாளையும், மலக்குகளையும், வேதத்தையும் நபிமார்களையும் விசுவாசித்து பணத்தில் மோகங் கொண்டிருக்கையில் அதை சுற்றத்தாருக்கும் அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை விடுவிப்பதற்கும் கொடுத்துதவி, தொழுகையை நிலைப் பாடாக்கி (தமக்கு விதியான) ஜக்காத்தையும் கொடுத்து வாக்குறுதி கொடுத்திருந்தால் அதை நிறைவேற்றி, (கொடிய) தரித்திரியத்திலும் நோயிலும். (பீஸபீலில்) இறைவனின் பாதையில் போர் நடக்கும்போதும், பொ-

றுமையாக (சகித்து யுத்தம் செய்து) வாழ்ந்தார்களோ அவர்களோயாகும். (மேற்கூறப்பட்ட காரியங்களனைத்தையும் செய்கிற) இவர்கள் உண்மையை உரைத்தவர்களேயாவார். மேலும் இவர்கள்தான் பயபக்தியுள்ளவர்கள்,

-அல்குர்ஆன்

ஆம்...இகபரத்தைப் படைத்து, ஒவ்வொரு உயிருக்கும் பிறப்பு இறப்பு என்பதைக் கொடுத்து இறப்புக்கு முன்னால் எத்தனை எத்தனையோ ஏற்றதாழ்வுகளில், இன்ப துன்பங்களில், பெருமை சிறுமைகளில் ஆட்படுத்தி, இறப்பின் கொடுமையையும், அமைதியின் பெருமையையும் புரிய வைத்து, அனைத்துயிரின் ஆவிக்குரிய சாவி தன் கையிலே இருக்கிறது என்பதைத் தெரிய வைத்து, இன்னும் எத்தனை எத்தனையோ படிப்பினைகளை அவனுக்கு அல்லாஹ் அளிப்பதால் அவன் அந்த ஆண்டவன் மீது அச்சம் கொள்கிறான். இன்னும் சொல்லப்போனால் அந்த அச்சம் அவனுக்கு அவசியமானதும்கூட காரணம்....அந்த அச்சம்தான் அவனை அறிவுடைய மாந்தனாக சீர்மைச் செறிவுடைய மாந்தனாக, நேர்மை நெறிவுடைய மாந்தனாக, தூய்மை வலிவுடைய மாந்தனாக மாற்றுவதற்கு துணை நிற்கிறது. பலத்திற்கு பயந்து பணத்திற்கு பல்லிளிக்கும் பாசாங்குப் பக்தர்களிடம் இத்தகைய பண்பாட்டைக் காண முடியாது. ஆக சாதாரண மனிதனிடம் மனிதன் கொள்ளும் பயத்திற்கும், மாநிலத்தைப் படைத்த மன்ன வனாம் அல்லாஹ்விடம் அடியான் கொள்ளும் பயத்திற் கும் சொல்லிலே மாறுபாடு இல்லாவிட்டாலும், செயலின் தன்மயிலே மிகுந்த வேறுபாட்டைக் காணமுடிகிறது. அதோடு மட்டுமல்ல பயத்தின் விளைவு...முன்னதைவிட பின்னதில் முற்றிலும் மாறுபட்டு மிளிர்கிறது.



சரி...அடுத்து அல்லாஹ்விடம் கொண்ட பயம் எப்படி பக்தியாக மாறுகிறது? அல்லாஹ்விடம் பயந்த பண்பாளன் அவனுக்கு அடிபணிந்து அவனைப்பற்றி ஆராயத் தொடங்குகிறான். ஆராய்ச்சியின் முடிவு.... அவனை அல்லாஹ்வுக்காகவே வாழும் மனிதனாக மாற்றிவிடுகிறது. எப்படி...? தாயின் கருவறையிலும், தாரணியின் பெரு அறையிலும் தன்னைக் காத்தவனும், விண்ணிலும் மண்ணிலும் எண்ணறிய வசதிகளைத் தனக்காகத் தந்தவனும் இறைவனே. அவன் அன்பிலோ அருளிலோ அணுவளவும் குறையாத நிறைவாளன் என்ற இந்த எண்ணம் மனிதனிடம் முளைக்கும்போது அதுபயமாக மாறி பக்தியாக பிரகாசிக்கத் தொடங்குகிறது. இறைவன்மீது பக்திகொண்ட மனிதனின் சொல்லிலும் செயலிலும், வாழ்விலும், தாழ்விலும் ஏன் ஒவ்வொரு மூச்சிலும் இறைவனின் அன்பு பிரதிபலிக்கத் தொடங்குகிறது. இதனால் அம்மனிதன் இறையையே எண்ணி, இறையையே சொல்லி இறைவனுக்கு நல்லவனாகி பக்தியில் உயர்ந்து விடுகிறான். ஆம், அந்த பக்திக்கு ஈடில்லை; இணையில்லை; எல்லையில்லை. ஆக அல்லாஹ்விடம் கொண்ட பயம், பக்தியாக மாறுகிறது.

அடுத்து ராபியத்துல் பஸரியா (ரஹ்) என்பவரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்களுக்கு எடுத்துக்காட்ட விழைகிறேன். ராபியத்துல் பஸரியா ஓர் இறைபக்தியுள்ள பெண். இவர் கனவிலும் நினைவிலும் ஹக்கனையே எண்ணிக் காலங்கழித்த பெண்மணி. ஓர் நாள் இப்பெண்ணிடம், ஹஸன் பஸரி (ரஹ்) என்ற ஓர் இறைநேசர் வந்தார். ஆன்மீக நெறிமுறையைப் பற்றி அல்லாஹ்வின் அடியார்கள் இருவரும் பேசத் துவங்கி னார்கள். பேச்சினூடே

ஹஸன் பஸ்ரி (ரஹ்) கேட்டார்கள். "பஸரியா...நீ ஷைத்தானை விரும்புகிறாயா" "இல்லை" என்றார் பஸரியா (ரஹ்). மீண்டும் அவர் கேட்டார் "ஷைத்தானை நீ வெறுக்கிறாயா?" அதற்கும் "இல்லை" என்றார் பஸரியா (ரஹ்). ஹஸன் பஸரிக்கு ஒன்றும் விளங்கவில்லை, "என்ன இது ஷைத்தானை விரும்பவில்லை எனில் வெறுப்பதாகத்" தானே பொருள். விரும்பவுமில்லை வெறுக்கவுமில்லை என்றால் முன்னுக் குப்பின் முரணாக பதிலாகவல்லவா இருக்கிறது? எனக்கு உன் பதிலொன்றும் விளங்கவில்லை பஸரியா!" என்று படபடத்துக் கூறினார்கள் ஹஸன் பஸரீ (ரஹ்).

புன்னகை பூத்த முகத்தோடு பஸரியா (ரஹ்) பின் வருமாறு பதிலளித்தார்கள். "அல்லாஹ்வின் அன்பரே! என் உள்ளம் இறைவன் வாழும் இல்லம். என் இதயம் முழுவதும் அல்லாஹ் நிறைந்து இருக்கிறான். ஒரு சின்னஞ்சிறு இடம்கூட இல்லாமல் அகம் முழுவதும் அவனே ஆட்சி செய்கிறான். அப்படியிருக்க ஷைத்தானை விரும்பவோ வெறுக்கவோ என் மனதில் எங்கே இடம் இருக்கிறது? அதனால்தான் நான் அவ்விதம் பதிலு ரைத்தேன் என்றார்கள் பஸரியா (ரஹ்). அவ்வளவுதான். அதைக்கேட்ட ஹஸன் பஸரீ கற்சிலையானார். வினயமுள்ள அந்த பதில் பக்தியில் பழுத்த அந்தப் பக்திமாணையே வியப்பிலாழ்த்தி விட்டது. இறை உணர்வை இதயம் முழுவதும் உதயம் கொள்ளச் செய்த அந்த இறைபக்தியை எண்ணும்போதெல்லாம் நம் உள்ளம் சிலிர்க்கிறது. இறைவனிடம் ராபியத்துல் பஸரியா (ரஹ்) இறைஞ்சி துஆ கேட்ட விதமும் பக்தியின் தன்மையும் எப்படிப்பட்டது தெரியுமா....? இதோ!



"எனது இறைவா! இம்மையில் எனக்கு நீ நல்க விழையும் கருணைகளை உனது நேசர்களுக்கு வழங்கி விடுவாயாக. எனக்கு நீயே போதுமானவன். இறைவா! இம்மையிலும், மறுமையிலும் அனைத்திற்கும் மேலாக உன்னையே நேசிக்க விரும்புகிறேன். மற்றனைத்தையும் விடுத்து உன்னையே சந்திக்க விரும்புகிறேன். இறைவா! நான் நரகின் வேதனையை விட்டும் நீங்குவதற்காகவே உன்னை வணங்கினேனேயானால் எனது தங்குமிடம் நரகமாகட்டும், இறைவா! நான் மரித்தபின் என்னை நரகத்தில் இட்டு அந்த நரகம் முழுவதும் நிரப்பும்படியாக. என் உடம்பைப் பெரிதாக்கி மற்ற எவரையும் நரகினில் போட முடியாதபடி ஆக்குவாயாக. சொர்க்க இன்பத்தைக் கருதி நான் வணங்கினேயானால், எனக்கு என்றும் சொர்க்கவாசல் அடைப்படட்டும். உன்னை அடைவதற்காக என்றுமட்டும் வணங்கினேனேயானால் உனது அழிவற்ற தரிசனத்தை விட்டும் என்னை விட்டுவிடாதே!" என்று இறைஞ்சினார்கள்.

எப்பேர்ப்பட்ட அன்பு, எப்பேர்ப்பட்ட பக்தி என்னே அப்பெண்மணியின் பக்தி, கண்கள் கண்ணீரில் நனைகிறதா? உள்ளம் உருகுகிறதா...அருகிப்போன அன்பு வெள்ளம் பெருகி ஓடுகிறதா? ஓடட்டும் ஐந்து நிமிடம் தொழுதுவிட்டு ஆயிரம் கதை பேசி துஆக் கேட்கும் சதைப் பிண்டங்களிடம் போய் இதைச் சாற்று ஊற்றுப்போல அவர்களின் உள்ளத்தில் உணர்ச்சி, பொங்கி வழியட்டும்.

இறைநேசர் மன்சூர் பின் ஹல்லாஜ் அவர்களைப் பற்றி ஓரளவு நீங்கள் அறிந்திருப்பீர்கள். அல்லாஹ்வின்மீது அளப்பரிய அன்பு கொண்டு அவனியில் அலைந்த அடியார் அவர். மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதையெல்லாம் கவனியாது, அவனின் திருநாமத்தையே அனுதினமும்

உச்சரித்துக்கொண்டு ஊன் உறக்கமின்றி உலகெல்லாம் அலைந்தார்கள். ஹக்கன்மேல் கொண்ட காதல் அக்கண்ணியவானைக் கரைத்தது. எலும்பும் தோலுமாக மாற்றியது. ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கிய அந்தப் பெருந்தகை, இறுதியில் தன்னிலை மறந்து "அனல் ஹக், அனல் ஹக்" (நானே இறைவன்) என்று முழங்க ஆரம்பித்தார். ஆனால் ஷரீஅத் முறைப்படி அவ்விதம் கூறியது தவறானதால் மக்கள் மத்தியில் குழப்பமேற்படும் எனக் கருதி அவரை அன்றைய அரசாங்கம் தூக்கி லிட்டது.

தூக்குமேடையைச் சுற்றிலும் அவருக்கு தண்டனை வழங்குவோரும், அவரது சீடர்களும் நின்று கொண் டிருந்தார்கள். அப்போது அவரது சீடர்கள் "தலைவர் அவர்களே! உங்களின் ஒப்பற்ற இலட்சியங்களைப் பின்பற்றிய எங்களைப் பற்றியும் உங்களின் லட்சியங் களுக்கு மாறுபட்ட இவர்களைப் பற்றியும் உங்களின் இறுதியான கருத்து யாது?" என்று வினவினர்.

உடனே மன்சூர்பின் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் சீடர்களே! நீங்கள் என்னைப்பற்றி மட்டுமே உயர்வாகக் கருதியிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் ஒரு பங்கு மட்டுமே சிறந்தவர்கள். ஆனால் என்னைத்தண்டிக்க வந்த இவர் களோ, ஒரே ஒப்பற்ற இறைவன்பால் நம்பிக்கைக் கொண்டு அவனின் கட்டளைகளைப் பேணுவதில் கண்டிப்பாக கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் உங்களைவிட இருமடங்குச் சிறந்தவர் கள்" என மறுமொழி கூறினார்கள்.

உயிர் பிரியும் வேளையில்கூட அவரின் உன்னத உடலிலிருந்து உதிர்ந்த உதிரத்துளிகளும் "அனல் ஹக்"! என்றே அலற ஆரம்பித்தன. அந்த அதிசயத்தைக் கண்டவரெல்லாம் நெருப்பிலிட்ட மெழுகுபோல நெஞ்சம் நெக்குருகி, கண்ணீர் வடித்தார்கள். இறை



அன்பிலே இதயத்தை இழைய வைத்து இறக்கும் நிலையிலும் இறை நாமத்தை இரைந்த இறைநேசரை- இஸ்லாத்தின் இனிய மாந்தரை என்றென்றைக்கும் மறக்க முடியாது. காலத்தால் மறக்க முடியாத இப்படிப்பட்ட கண்ணீர்க் காவியங்கள் எத்தனை எத்தனையோ! அவை- களை எழுத ஆரம்பித்தால் ஏடு கொள்ளாது. உங்கள் சீரிய சிந்தனைக்கு ஒன்றிரண்டைத் தந்தேன். இவை யெல்லாம் பக்தி மிக உயர்ந்து போனதால் ஏற்பட்ட விளைவுகள். அந்த அளவுக்கு நம்மால் போகமுடியுமா? என்பது அவரவரைப் பொறுத்த விஷயம். சரி பிரச்ச னைக்கு வருவோம். இறைவன்மேல் கொண்ட பயபக்தி என்பது இறைவனால் நமக்கு விலக்கப்பட்ட காரியங் களிலிருந்து விலகி இருந்தும், அவனால் நமக்கு கடமை யாக்கப்பட்டதை எடுத்து நடந்து கொள்வதேயாகும்.

இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்:

நிச்சயமாக நீங்களும் உங்களுக்கு பின்பிருந்த வேதக் காரர்களும் அல்லாஹ்வை பயந்து (பயபக்தியோடு) வாழுங்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளீர்கள்.

-அல்குர்ஆன்

ஈமான் கொண்ட விசுவாசிகளே! நீங்கள் இறைவனை முறைப்படி பயந்து கொள்ளுங்கள். மேலும் நிச்சயமாக நீங்கள் இஸ்லாமியராக அல்லாமல் மரணிக்க வேண் டாம்.

-அல்குர்ஆன்

தித்திக்கும் திருமறை பயபக்தியைப்பற்றிஇப்படி கூறுகிறது. இனி அந்த திருமறையின் நெறிப்படி வாழ்ந்த பெருநபியின் திருவாக்குகளைக காண்போம்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்..

ஓ...அபூதர் அவர்களே! இறைவன் குர்ஆன் ஷரீபிலே (முஸ்லிமாகிய) உங்களிடத்திலே சங்கையான (நல்ல) மனிதனே இறைவனிடம் சிறந்த பக்திமானாகின்றான் என்று கூறுகின்றான். மரியாதையோடும் சங்கையோடும் நடந்துகொள். ஏனெனில் அவன் உன்னை உற்று நோக்கிக்கொண்டிருக்கிறான். நீ செய்கின்ற நன்மைகள் உன் தீமைகளைத் தீய்த்துவிடும் என நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

-அல்ஹதீஸ்

மேலும் "அல்லாஹுத்தஆலா கியாமத்து நாளில் எல்லா மக்களையும் ஒரே இடத்தில் சேகரமாக்கி இருக்கும்போது அவனிடத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாகும். அதாவது ஓ...ஜனங்களே! நான் உங்களைப் படைத்த நாள் முதல் இதுவரை வாய் மூடியிருந்தேன். இப்போது நீங்கள் எனக்காக வாய் மூடியிருங்கள். இதோ உங்கள் அமல்கள் காட்டப்படுகிறது. நீங்கள் செய்தவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் மத்தியில் நற்குணத்தோடும், சங்கையோடும் நடந்து கொண்ட மனிதரே இறைவனின் உண்மையான பக்திமான்...என நான் உங்களுக்கு அறிவித்திருந்தும் உங்கள் இஷ்டத்திற்கு நடந்தீர்கள். எனது ஆணையை மதிக்காமல் நடந்தீர்கள். இப்போது நான் உங்களையோ உங்களின் கூக்குரலையோ, மதிக்க வில்லை" என்று இறைவன் இயம்புவான். அப்போது மக்களில் ஒரு பிரிவினர் தங்கள் தலைக்குமேல் கொடி பிடித்தவர்களாக வருவார்கள்! அவர்கள் தான் மாந்தரிடையே நற்குணங்களோடு பழகி, இறைவனையும் பயந்து நடந்த பக்திமான்களாகும். அவர்கள் கேள்வி கணக்கின்றி சொர்க்கம் புகுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.



ஒரு சமயம் தாவூது (அலை) அவர்கள் இறைவனிடத்தில் "இறைவா! நீ எனக்கு உதவியாக இருந்தது போல என் மகனுக்கும் உதவியாக இருப்பாயாக" என்று கேட்டார்கள், அப்போது இறைவன் தாவூது (அலை) அவர்களை நோக்கி "ஓ...தாவூதே! நீ என்மீது செலுத்திய பக்தியால் என் உதவியைப் பெற்றுக் கொண்டாய். அது போலவே உன் மகனையும் என்மீது பக்திகொண்டு வாழச்சொல்லும். நிச்சயம் அவருக்கு என் உதவி கிடைக்கும்" என்று மறுமொழி பகர்ந்தான்.

நாம் ஒவ்வொருவரும் இறை பக்தியை விரும்புகிறோம். ஆனால் அதற்கான எந்த முயற்சியும் நம்மிடத்திலே பூஜ்யமாக இருக்கிறது. கடலில் முத்தெடுக்கப் போனவன், திடலில் உட்கார்ந்து கொண்டு முத்து வேண்டுமென்று பித்துப் பிடித்தவன்போல கத்திக் கொண்டிருந்தால் சக்திதான் வீணாகுமே தவிர, முத்துக் கிடைக்குமா? நாம் இந்த உண்மையை ஏன் உணரக் கூடாது? ஆகவே இப்போது கூறி வந்த முறையில் இறைபக்தியை அடைய முயற்சிப்போமாக....!

அல்லாஹுத்தஆலா தாவூது (அலை) அவர்களுக்கு அறிவிக்கின்றான். அதாவது...."ஓ தாவூதே நீ வேங்கைக்கு பயப்படுவதுபோல எனக்குப் பயப்படுவீராக"; என்று.

ஆதம் (அலை) அவர்களை இறவன் சொர்க்கத்திலிருந்து பூமிக்கு அனுப்பியதும் தொடர்ந்து ஏழு நாட்கள் அழுதுகொண்டிருந்தார்கள். இதைக் கண்ட இறைவன் "ஓ...ஆதமே ஏன் அழுகிறீர்?' என்று கேட்டான். அதற்கு ஆதம் (அலை) அவர்கள், "புனிதமான சுவன பதியை விட்டும் குறைகளும் குழப்பங்களும் மோச நாசங்களும் நிறைந்த மிக கேவலமான இப்பாழ் துணியாவிற்கு நான் அனுப்பப்பட்டதை நினைத்து அழாமல் எப்படி நிம்மதியுற்றிருப்பேன்" என்று சொன்னார்கள்.

இதைக் கேட்ட இறைவன் "ஓ...ஆதமே" நீ! செய்த குற்றம் உன்னை சுற்றிக் கொண்டது. நீ ஆரம்பத்தில் சாதாரண மண்ணாக இருந்தாய்! உன்னைப் படைப்புகளில் எல்லாவற்றைவிடவும் சிறந்த மனிதப் படைப்பாகப் படைத்தோம். அப்போது உமக்காக மலாயிகத்து மார் களையெல்லாம் சுஜூது செய்ய வைத்து சிறப்பாக்கி னோம். நீ என் படைப்புக்களில் எல்லாம் மிகச் சிறந்த படைப்பு என்பதால் உம்மைப் பரிசுத்தமாக சொர்க்கத்தில் குடியிருக்கச் செய்தோம். அப்புனிதமான இடத்தில் நீ தவறேதும் செய்துவிடக்கூடாது என்பதற்காக இன் னென்ன பொருள்களை சாப்பிடக்கூடாது என்று சொல்லியும் இருந்தோம். நாம் இப்படியெல்லாம் உமக்கு உபகாரம் செய்து உயர்வு படுத்தியிருந்தும் அதை சிந்திக்க மறந்திட்டீர். எனது பயபக்தியை விட்டும் இமைப் பொழுதில் தவறிவிட்டீர். நீர் செய்த தவறால் இவ்வு லகத்திற்கு அனுப்பப்பட்டீர்" என்று கூறினான்.

மேலும் "ஓ ஆதமே! உம்மில் இருந்து நிறைய மனித இணங்களைத் தோற்றுவிக்கப் போகிறேன். அவர்களில் யாரெல்லாம் எமது அன்பை நாடி நான் இட்ட கட்டளை-களை நிறைவேற்றி பயபக்தியோடு நடக்கிறார்களோ அவர்களுக்கு என்னிடம் வெற்றியுண்டாகும். எவர் எமது கட்டளையை மீறி பயபக்தியின்றி வாழ்கிறார்களோ அவர்களுக்கு என்னிடத்தில் கொடிய வேதனை உண் டாகும். அவர்கள் யாராக இருந்தாலும் சரியே ஒருபோ-தும் விட மாட்டேன்" என்று இறைவன் ஆதம் (அலை) அவர்களிடம் கூறினான்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் உங்களைவிட ஆண்டவனை மிகவும் பயப்படு கிறேன். மடுவில் கறந்த பால் மீண்டும் மடுவில் புகும்



வரையிலும், இறைவனைப் பயந்து அழுத மனிதர்கள் நரகம் புகவே மாட்டார்கள்.

-அல்ஹதீஸ்

தவ்ராத் வேதத்திலே கூறப்பட்டுள்ளது. "ஓ...ஆத முடைய மகனே! நீ உன் தாய் வயிற்றில் தரித்திருக்கத் தக்க இடம் அமைத்துத் தந்தேன். நீ உன் தாய் வயிற்றில் எத்தகைய திடுக்கமும் இல்லாதிருக்க உன் முகத்தில் முகமூடி அமைத்திருந்தேன். அங்கே செவ்வனவே சாய்ந்திருக்க வலது பாகத்திலும், இடது பாகத்திலும் உனக்குச் சாய்மானம் அமைத்துத் தந்தேன். உன் அன்னை உண்ணுகின்ற உணவின் வாடை உனக்கு வீசாமல் இருக்க, உன் முகத்தை உன் தாயின் முதுகுப்புறம் திருப்பி வைத்திருந்தேன், அங்கே நிற்கவும் உட்காரவும் கற்றுத் தந்தேன். அங்கே நீ ஜீவிக்கத் தேவையான சுவாசத்தையும் உணவையும் தந்தேன். உன் தாய் வயிற்றில் உனக்கு உயிர் தந்து உன் நிலைமைகளுக்குத் தக்க வசதிகள் செய்து குறித்த காலம் அங்கே வாழச் செய்து உனக்குப் பணி விடை செய்ய இரு மலக்குகளை நியமனம் செய்து அவர் கள்ால் உன்னைக் கண்காணிக்கச் செய்தேன். இவைகளை நான் அல்லாத வேறு யாராலும் செய்ய இயலுமோ? இதை நன்றாகச் சிந்தித்துப்பார்.

குறித்த காலம் நிரம்பியதும் உன் தாயின் குவள றையைக் கொண்டு சாட்டப்பட்டுள்ள இரு மலக்கு களுக்கும் உன்னை பூமிக்கு இழுக்கும்படி நானே அறிவித்தேன். அது சமயம் அவ்விருமலக்குகளும் தங்க ளின் இறக்கைகளில் உன்னைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து பூமியில் இறக்கினார்கள். நீ பிறந்த குழந்தையாக இருக்கும்போதே கடிக்கப் பற்களின்றி நடக்க சக்தியின்றி இருந்தாய்; உன் நன்மையைக் கருதி உன் தாயின் முலைப்பாலை வெயில் காலத்தில் குளிர்ச் சியாகவும், குளிர் காலத்தில் சூடாகவும் ஆக்கினேன். நீ

ஒழுங்காகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக உன் பெற்றோர்களை உன் மீது அன்பு கொள்ளச் செய்தேன். இந்நிலையில் உன்னைக் கண்காணித்து ஆளாக்கி ஒரு சக்தியுள்ள மனிதனாக நடக்கச் செய்துள்ளேன்.

இவ்விதம் உன்னை வளர்த்துப் பாதுகாத்து வருகின்ற என்னைப் பயப்படாமல், என் ஆணைகளை மதிக்காமல் நடந்து திரிகின்றாய். என்னை நம்ப வேண்டியிருக்க என்னால் படைக்கப்பட்ட பொருள்களை நம்பி வாழ்கிறாய். என்னை மறுத்து என் சக்திகளை எதிர்த்துப் போராட நினைக்கிறாய். உன் ஆரம்ப நிலையை எண்ணிப் பார்க்க மறந்தாய். அதனால் என் நினைவையும் துறந்தாய்; ஆனால் நான் உன்னை மறக்கவில்லை. நீ கேட்பதைக் கொடுக்கிறேன். உனக்குத் தேவையான பொருட்களை விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் நானே குறைவின்றி கொடுத்து வருகிறேன். இதை நன்கு சிந்தித்துப் பார்.

உன் கண்களிலிருந்து எப்படி ஒளி வருகிறது....! உன் நாசியிலிருந்து நுகரும் தன்மையும், காதிலிருந்து கேட்கும் தன்மையும், நாவினால் சுவைக்கும் திறனும், மூளையினால் சிந்திக்கும் திறனும், ஏனைய அங்கங்களை அசைக்கும் ஆற்றலும் எப்படி ஏற்பட்டது...? எண்ணிப் பார்த்ததுண்டா...? ஆகவே என்னைப் பயந்து நல்லடியாராக வாழ முயற்சி செய், ஜெயமடைவாய் "என்று தவ்ராத்தில் தயாளகுணத்தின் தலைவனாம்". இறைவன் கூறுகிறான்.

தற்போதைய விஞ்ஞானம் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்களை ஆராய்ச்சி செய்கிறது. அறிவியல் அறிஞர்கள் அல்லாஹ்வினால் ஆக்கப்பட்ட பொருள்களின் தன்மைகளையே ஆய்ந்து அதனால் பெறக்கூடிய நன்மைகளை உலகுக்கு அறிவிக்கிறார்கள். ஆனால்



அவர்களாகவே ஆய்ந்து எவ்விதப் பொருள்களின் துணையும் துளியளவுமில்லாமல், ஒரு இயற்கைப் பொருளைத் தோற்றுவிக்க முடியுமா...? புதியதாக ஒரு கதிரவனை கண்டறிய முடியுமா? அறிவியல் தந்திரத்தால் யந்திரம் செய்து சந்திரனை ஆராய முடிகிறதே தவிர அவர்களாகவே ஒரு சந்திரனை மந்திரம் போட்டாவது கொண்டுவர முடியுமா...? அல்லது அவைகளைப் போன்ற தன்மைகளை கொண்டவைகளைத் தான் செய்ய முடியுமா...? முடியவே முடியாது. இயற்கையான பொருளின் ஒன்றின் முழு அமைப்பையே ஆராய முடியாத மனிதன் அப் பொருள்களைப் படைத்த ஆற்றலுடைய இறைவனையே இல்லையெனக் கூறுகிறான். அம்மனிதனுக்கு ஒரு சிறு வாதத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதோ...!

மனிதனால் ஆக்கப்பட்ட ஏதாவ்து ஒரு பொருளை எடுத்துக்கொள். அது எப்படி வந்தது என்று கேள், வேறு ஒரு பொருளின் உதவியால் அதைப் படைத்ததாகக் கூறுவான். அந்த வேறொரு பொருள் எப்படி வந்ததென்று கேள். அவன் ஒவ்வொருப் பொருளாகச் சொல்லிக் கொண்டே போவான். அவன் எவ்வளவு விடைகளை விடுத்துக்கொண்டே சொன்றாலும், நீ தயங்காமல் கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டே செல். இறுதியாக ஒரு பொருளில் வந்து முடிப்பான், முடிப்பானா...? முடித்தே ஆகவேண்டும். அதுவும் எப்படி வந்தது என்று கேள்? இப்போது உன் பிடியில் அவன் சிக்கிக் கொள்வான். சிக்கியே ஆக வேண்டும் அது தானாகவே உண்டானது என்ற தவறான வாதத்தை விடுத்து தப்பிக்கப் பார்ப்பான். விட்டு விடாதே தானாகவே எந்த பொருள் எப்படி உண்டாகும் என்று கேள். தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு தானாகவே

உண்டானது என்ற தவறான தகவல் தந்து தப்பிக்கப்பார்க்கும் தருக்கனை விட்டு விடாதே அங்கே தான் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்று தெள்ளத் தெளிவாக உன்னால் உணர்த்திக் காட்டமுடியும். ஆம் உன்னத நிலையிலுள்ள அப்பொருளின் முன்னைய மூலப் பொருள்களைப் படைத்தவன், முதல்வன், மூலகாரணமானவன், எல்லாம் வல்ல இறைவனே. அவன் படைத்த ஒவ்வொரு முதற் பொருளிலிருந்தே வெவ்வேறு பொருள்கள் மலர்ந்திருக்கின்றன என்ற உண்மையை உணர்த்த முடியும்.

இன்னிலையில் மனிதன், இறைவனா? அவன் எப்படி இருப்பான் என்று கேட்கவும் தொடங்குகிறான். இவன் கையில் ரோஜா மலரைக் கொடுத்து நுகரச் செய்வோம். சர்க்கரையைக் கொடுத்து சுவைக்கச் செய்வோம். இப் போது ரோஜாவின் மணத்தையும், இனிப் பையும் விளக்கி விபரமாகச் சொல் என்றால் அவனால் அதற்கு எப்படி விளக்கம் சொல்ல முடியும். அதை சுவைத்த அவனுக்கு மட்டுமே அதன் தன்மைப் புரியும். அதுபோலவே இறைவனைப்பற்றி பயபக்தி கொண்டவர்களுக்கே அந்த பக்தியின் சக்திக்குத் தக்கவாறு இறைவனை அறிய முடியும். அவன் அன்பாக இருக்கிறான் அருளாக இருக்கிறான் என்ற உண்மை புரியும். இறைவன் உண்மையாக இருக்கிறான், உயர்வாக இருக்கிறான் என்று அப்பக்தியாளனின் நாவு கவி பாடத் துவங்கிவிடும். அவனின் உள்ளம் இறை பக்தியில் மூழ்கிவிடும். சிந்தைக்கு விருந்தளிக்கும் கோடான கோடி விந்தைப் பொருள்களை எந்த எடுத்துக்காட்டும் இல்லாமல், மாதி ரியும் இல்லாமல் "குன்" (ஆகுக) என்ற சொல்லினாலேயே ஆக்கிக் காட்டினானே அந்த அல்லாஹ், அவன் எப் படிப்பட்ட நுண்ணறிவாளன், எவ்வளவு பெரிய சக்தியாளன், அப்படிப்பட்ட



இறைவனின் கட்டளைகளை மீறி பயபக்தியற்று நடப்பது முறைதானா? என்பதை சிந்திப்போமாக.

போலீஸ்காரர்கள் சாலைகளின் சந்திப்புகளில் நின்று போக்கு வரத்துக்களை ஒழுங்குபடுத்தி வரு கிறார்கள். அவர்கள் சிறிது தவறினால் சாலைகளில் என்னென்னவோ விபரீதங்கள் ஏற்பட்டு விடுகிறது. இது மிகச் சாதாரண விஷயம். ஆனால் இந்தப் பரந்த விண்ணையும் மண்ணையும் படைத்து அதிலே பல கோடி ஜீவ ஜந்துக்களையும் படைத்து, சூரியன் சந்திரன், கிரகங்கள் அனைத்தையும் ஒழுங்காக இறைவன் இயங்கச் செய்கிறான். அவைகள் தனது பாதையை விட்டும் சற்று விலகுமானால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படும் தெரியுமா....? அவ்வளவுதான் அண்டங்கள் அனைத்தும் துண்டம் துண்டமாக நொறுங்கி தூள் தூளாகப் போய்விடும். குடிசைகள் கோபுரங்கள், மச்சு வீடு,, குச்சுவீடு அத்தனையும் தவிடு பொடியாகி விடும். குமுறும்' எரிமலையும், கொந்தளிக்கும் கடலும், சீறி வரும் பெரும்புயலும் பாய்ந்து வரும் காட்டாறும். மற்றும் நாடு நகரங்கள் அத்தனையும் சிதைந்து சீரழிந்து சின்னாப் பின்னப்பட்டு ஒழிந்துவிடும். அப்பப்பா நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய விபரீதங்கள் ஏற்படாமல் பாதுகாத்து அனைத்தையும் ஒழுங்காக இயக்கி வருகின்ற அந்த இறைவனின் கட்டளையை மீறலாமா? அவனின் மீது பயபக்தி கொள்ளாமல் அவனை மறந்து வாழலாமா? பயபக்தியற்று வாழுகிற மனிதர்களுக்கு மிக நெருங்கிய நண்பன் ஷைத்தானேயா- கும். ஷைத்தானை நண்பராக்கிக் கொண்டவர்கள் நரகவாதிகளாகும், என்பதை நாம் மறந்துவிடலாகாது. நம்முடைய ஜீவியத்தில் நாம் செய்த பாவங்களை உணர்ந்து திருந்தி அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோரி

அவன்மீது பயபக்தியுள்ள அடியார்களாக வாழ முற்படவேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

"ஒரு மனிதன் நாற்பது வயதை எத்தியும் அவன் தன் பாவங்களுக்குப் பிழை பொறுக்கத் தேடி இறைவனைப் பயந்து பயபக்தியோடு வாழ முற்படவில்லையேல் அவன் முகத்தை ஷைத்தான் தன் கையைக் கொண்டு தடவுகிறான். நான் உனக்குப் போதுமானவன். நீ எனது நண்பன் கடைசிவரை இப்படியே இருப்பாயாக", எனக் கூறுகிறான்.

-அல்ஹதீஸ்

சங்கை என்பது இறை பக்தியாலும், சிறப்பு என்பது தாழ்மையாலும் பரிசுத்தம் என்பது இறைநம்பிக்கையாலும் உண்டாகுமென நாயகம் (ஸல்) நவின்றார்கள்.

கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் இறைபக்தி கொண்டவனுக்கு 12 வகையான நன்மைகள் கிடைப்பதாகக் கூறுகிறார்கள்:

1. இறைவன்மீது பயபக்தி கொண்டவர்களுக்கு திருப்தி கிடைக்கிறது.

2. பகைவர்களின் அபாயங்களை விட்டும் பாது காப்பு ஏற்படுகிறது.

3. அல்லாஹுதஆலாவின் உதவி கிடைக்கிறது.

4. பலாய் முஸீபத்துகளை விட்டும் ஈடேற்றமும், ஹலாலான இரணமும் கிடைக்கும்.

5. நம் வணக்கம், மற்றும் செயல் முறைகளில் நல்ல சீர்திருத்தத்தை உண்டாக்கும்.

6. அவனின் பாவங்கள் மன்னிக்கப்படும்.

7. அவன்மீது அல்லாஹ்விற்குப் பிரியம் உண்டாகும்



8. அவனின் வணக்கங்களை இறைவன் ஏற்றுக் கொள்கிறான்;

9. அவனுக்கு அல்லாஹ்விடமிருந்து சங்கையும், மரியாதையும் கிடைக்கும்.

10. அவன் மரிக்கும்போது சிதேவியாக மரிப்பான்.

11. அவன் நரகத்தை விட்டும் ஈடேற்றம் அடைவான்.

12. சொர்க்கலோகத்தில் அவன் நீடூழி காலம் தங்குவான்.

-மின்ஹாஜுல் ஆபிதீன்

இறைவன் கூறுகிறான்;

நிச்சயமாக நாம் உங்களுக்கும், உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹுத்தஆலாவைப் பயந்து (வாழுங்கள் என்று) எச்சரிக்கை செய்துள்ளோம்.

-அல்குர்ஆன்

பயபக்தியாளர்களிடம் பத்து அம்சங்கள் இருக்கும் அவை:

இறைவனின் ஏவல்களை ஏற்றுச் செயல்படுவதில் சற்றும் சருகமாட்டார்கள்.

இறைவனால் விலக்கப்பட்டவைகளை விட்டும் விலகி இருப்பார்கள்.

பொய், புறம், கோள், வீண் பேச்சுக்கள் யாவையும் விட்டும் நாவைப் பேணி பாதுகாத்து திக்ரு, தியானம், திரு மறை ஓதுதல் முதலிய நற்செயல்களில் ஈடுபடுத்து வார்கள்.

ஹராமான பார்வையின்றியும் ஹராமான பொருள் களில் ஆசை கொள்ளாமலும் இருப்பார்கள்.

ஹராமான ஆகாரங்களை விட்டும் தன் வயிற்றைப் பாதுகாத்துக் கொள்வதோடு ஹலாலான உணவையும் அளவோடு உண்பார்கள்.

கொலை, கொள்ளை, மோசம், நாசம் முதலிய தகாத செயல்களை விட்டும் கரங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

ஹராமான பாவச் செயல்கள் நடக்கும் பக்கம் நடந்து செல்வதை விட்டும் தன் பாதங்களை பாதுகாத்துக் கொள்வார்கள்.

கோபம், குரோதம், பகை, அகப்பெருமை, ஆணவம் முதலிய முறைகேடான எண்ணங்களை விட்டும் தன் உள்ளங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

பிறரின் முகஸ்துதி, தயவு தாட்சண்யம் ஆகியவைகளைக் கருதி நற்கருமம் புரியாமல் முற்றிலும் இறைவனுக்காகவே நற்கருமம் புரிவார்கள்.

நல்லவைகளைக் கேட்டுச் செயல்படுவார்கள். தீயவைகளைக் கேட்பதை விட்டும் தங்கள் காதுகளைப் பாதுகாத்துக்கொள்வார்கள்.

-துற்றதுல் வாயிலீன்

அடுத்து தாவூது (அலை) அவர்களுக்கு இறைவன் கூறிய சில அருள்வாக்கியங்களைக் கேட்போம்.

தாவூதே! நீ உலகில் எவ்வளவு காலம் தங்குவாயோ அந்த அளவுதான் உன் உலக பாசம் இருக்க வேண்டும்.

தாவூதே! எஜமானனாகிய அல்லாஹு த்தஆலாவினுடைய உதவி உனக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவுக்கு அவனைப் பயந்து வழிபடு.

தாவூதே! நீ சொர்க்கத்தில் எந்த அளவு சுகம் அனுபவிக்க விரும்புகிறாயோ அந்த அளவு நற்கருமங்களை புரிந்து கொள்.



தாவூதே! உன்னால் எந்த அளவு நரக வேதனையைப் பொறுத்துக்கொள்ள இயலுமோ அந்த அளவுபாவங்களை செய்து கொள்.

தாவூதே! நீ இறைவனுக்கு மாறுசெய்ய நாடினால் அவன் அல்லாத வேறொரு இடத்தை தேடிக்கொள்:

என இறைவன் தாவூது (அலை) அவர்களுக்கு அறிவுரை பகர்ந்தான். இறை பக்தியால் மனிதன் புனிதமடைகிறான். அவனின் ஈருலக வாழ்க்கையும் சீர் பெறுகிறது. எவருடைய உள்ளத்தில் பயபக்திஇருக்கிறதோ அவரின் உள்ளம் இறைவனின் இல்லமாகும். அங்கு பாவம் என்ற படுகுழிகள் இராது. தீமை என்ற நெருப்பு எரியாது. இதனால் அம்மனிதரை இறைவன் போற்றுகிறான். வானவர்கள் போற்றுகிறார்கள். ஈருலகமும் அம்மனிதனை வாழ்த்தி வழியனுப்புகிறது.

## முப்பெரும் நபிமார்களின் வரலாறுகள் தரும் படிப்பினை

அநியாயமும் அட்டூழியமும் ஆர்ப்பரிக்க முனையும் போதெல்லாம், கொடுமையும் கொடூரமும் கோலோச்ச நினைத்தபோதெல்லாம் துரோகமும், வஞ்சகமும் துள்ளி விளையாடத் துவங்கியபோதெல்லாம், மக்கள் ஈனத்தில் இழைந்து அதுவே நம் இன்பமெனக் கொண்டாடியபோதெல்லாம், எத்தர்களாக எக்காளமிட்டுக் கொக்கரிக்கும் கொடியோர் கூட்டம் கூடிய போதெல்லாம், மக்களின் பாவத்தைக் கழுவ, பரிசுத்தம் தழுவ அன்பும் அறனும் ஓங்க பண்பும் பயனும் தேங்க இல்லாரும் -இருப்போரும் வல்லாரும், பொல்லாரும் நல்லோராய் அல்லாஹு தஆலாவின் ஆணைகேட்டு நடக்க அந்த அளவற்ற அருளாளன் அன்புமிகக் கொண்ட அடியார்களாக குணத்தின் குன்றுகளாக கறையேதும் இல்லா கனவான்

களாக. கண்ணிய உணர்வு கொண்ட புண்ணிய புருஷர் களாக நபிமார்களையும் ரசூல்மார்களையும் இப்பூவு லகில் பூத்துக்குலங்கச் செய்தான். தனது ஆணைகளையும் அந்த நபிமார்கள் மூலம் இப்பூவுலகிற்குத் தந்தான். அந்நெறி முறைகளை ஏ..று நடக்கும் அந்த சத்திய சீலர்களை எல்லா மக்களுக்கும் எடுத்துக்காட்டாக வாழச் செய்து காட்டினான். பேச்சிலும், மூச்சிலும் சொல்லிலும், செயலிலும் வாழ்வின் ஒவ்வொரு கட்டத் திலும் ஒவ்வொரு நிமிஷத்திலும் அவனையே எண்ணி நிற்கும்படி செய்தான். அவர்கள் கண்ணின் இமைகளை இமைக்க மறந்தாலும் இறைவனை நினைக்க மறந்தார் களில்லை.

சிறுமைச் சூழலில் சிக்கி சின்னாப் பின்னப்பட்டுப் போக இருந்த சமுதாயங்களை எல்லாம் இறைவன், அருமை நபிமார்களின் பொறுமைச் செறிவுகளாலும், அறிவுச் சொற்களாலும், மேன்மை நெறி வழிமுறை களாலும் பெருமையடையச் செய்தான். அறியாமை இருளில் ஆழ்ந்து கிடந்த மக்களை அல்லாஹ்வின் அருள் நாடும் அன்பர்களாக ஆக்குவதற்கு அந்தநபி மார்கள் பட்ட அல்லல்கள் அவலங்கள், கொஞ்சமா, நஞ்சமா...அப்பப்பா.... அல்லாஹ் தன் திருத் தூதர் களின் திரு பொருத்தத்தை மக்களுக்குக் காட்ட அவர் களை எப்படியெல்லாம் சோதனை செய்தான்... அவ்வனைத்து சோதனையிலும் அவர்கள் காட்டிய சாதனை அதன் மூலம் மக்கள் பெற்ற போதனை சரித்திரத் தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. அதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது நாம் எம்மாத்திரம்...அனுதினமும் ஐவேளை அவனை அழைப்பதற்கு அவகாசமின்றி நினைப்பதற்கு நேரமின்றி பிழைப்பதற்கு பிழையான வழிகளைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம். எவ்வளவு பெரிய மடமை,



எப்படிப்பட்ட கொடுமை. கீழ்க்காணும் முப்பெரும் நபிமார்களின் வரலாறுகள் தரும் படிப்பினை நம் உள்ளத்தைத் தொடட்டும். அதன் கதவுகள் திறக்கட்டும்.... அவர்கள் பட்டபாட்டைப் பாருங்கள். படியுங்கள் பயன் புரியும்...பயன் தெரியும்...

நபி யாஃகூப் (அலை) அவர்கள் தன் மகன் யூசுப் (அலை) அவர்களை விட்டும் நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்தார்கள். இந்த துக்கத்தால் அழுதழுது அவர் களின் கண்கள் ஒளிமங்கி உடல் தளர்ந்து நலிந்து மெலிந்துவிட்டது. இந்நிலை அவர்களுக்கு ஏற்பட்டதற்கு காரணம் என்ன தெரியுமா?

நபி யாஃகூப் (அலை) அவர்களுக்கு இறைவன் அறிவிக்கின்றான் "ஓ...யாஃகூபே! நீர் உம்பிள்ளைகளைக் காட்டிற்கு அனுப்பும்போது, அவர்களில் சிறுவராக இருந்த யூசுபை ஓநாய் தின்று விடாமல்பத்திரமாக பாதுகாத்துக் கொள்ளும்படி மற்றப் பிள்ளைகளிடத்தில் பொறுப்பு கொடுத்தாய், ஏக வல்லவனான என்னிடம் பொறுப்பு கொடுக்க ஒரு கணம் மறந்திட்டீர். அதன் பொருட்டே உன்மகன் யூசுப் உம்மைவிட்டும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாகவே உமக்கு துக்கம் மேலோங்கி கண்கள் ஒளிமங்கி உடல் நலிந்து மெலிந்து விட்டது" என யாஃகூப் நபி அவர்களுக்கு இறைவன் அறிவித்தான்.

நபி ஜக்ரிய்யா (அலை) அவர்களை விரோதிகள் வெட்டுவதற்காக விரட்டிக்கொண்டு வந்தார்கள். அந்த இக்கட்டான நிலையில்நபி ஜக்ரி (அலை) அவர்கள் வழியிலிருந்த ஒரு மரத்திடம் ஓ மரமே உன்னில் நான் ஒளிந்து கொள்ள இடம் கொடு என்று தன்னையும் மறந்து கூறிவிட்டார்கள். மரமும் பிளந்தது, நபி

ஜக்ரியா (அலை) அவர்களும் அதில் ஒளிந்து கொண்டார்கள். மரமும் முன்போல மூடிக்கொண்டது. ஆனால் இப்லீஸானவன் நபியவர்களின் ஆடையின் ஒரு பகுதியை மரத்திற்கு வெளியே தெரியும்படி இழுத்து வைத்துவிட்டான். விரோதிகள் அம்மரத்தை நெருங்கியதும் இப்லீஸானவன் அத்துணியைக் காட்டினான். விரோதிகளும் அம்மரத்தை மேலிருந்து கீழாக சரிபாதி அறுத்துப் பிளந்தார்கள். மரம் பிளவுபட்டு வீழ்ந்த போது ஜக்ரியா (அலை) அவர்களின் உடலும் இருகூறாகப் பிளந்து வீழ்ந்தது. இந்நிலை அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது தெரியுமா?

விரோதிகள் வாளால் மரத்தை மேலிருந்து அறுத்து வரும்போது வாள்முடிவில் நபியவர்களின் தலையை உரச ஆரம்பித்தது. அந்நிலையில் ஜக்ரியா (அலை) அவர் கள் லேசாக முனகினார்கள்.

அப்போது இறைவன் "ஓ..ஜக்ரியாவே"! என்ன முணங்குகிறீர், இன்னும் ஒரு முறை முணங்குவீரேயா னால் உம் நபிப்பட்டமே பறிக்கப்பட்டுவிடும். கேவலம் வழியிலிருந்த ஒரு மரத்திடமா ஒளிந்து தப்பித்துக் கொள்ள உதவி கோரியிருக்க வேண்டும்? உம்மைக் கால மெல்லாம் காத்துவரும் என்னிடமல்லவா உதவி கோரி யிருக்க வேண்டும்? எதனிடம் நீர் பாதுகாப்பு வேண்டி னீரோ அது தன்னைத் தானேகூட பாதுகாத்துக் கொள்ள வில்லையே பார்த்தீரா...! என்னை ஒருகணம் மறந்ததால் ஏற்பட்ட விளைவல்லவா இது!" என எச்சரித்தான்.

யூனுஸ் நபி மீன் வயிற்றினுள் சென்றார்கள் ஏன் தெரியுமா? யூனுஸ் நபி அவர்களின் கவ்முகள்



அவர்களை சொற்களுக்குச் செவி சாய்க்காததால் அவர்களை நெருப்பு மழையால் அழித்து விடும்படி துஆக் கேட்டார்கள். அல்லாஹுவும் தன் அடியவரின்வேண்டுகோளை ஏற்று, "யூனுஸே, நெருப்பு மழை இறங்கப்போகிறது. நீர் பக்கத்தில் உள்ள மலைக்குச் சென்றுவிடும் என்று ஆணையிட்டான் அதன்படியே அவர்களும் தன் குடும்பத்தினரோடு பக்கத்திலுள்ள மலைக்குச் சென்று விட்டார்கள்.

நெருப்பு மழை பொழிவதற்கான அடையாளங்கள் தென் பட்டதும், அம்மக்களெல்லாம் பயந்து போய் இறைவா! நாங்கள் உனக்கே ஈமான் கொண்டோம். யூனுஸை நபியாக ஏற்றுக் கொண்டோம் எங்களின் பாவங்களை மன்னித்தருள்வாயாக" என்று இறைவனிடம் மன்றாடிப் பிரார்த்தனை புரிந்தார்கள். அதன் பொருட்டால் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நெருப்பு மழை பொழியப்படாமல் அம்மக்கள் பாது காக்கப்பட்டார்கள். அதன்பின் அம்மக்கள் யூனுஸ் நபியைக்கண்டு அவர்களின் சொற்படி நடக்க சித்தம் கொண்டு யூனுஸ் நபியைத் தேடி அலையலானார்கள்.

இந்தநிலையில் யூனூஸ் நபி (அலை) அவர்கள் தங்கியிருந்த மலையின் அருகாமையில் இப்லீஸ் மனித கோலத்துடன் வருகிறான். அவனிடம் ஊர்நிலைபற்றி யூனூஸ் நபி (அலை) அவர்கள் விசாரிக்கலானார்கள். அவன் உர் நிலைக்கு மாறாக "ஓ...யூனூஸே ஊரில் நெருப்பு மழையும் இறங்கவில்லை, ஒன்றும் இறங்க வில்லை. மக்களெல்லாம் நிம்மதியாக இருக்கிறார்கள், யூனுஸை இழுத்து வந்து தக்க தண்டனை வழங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு உம்மை தேடியலைகின் றார்கள்...நீர் அவர்கள் வசம் கிடைத்தால் உமது நிலை மிக மோசமாகவிடும்" என்று கூறினான்.

இதனைக்கேட்ட யூனுஸ் நபியவர்கள் வேறு ஊருக்கு ஓடிவிடலாமென்றெண்ணி தம் குடும்பத்தார்களை அழைத்துக்கொண்டு அம்மலையை விட்டும்புறப்பட் டார்கள். புறப்பட்டு வரும் வழியில் அவர்களின் மூத்த மகனை ஓநாய் தூக்கிச்சென்று விட்டது. இளைய மகனையும் மனைவியையும் ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விட்டது. யூனுஸ் நபி அவர்களும் கடலில் எறியப்பட்டு மீன் வயிற்றினுள் சென்றார்கள். இவர்களுக்கு இந்நிலை ஏன் ஏற்பட்டது தெரியுமா?

இறைவன் யூனுஸ் (அலை) அவர்களுக்கு அறிவிக் கிறான். "ஓ..யூனுஸே! அந்த மலைக்கு நாமே உம்மை போகச் சொன்னோம். நாமே உம்மைப் பா-துகாப்போம். இதை சற்று மறந்து மக்களின் நிலையறியாமல் என் ஆணை யில்லாமல் அம்மலையைவிட்டு நீர் புறப்பட்ட தற்காக இப்படிப்பட்ட இன்னல்கள் உமக்கு ஏற்பட்டன. என்று அறிவித்தான். இன்னல்கள் நீங்கவேண்டுமென்று தானே அம்மலையை விட்டும் ஓடிவந்தீர். நிலைமை என்ன ஆனது பார்த்தீரா?." இவ்விதம் இறைவன் இயம்பினான்.

வாசக நேயர்களே! மீண்டும் நினைவு படுத்துகிறேன், மேற்குறிப்பிட்ட மூன்று பேரும் நிபிமார்களே. அவர்கள் பக்தியின் சக்தியாலும், பதவியின் உதவியாலும் இறை யோனிடம் மிக நெருக்கமானவர்கள். அவனுக்காகவே உயிரை உடலில் வைத்துக்கொண்டு உலகில் உலவிய வர்கள். மாசில்லா நெஞ்சமும், தூசில்லா பாசமும் கொண்ட மாமேதைகள்



புவியைப் புனிதப்படுத்துவதற்கு அவியும் அனலிலும், தவியாய் தவித்து நின்ற நபிமார்கள். அவர்கள் மறதியாக தப்பித்தவறி ஒரு தவறு இழைத் ததற்காக இப்படிப்பட்ட இன்னலில் வீழ்ந்தார்கள் .என்றால் நாம் அவர்களைவிட எவ்வகையில் மேம்பட்ட வர்கள்? எண்ணிப்பார்க்க வேண்டாமா இதனை? யூனுஸ் (அலை) அவர்கள், வாழ்விலும் தாழ்விலும் துணை நிற்கக்கூடிய மனைவியை இழந்தார்கள். நடுக்கடலில் நட்டாந்தரமாய் தூக்கி எறியப்பட்டார்கள். அதுவும் போதாதென்று தீனுக்கு உழைத்த நபி மீனுக்குள் மறையும் நிலைக்கு ஆளானார்கள். இது போலவே நபி யாஃகூப் (அலை) அவர்கள் மகனை (யூசுபை) இழந்த கவலையால் உடல் நலிந்து மெலிந்து அழுதழுது கண் பார்வையை இழந்தார்கள். நபி ஜக்ரிய்யா (அலை) அவர்கள் சரி பாதியாக வாளால் பிளக்கப்பட்டார்கள். இவ்வளவு சோதனைகள் ஏன்...? ஒரே ஒரு சிறிய தவறுக்காக. ஆனால் நாம் எத்தனை தவறுகளை இத்தனை நாளாக செய்து கொண் டிருக்கிறோம்? அப்படியிருந்தும் அந்த அளவற்ற அருளா ளன், தன் நிகரற்ற அன்பால் ஆதரிக்க வில்லையா? அப்படி யாயின் நாம் எந்த அளவுக்கு இறைவனைப் பயப்படுகிறோம் என்பதைச் சற்று சிந்திப் போமாக!

"இறைவா! நீ எங்களுக்கிட்ட கடமைகளை சரிவர செய்யத் தவறிவிட்டோம். அருள்கூர்ந்து எங்களை மன்னித்துப் பாதுகாத்து அருள்வாயாக. உன் வழியில் எங்களை நிலைத்திருக்கச் செய்வாயாக."

# இறைவனை திக்ரு செய்யுங்கள்

அல்லாஹ்வை 'திக்ரு' செய்வதால் அடியான் அடையும் ஆதாயங்களைப்பற்றி அருமைநபி (ஸல்) அவர்கள் அருளிய அன்புரைகளைக் காண்போம்.

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

ஒரு தலைவர், அல்லாஹ்வின் திக்ரில் தனக்கிருக்கும் நன்மையை அறிவாராயின் தனது தலைவர் பதவியை விட்டுவிடுவார். ஒருவியாபாரி அல்லாஹ்வின் திக்ரில் தனக்கிருக்கும் நன்மையை உணருவாராயின் தனது வியாபாரத்தை விட்டுவிடுவார். அவரின் தஸ்பீஹின் நன்மைகளை புவியிலுள்ளோருக்குப் பங்கு வைத்துக் கொடுத்தால் அவர்கள் ஒவ்வொருவரும் உலகிலுள்ளதைப்போல் பதின்மடங்கு அடைவர்.

**-அல்ஹதீஸ்**

மூமின்களுக்கு அல்லாஹ்வின் திக்ரும், குர்ஆன் ஓதுதலும் தொழுமிடமும் ஆகிய மூன்றும் வேட்டை ஆதாயப் பொருள்களாக இருக்கின்றன.

**-அல்ஹதீஸ்**

திக்ரு செய்வது ஈமானின் அடையாளமாகும் திக்ரு செய்வது பாவத்தை விட்டும் தப்பிக்க ஏதுவாகும் ஷைத்தானை வென்று பாதுகாப்புத்தரும் சாதனமாகும். நரகத்தை விட்டும் தடுக்கும் கேடயமாகும்.

**-அல்ஹதீஸ்**

இறைவனிடம் நன்மையால் மிகைத்த செயல்கள் எவை தெரியுமா?

*1.* எல்லா நிலையிலும் இறைவனை திக்ருசெய்வது.

*2.* முஸ்லிமான சகோதரனுக்கு எவ்விதக் கஷ்டமும் கொடாமல் அவனைத் திருப்திபடுத்துவது.



*3.* எவ்விஷயத்திலும் நீதத்தைப்பேணி நடப்பது ஆக இம்மூன்றுமேயாகும்.

**-அல்ஹதீஸ்**

திக்ரு செய்வதில் சிறப்பான முறை அமைதியாகத் திக்ரு செய்வதாகும்.

**-அல்ஹதீஸ்**

காலையிலும், மாலையிலும் இறைவனின் திக்ரில் ஈடுபட்டிருப்பதானது இறைவனின் பாதையில் யுத்தம் செய்வதைவிடச் சிறப்பானதாகும்.

**-அல்ஹதீஸ்**

என்னுடைய அடியான் என்னை திக்ரு செய்த வண்ணம் அவனது இரு உதடுகளை அசைக்கும்போதெல்லாம் நான் அவனுடன் இருக்கிறேன் என்று அல்லாஹ் அருளுகிறான்.

**-அல்ஹதீஸ்**

இரகசியமாக செய்யப்படும் திக்ரே அமைதியான திக்ரு ஆகும்.

**-அல்ஹதீஸ்**

இறைவனிடத்தில் சிறந்த நல்லடியார்கள் யாரெனில் இறைவனை அதிகமாக திக்ரு செய்தவர்களே ஆகும்.

**-அல்ஹதீஸ்**

"உங்களுடைய ஈமானை புதுப்பியுங்கள்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு தோழர்கள் "யாரசூலல்லாஹ், எங்களுடைய ஈமானை எவ்வாறு நாங்கள் புதுப்பிப்போம்" என்று கேட்டார்கள் அதற்கு "லாஇலாஹ இல்லல்லாஹு" என்ற திக்ரை அடிக்கடி அதிகமாகச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். **- அல்ஹதீஸ்**

முஸ்லிமான அடியான் 'லாயிலாஹ இல்லல் லாஹு' என்று கூறுவானாயின், அவ்வாக்கியம் வானங்களைப் பிளந்துகொண்டு சென்று அல்லாஹுத் தஆலாவின்முன் போய் நிற்கிறது. அப்பொழுது அல்லாஹ் 'நீ அமரு' 'நீ அமரு, என்று கூறுவான். நீ மன்னிக்காமல் இருக்கையில் நான் எவ்வாறு அமர்ந்திருக்கமுடியும்." என்று கூறும். அப்பொழுது அல்லாஹ் அந்த திக்ரை நோக்கி, "உன்னைக்கூறிய மனிதரை நான் மன்னிக்காமல் உன்னை அவர்களின் நாவில் மொழியச் செய்யவில்லை" என்று கூறுவான்.

-அல்ஹதீஸ்

பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளும் "ஸுப்ஹானல் லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹா இல்லல் லாஹுவல்லாஹு அக்பர்" என்று கூறுகிறது. ஆகவே உங்களில் எவராகிலும் இந்தத் தஸ்பீஹை கூறுவாராகில் அவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அப்பாவங்கள் கடல் அலைகள் போன்று இருந்தாலும் சரியே.

-அல்ஹதீஸ்

எவர் 'ஸுப்ஹானல்லாஹி' என்ற தஸ்பீஹை முழுமையாக நூறு விடுத்தம் ஓதுவாரோ, அவருக்கு பத்து அடிமைகளை விடுவிப்பதை விட ஏழு ஒட்டகங்களை அறுத்துத் தர்மம் செய்வதை விட மிகச் சிறந்த நன்மையுண்டாகும்.

-அல்ஹதீஸ்

எவர் "ஸுப்ஹானல்லாஹி" என்ற தஸ்பீஹை கடைசி வரை ஒருவிடுத்தம் சொன்னாரோ அவரின் ஒரு இலட்ச பாவங்கள் அழிக்கப்படுகிறது. அவருக்கு ஒரு இலட்சம் நன்மைகள் கொடுக்கப்படுகிறது. ஒரு இலட்சம் தரஜாக்கள் உயர்த்தப்படுகிறன.

-அல்ஹதீஸ்



எவர் 'ஸுப்ஹானல்லாஹி' என்ற தஸ்பீஹை ஒரு விடுத்தம் கூறினாரோ, அவரின் பாவங்கள் மரத்தின் இலைகள் உதிர்வதைப்போல உதிர்ந்து விடுகிறன.

-அல்ஹதீஸ்

எவர் 'ஸுப்ஹான ரப்பியல் அளீம்' என்ற தஸ்பீஹை ஒரு விடுத்தம் கூறினாரோ அவருக்காக சொர்க்கத்தில் ஒரு மரம் நட்டு வைக்கப்படுகிறது.

-அல்ஹதீஸ்

எவர் 'ஸுப்ஹான ரப்பியல் அஃலா' என்று ஒரு விடுத்தம் சொல்வாராகில், அவரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவர்க்கம் புக ஏதுவாகிறது.

-அல்ஹதீஸ்

அல்லாஹ்வை அதிகமாக தஸ்பீஹ் செய்வதானது இரணத்தில் பரக்கத்தை ஏற்படுத்தும்.

-அல்ஹதீஸ்

"ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி" என்ற தஸ்பீஹையும், 'ஸுப்ஹானல்லாஹில் அளீம் வபிஹம்திஹி' என்ற தஸ்பீஹையும் நாவால் சொல்வது மிகச் சுலபமாகும். (ஆனால் அதுவே) மிகப் பெறும் நன்மையைக் கொடுக்கும். அதாவது, மீஜான் தராஸில் நன்மைகளின் தட்டைக் கனக்கச் செய்கிறது. அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்கு மிக நெருக்கமாவும் இருக்கிறது.

-அல்ஹதீஸ்

## தர்மம் செய்யுங்கள்

இஸ்லாமிய ஐந்து கடமையில் ஈகையும் ஒன்று. இறைவன் இயற்கையில் ஏற்றத் தாழ்வுகளை படைத்தது

போலவே, மனிதப் படைப்பிலும் சிலரைச் செல்வராக வும் பலரை வறியவராகவும் ஆக்கியுள்ளான்.

ஆனால் மேடு பள்ளங்கள் மண்ணில் இருக்கலாம். மாந்தனின் உள்ளத்தில் இருக்கக் கூடாது. இதை இதயத் தில் இருத்தி, செல்வர்கள் தம்மைத்தேடி வருவோருக்கு தன்னால் இயன்றளவு உதவி செய்யவேண்டும். ஏழை களைத் தன் மூலம் காப்பாற்றுவதற்காகவே இறைவன் தமக்குச் செல்வத்தை தந்ததாகவும் எண்ணவேண்டும். இறைவனும் தன் திருமறையில்:

"நீங்கள் விரும்புகிற பொருள்களில் (சிலதை) தர்மம் செய்யாத வரை நன்றியுடைய மக்களாக மாட்டீர்கள். மேலும் நீங்கள் எப்பொருளை தர்மம் செய்தாலும் நிச்சயமாக இறைவன் அதனை நன்கு அறிகிறான்" என அறிவுறுத்தியுள்ளான்.

குடிக்க கூழில்லாமல் பசியால் துடிக்கும் மாந்தரை பார்த்து விட்டும், அறுசுவை உணவுகளை அற்புதமாக சமைத்து ஆனந்தமாக உண்டு களிப்பதிலும் தம் செல் வங்களை பயன்படுத்துவது மனித பண்பாட்டிற்கு சிறப் பன்று. நாம் நம்முடைய பொருள்களை செலவு செய்த தைப்பற்றி நாளை மறுமையில் இறைவனிடம் பதில் சொல்லியே தீரவேண்டும்.

இறைவன் தன் திருமறையில் "ஒவ்வொரு மனிதனும் தன் செயலுக்கு (பதில் சொல்லவும், அதற்குள்ள கூலியை பெறவும்) பொறுப்பாளியாக்கப்படுகிறான்" என்று குறிப் பிடுகிறான்.

மற்றொரு ஆயத்தில்,

எவர்கள் உலோபித்தனம் செய்வதுடன், இதர மக்களையும் உலோபித்தனம் செய்யும்படி தூண்டுதல் செய்து, அல்லாஹு தஆலா தன் அருட்கொடையி லிருந்து அவர்களுக்குக் கொடுத்ததையும் மறைத்துக்



கொள்கிறார்களோ, அத்தகையநன்றி கெட்டோருக்கு இழிவுபடுத்தும் வேதனையை நாம் சித்தப்படுத்தியுள் ளோம்.

-அல்குர்ஆன்

அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள். இன்னும் உங்கள் கைகளை அபாயத்தின் பக்கம் ஆக்காதீர்கள். மேலும் உபகாரம் செய்யுங்கள், நிச்சயமாக அல்லாஹ் உபகாரம் செய்கிறவர்களை நேசிக்கிறான்.

-அல்குர்ஆன்

உனக்கு தர்மம் கொடுக்க சக்தி இருந்தும் கொடாமல் இருந்துவிடாதே. ஏனெனில் பிறரால் இழிவாகக் கருதப் படுவாய். (என்றாலும்) அப்பொருள் அனைத்தையும் ஒரேயடியாக தர்மம் கொடுத்துவிட்டு ஒன்றுமில்லாத வனாகியும்விடாதே.

-அல்குர்ஆன்

அந்த உபகாரத்தை யாருக்குச் செய்யவேண்டும் என்றும் இறைவன் கூறியுள்ளான் இதோ கவனியுங்கள்:

(ஓ...நபியே)! அவர்கள் உம்மிடம் எதை தர்மம் செய்வது (யாருக்கு செய்வது) என்று கேட்கின்றனர். நீங்கள் தர்மங்களில் எதைச் செய்தாலும் பெற்றோர் களுக்கும் பந்துக்களுக்கும் அனாதைகளுக்கும் ஏழை களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் செய்யுங்கள். மேலும் நீங்கள்? பொருள்களிலிருந்து எதை தர்மம் செய்தாலும் அதை இறைவன் நன்கு அறிகிறான் என்று கூறிவிடவும்.

வாசக நேயர்களே! ஏழைகள் பசியால் வருந்தும் போது நாம் ருசியால் சுவைத்து கொண்டிருப்பதற்காக இறைவன் நமக்கு செல்வத்தை தரவில்லை. அப்பசியின் கொடூரத்தை எண்ணி ஏழைகளின் காவலனாக ஒவ் வொரு செல்வந்தரும் மாறவேண்டும் என்பதற்கேயாம். செல்வந்தர்களில் சிலர் எச்சில் கையாலும் காக்கையை

விரட்டபயப்படுவார்கள். ஊண், உறக்க மின்றி, அல்லும் பகலும் பணத்தைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொள்வார்கள். இவர்கள் பார்வையில் ஏழைகளை விடவும் கேவலமாக இருப்பார்கள். தானும் அனுபவிக்காமல் மற்றவர்களுக்கும் கொடாமல் பணத்தைத் தேடுவதையே தன் குறிக்கோளாக கொண்டலைவார்கள். இவர்களைத்தான் உலோபி என்கிறோம். அத்தகைய உலோபிகள் மீளும் இடம் நரகமாக இருக்கிறது என இறைவன் கூறியுள்ளான்.

இறைவன் மனிதனுக்கு செல்வம் கொடுத் திருப்பது அவன் தானும் அனுபவித்து பிறருக்கும் அனுபவிக்க கொடுப்பதற்கேயாம். அதைவிட்டு தானும் உண்ணாமல், பிறருக்கும் கொடுக்காமல் சேர்த்து வைத்து என்ன பயன்? ஆண்டவன் செல்வம் தந்திருக்கும் பொழுது, நீர் வறியவன் கோலத்தை ஏன்கொள்கிறீர்? உம் ஏழ்மைக் காட்சியைக் காணும் உம் நண்பர்களை ஏன் துக்கத்தில் ஆழ்த்துகிறீர். இவ்விதம் உலோபிகளைப் பார்த்து கேட்கிறார்கள் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள்.

கையில் இருக்கும் பணத்தை செலவு செய்யாத உலோபிக்கு அல்லாஹ்வின்மீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள். ஹஜ்ரத் (அலி) அவர்கள்.

உலோபியிடம் ஒளிமிக்கசூரியன் அகப்பட்டாலும் தன் பெட்டிக்குள் வைத்து பூட்டிவிடுவான். மக்கள் சூரிய ஒளியையே காண முடியாது என்கிறார்கள். இமாம் ஸஅதீ (ரஹ்) அவர்கள்.

மனிதனை தாக்குவதற்கு ஷைத்தான் பயன்படுத்தும் ஆயுதங்களில் உலோபித்தனம் என்பது பிரபல்யமானதாகும் என ஸுஃப்யானுஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகிறார்கள்.



எனவே ஈயாத உலோபிகளைப்பற்றி உத்தமர்கள் சொன்ன உன்னத உரைகளைக் கொண்டே ஈகையின் பெருமையை நாம் ஓரளவு உணரலாம். பெற்றுக்கொள்பவனின் தேவையைப் பற்றிக் கேட்காமல் தர்மம் செய்வதே சிறப்பாகும் என்கிறது அரேபியப் பழமொழி ஒன்று. ஈகையைக் கொண்டுதான் மனிதகுலம் வளர்கிறது. எனவே தர்மம் செய்வதால் தாரணியை வெல்பவனாய் இரு. அன்பு, அறம் (தர்மம்) என்ற அரசுக்கு நீயே அரசனாய் இரு. தர்மம் பாவக் கலவையை ஆராய்ந்து பார்க்கும் உரைகல். தர்மம், எல்லாப் பிணிகளுக்கும் ஏற்ற அரிய மருந்து. என்று தர்மத்தின் ஆற்றலை ஏற்றிப்போற்றுகிறார்கள் அறிஞர் இமாம் ஸஅதி (ரஹ்) அவர்கள். வறியவனின் கடும் பசியை தீர்க்கவேண்டும். அதுவே ஒருவன் தனக்கு பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் செல்வமா (நன்மை)கும்.

சரி....இனி தர்மத்தின் திறம்பற்றி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதைக் கவனிப்போம்.

இரகசியமாகத் தர்மம் செய்வதானது இறைவனது கோபத்தைத் தட்டிவிடும். நரகத்தைவிட்டும் பாதுகாக்கும்.

**-அல்ஹதீஸ்**

தர்மமானது எழுபது வகையான பிணிகளை நீக்கிவிடும்.

**-அல்ஹதீஸ்**

மூமின்களின் தர்மமானது உலக ஆபத்துக்களையும் கப்ருடைய அமளிகளையும் கியாமத் நாளுடைய வேதனைகளையும் தட்டிவிடும்.

**-அல்ஹதீஸ்**

ஒரு சிறு பேரீத்தம் பழத்துண்டைக் கொண்டாகிலும் தர்மம் செய்யுங்கள். அதற்கும் உங்களால்

இயலவில்லையானால் நல்ல வார்த்தைகளைக் கூறியாகிலும் அனுப்பிவிடுங்கள். அதுவும் சிறந்த தர்மமேயாகும்.

-அல் ஹதீஸ்

எவர் யாசிப்போரை கடிந்து பேசிவிரட்டுகிறாரோ அவரை கியாமத்து நாளில் மலக்குகள் கடிந்து பேசி விரட்டுவார்கள்.

அல் ஹதீஸ்

தர்மம் செய்வதால் செல்வம் குறைந்துவிடாது.

பிற ஏழைக்கு செய்யும் தர்மம் ஒரு பங்கு நன்மை பெறும். ஆனால் தன் ஏழை உறவினருக்குச் செய்யும் தர்மம் இருமடங்கு நன்மை பெறும்.

ஒரு மனிதன் பூமியை உழுது விதைத்து அதிலிருந்து மற்ற உயிரினங்கள் உண்பதற்கு உதவியாக இருந்தானேயானால் அதுவும் ஒருவகை தர்மமாகும்.

-அல் ஹதீஸ்

ஒரு மனிதனுக்கு அவன் சவாரியின்போது குதிரை மீது ஏறுவதற்கு உதவி செய்வதும் தர்மமாகும். சுமை ஏற்ற உதவுவதும் ஒருவகை தர்மமே.

உங்கள் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தர்மம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

-அல் ஹதீஸ்

இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் (பகிரங்கப்படுத்தாமல்) கொடுக்கும் தர்மமே சிறந்த தர்மமாகும்.

-அல் ஹதீஸ்

கடன் பட்டிருப்போரும், குழந்தைகளையுடையோரும் என்னிடம் வரட்டும். நான் அவர்களின் கடன்



களை நீக்கி அவர்களின் குழந்தைகளோடு நட்புரிமை பாராட்டுவேன்.

-அல் ஹதீஸ்

ஒருவனுக்கு தர்மம் செய்வதற்கு வகையில்லையென்றால் உடலால் உழைத்து தனக்கும் பிறருக்கும் நல்லது செய்யலாம். இதற்கும் உடலில் வலுவில்லையெனில் கொடுமைப்படுத்தப் பட்டவனுக்கு உதவி செய்யலாம், இதுவும் தர்மம் தான். இதுவும் சாத்தியமில்லையெனில், நன்மையானவற்றை செய்யும்படி மக்களை ஏவலாம். இதுவும் தர்மமே. இதற்கும் முடியாவிடில் தீமையை விட்டும் தற்காத்துக் கொள்ளுங்கள் இதுவும் தர்மமேயா-கும். இறைவழியில் (அதாவது ஜிஹாத் என்னும் புனித போருக்காக) செலவு செய்யப்படும் ஒரு தீனார், (தங்கக் காசு) ஒரு அடிமையை விடுவிப்பதற்காக செலவு செய்யப்படும் ஒரு தீனார், தன் ஏழை உறவினருக்காக செலவு செய்யப்படும் ஒரு தீனார், இம்மூன்றிலும் தன் ஏழை உறவினருக்காக செய்யப்படும் ஒரு தீனாரே இறைவனிடம் மிகப்பெரும் பயனுடைய தர்மமாகும்.

-அல் ஹதீஸ்

நல்லுதவி செய்யும் எண்ணத்தோடு செய்யும் தர்மமே மேன்மையானது. அத்தகைய தர்மமானது உங்களின் ஏழை உறவினர்களுக்கு கொடுப்பதிலிருந்து ஆரம்பமாகட்டும்.

-அல் ஹதீஸ்

ஒரு மனிதன் இறக்கும் தருவாயில் நூறு திர்ஹங்கள் (வெள்ளிக் காசுகள்) தர்மம் செய்வதைவிட, அவர் வாழ் நாளில் ஒரு வெள்ளிக்காசு தர்மம் செய்வது மிகச் சிறப்பானதாகும்.

தூய்மையற்ற வணக்கத்தை இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். அதுபோல தீய வழிகளில் சம்பாதிக்

கப்பட்ட பொருள்களால் செய்யப்படும் தர்மத்தையும் இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

-அல் ஹதீஸ்

உன் சகோதரனின் முகத்தை நோக்கி, நீ புன்னகை பூப்பதும் ஒரு தர்மமேயாகும். நடைபாதைகளில் கிடக்கும் கல், முள், எலும்பு போன்ற இடர் தரும் பொருள்களை அகற்றுவதும் தர்மம்தான். உன் வாளியிலிருந்து உன் சகோதரன் வாளிக்கு நீர் நிரப்புவதும் தர்மமேயாகும்.

-அல் ஹதீஸ்

அல்லாஹ்வின் திருத்தூதர் அளித்த அறிவுரைகளால் அறத்தின் ஆற்றலை அறிந்து கொண்டோம். இனி தர்மம் செய்வது இறைவனிடம் எந்த அளவு உயர்வு பெறுகிறது என்பதை ஓரிரு நிகழ்ச்சிகள் வாயிலாக உங்களுக்கு எடுத்துக் காட்டவிரும்புகிறேன்.

இஸ்லாமிய சரித்திரம் அறிந்த நீங்கள் பிர்ஔனைப் பற்றியும் தெரிந்திருக்கலாம். பிர்ஔன் என்பவன் முற்றிலும் இறைவனுக்கு மாறுபட்டவன். அவன் மூஸா (அலை) அவர்களுக்கு வழிப்படாததோடல்லாமல் தன்னை இறைவன் என்றும் மக்களிடம் விமர்சித்துக் கொண்டிருந்தான். அத்தோடு நபி மூஸா (அலை) அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த மக்களுக்கும் சொல்லொணாத் துன்பமும் கொடுத்துக் கொண்டிருந்தான். மேலும் மேலும் அவன் தொல்லைகள் மிகைக்கவே அவனை அழித்துவிடும்படி இறைவனிடம் மூஸா (அலை) அவர்கள் பிராத்தனை புரிந்தார்கள். இறைத் தூதர்களான நபிமார்களின் இறைஞ்சுதலை இறைவன் உடன் ஏற்றுக் கொள்வான். அப்படி இருந்தும் மூஸா (அலை) அவர்கள் கேட்டபடி பிர்ஔன் அழிக்கப்படாமல் இருந்தான். இதைக்கண்ட மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம் "இறைவா! நபி மார்களின் பிரார்த்த



னையை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்திருக்கிறாயே! அதன்படி பிர்ஔன் அழிக்கப்படாமல் இருக்கிறானே! இதன் இரகசியம் என்னவோ?" என வினவினார்கள்.

அதற்கு இறைவன் "ஓ...! மூஸாவே நான் நபிமார்களின் பிரார்த்தனையை உடன் ஏற்றுக் கொள்வேன் என்று வாக்களித்திருப்பதும் உண்மையே. பிர்ஔன் ஒருசில நற்கருமங்கள் புரிந்து வருகிறான். அதனால் அவன் அழிக் கப்படாமல் தாமதப்படுத் தப்பட்டிருக்கிறான் என்றுரைத்தான்.

இதைக்கேட்ட மூஸா (அலை) அவர்கள் திடுக்கிட்டு "இறைவா! அவனிடத்திலுமா நற்கருமங்கள் நிகழ்கின்றன! அவைகளை அடியேனுக்கும் அறிவித்தருள்வாயாக!" என இறைவனிடம் மூஸா (அலை) மன்றாடினார்கள். அப்போது இறைவன் "ஓ....மூஸாவே! அவன்தன் ஆட்சியில் ஏழை அனாதைகளுக்கு மடங்கள் கட்டிவைத்து அவர்களை நிம்மதியாகத் தங்கி இருக்கச் செய்கிறான். இன்னும் அவனது ஆட்சியில் பசித்தவர்களை பராமரிக்க மடங்களில் அன்ன தானங்கள் வழங்க அனேக ஏற்பாடுகளை செய்து வருகிறான். இதனால் அவனது ஆட்சியில் பசித்த வரையே பார்க்க முடிவதில்லை. உண்ண உணவின்றி அலையும் அவ்வறியவர்கள் அம்மடங்களுக்குச் சென்று வயிறார உண்டு களித்து அவனை அகங்குளிர வாழ்த்தி விட்டு அவனுக்காக என்னிடம் பிராத்தனை செய்து விட்டு செல்கின்றனர்.

அவன் இந்த தர்ம செயல்களையெல்லாம், இறைவனின் நன்மையை நாடிச் செய்யவில்லை. இப்படியெல்லாம் செய்வதால் தம்மை மக்களெல்லாம் புகழ்வார்கள். ஏற்றிப் போற்றுவார்கள் என்றெண்ணியே செய்கிறான். என்றாலும் அவனின் அத்தர்ம செயல்களால் வறியவர்கள் நிறைவு பெறுகிறார்கள் என்ற ஒரே காரணத்தால் தான் அவன் அழிக்கப்படாமல் தாமதப்படுத்தப்பட்டிருக்